

KALKI 3.6.84
ரூ.1.50
கல்கி
கலைஞர்:
அறுபது!

இப்படி கூல்டிரிங்க் குடித்தால்
எப்படி கட்டுப்படி ஆகும்?



எல்லாம் உள்பட ஒரு கிளாசுக்கு
0.30 பைசாவில் சுவைமிகு வின்-ஃபன்
நீங்கள் சுலபமாகத் தயாரிக்கலாம் !

வெயில் வருட்டும் போது கூல் டிரிங்க் அதிகம் செலவாகத்தானே ஆகிறது...! ஆனால் செலவு அதிகம் வைக்காத வின் -ஃபன் குளிர் பான மிக்ஸ் இதோ. பவுடரும், சிரப்புமாக நன்கு பாக் செய்யப்பட்டு வரும் வின்-ஃபன். 'கூடாது' என்று சொல்ல மனம் வராத உங்களைப் போன்ற குடும்பத் தலைவிகளுக்கு.

- ஒரு பாக்கெட் வின்-ஃபன் 25க்கும் மேற்பட்ட கிளாசுகள் வழங்குகிறது.
- 5 தாகம் தீர்க்கும் சுவைகள் : ஆரஞ்சு, லெமன், ஸ்ட்ராபெர்ரி, பைன் ஆப்பிள், கோலா.
- தண்ணீரும், சர்க்கரையும் கலந்து நிமிடங்களில் தயாரிக்கலாம்... எவருக்குமே சுலபமானது.
- சர்க்கரை அதிகம் இழுக்காது.

எத்தனை முறை வேண்டுமானாலும் குடிக்கக் கூடிய
வின்-ஃபன்னை ஒரு முறை குடித்துப் பாருங்கள்.

தென்னிந்திய விநியோகஸ்தர்கள் :
சேஷாத்ரி அசோஸியேட்ஸ்
P. O. Box No. 4976
சென்னை 600 017.

Vin-Fun
Soft Drink Concentrate
-the best drink under the sun !

துணிவு காட்டிய துண்டுப் படங்கள்

இவ்வாண்டு திரைப்பட விழாவில் துண்டுப் படங்கள் கமிட்டியின் தலைவரான **திரு. எஸ். கிருஷ்ணசாமியைச்** சந்தித்தேன். அவர் கூறிய சில ரசமான தகவல்கள்:

● கடந்த முப்பத்தோரு ஆண்டுகளில் இந்த ஆண்டில் மட்டும்தான் முழு நீளப் படத்தின் தலைவரையும் (பாலசந்தர்) துண்டுப் படங்கள் தலைவரையும் தமிழகத்திலிருந்தே தேர்ந்தெடுத்து உள்ளனர். இது தனி கௌரவம்.

● முழு நீளப் படங்களுக்கு மொத்தம் முப்பத்தி மூன்று விருதுகள் உள்ளன. இதில் தேசிய அளவில் மொத்தமாகப் பத்தொன்பது விருதுகள்; தவிர பதினான்கு விருதுகள் அந்த மாநில மொழிப் படங்களுக்கு. ஆனால் துண்டுப் படங்களுக்கு அளிக்கப்படுபவையோ மொத்தம் எட்டே விருதுகள்தான். இவை எல்லாமே தேசிய அளவில்.

● இவற்றுள் இந்த ஆண்டு ஏழு விருதுகள்தான் அளிக்கப்படுகின்றன. காரணம் 'குடும்ப நலம்' என்ற தலைப்பின் கீழ் இடம் பெற்ற துண்டுப் படங்கள் வரிசையில் எந்தப் படத்தையும் பரிசுக்குரியதென்று தேர்வு செய்ய முடியவில்லை. குடும்பக்கட்டுப்பாடுபிரசாரத்தை மையமாக வைத்து எடுக்கப்படும் படங்கள் இவை. மிக முக்கியமான பிரசாரப் பிரிவான போதிலும் இதில் எதுவுமே தேராதது. வருத்தத்திற்குரியது. கொஞ்சம் கூடக் கற்பனைத் திறனின்றி மட்டமாக இருந்தன பல. உதாரணமாக ஆந்திராவிலிருந்து வந்த படம். எங்கெல்லாம் கணவனும் மனைவியும் தனிமையில் இருக்கிறார்களோ அங்கெல்லாம் ஒரு மர்ம சாமியார் திடீரென்று அவதரிக்கிறார். அவர்களிடம் நிரோத் டப்பாவைக் காட்டுகிறார்; பின்பு மறைகிறார். இம்மாதிரிப் படங்களைப் பார்க்க நேர்வது துர்ப்பாக்கியம்தான்.

● சிறந்த செய்திப் பட ஒளிப் பதிவாளராகச் சென்னையைச் சேர்ந்த திரு ரமணிக்கு விருது வழங்கப்படுகிறது. ஸ்ரீஹரிக் கோட்டாவிலிருந்து சமீபத்தில் பறக்க விடப்பட்ட எஸ். எல். வி. –3 ராக்கெட் பற்றிய அவரது படத்திற்காக இப்பரிசு.

● இந்த ஆண்டில் ஒரு முக்கிய திருப்பம். மத்திய



✕ திரு. எஸ். கிருஷ்ணசாமி

அரசையும் அவர்களின் திட்டங்களையும் கிண்டல் செய்து எடுக்கப் பட்ட படங்கள் அதிக அளவில் விருதுகள் பெற்றன.

● திருப்பம் நெ. 2: முப்பது வருடங்களாக மத்திய அரசின் பிலிம் டிவிஷன் தட்டிப் போகும் ''சிறந்த செய்திப் படம்'' பரிசு இந்த ஆண்டு பூனாவைச் சேர்ந்த திரைப் படக் கல்லூரி மாணவி குமாரி உமா சேகலுக்கு அளிக்கப்பட்டது. அப்படி என்னஅதில் சிறப்பு? ''அடைக்கலம்'' என்ற தலைப்பிலான அந்தப் படம் பம்பாயில் சாலையோரத்திலும் சேரிகளிலும் வசிப்பவர்களின் மேல் போலீசார் நடத்தும் அட்டூழியங்களை அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டியது.

● சிறந்த தகவல் படம் (Informative Film) என்ற தலைப்பின் கீழ் ''அணி வகுப்பு'' என்ற படம் தேர்வு செய்யப் பட்டது. வசனம் ஏதும் இல்லாமல் இருபது நிமிடங்கள் ஓடும் மௌனப் படம் இது. ஒரு அரசியல் கூட்டத்தில் பங்கேற்கக்கிராமத்திலிருந்து சிவப்புக் கொடிகளுடன் ஒரு கூட்டம் போகிறது. வேறு ஒரு அரசியல் கட்சி இந்தக் கும்பலை விலைக்கு வாங்க, அதே மக்கள் நீலக் கொடிகளுடன் ஊர் திரும்புகிறார்கள்!

● கேரளாவும் கர்நாடகாவும் நிறையவே படங்களை அனுப்பின. தமிழ் நாட்டிலிருந்து ரொம்பவும் குறைந்த அளவில்தான் படங்கள் வந்தன. ஆந்திராவிலிருந்து நிறையப் படங்கள் வந்த போதிலும் எந்த விருதும் பெறவில்லை.

பேட்டி: **சிக்கி**

ராஜஸ்தானில் ஆபு மலையின் மீது அமைந்திருக்கும் 'தில்வாரா' என்னும் சலவைக்கல் கோயில்கள் உலகப் புகழ் பெற்றவை. இதை நிர்மாணித்த சிற்பிகளுக்கு, ஒவ்வொரு நாளும் அவர்கள் செதுக்கிய சிற்பங்களிலிருந்துவிழும் சலவைக் கல் தூளின் எடைக்கு எடை தங்கமாகக் கூலி கொடுக்கப் பட்டதாம்! – ஜா. ரவி



✕ வெற்றிமாலை

மணிவிழா வாழ்த்து

கலைஞர் அறுபது

1. கருணாநிதியின் பெற்றோர் கடவுள் பக்தி மிக்கவர்கள். திருவாரூர் தட்சிணாமூர்த்தி மடத்தில் உள்ள இறைவனின் பெயரையே தம் மகனுக்குச் சூட்டினர்.

2. தந்தை முத்துவேலருக்கு முதல் மனைவி குஞ்சம்மாள். அவர் மறைவுக்குப் பின், வேதம்மாளை மணந்து கொண்டார். துரதிர்ஷ்டவசமாய் இவரும் மறைந்து விடவே மூன்றாவதாய் அஞ்சுகம் அம்மாளை மணந்து கொண்டார். அஞ்சுகம் அம்மாளின் ஒரே மகன் கருணாநிதி. இரண்டு மூத்த சகோதரிகள்.

3. தஞ்சாவூர் மாவட்டம் திருவாரூர்ப் பகுதியில் 'திருக்குவளை' என்ற கிராமமே கலைஞரின் பிறந்த ஊர். தேதி 1924–ம் வருடம் ஜூன் 3, செவ்வாய்க்கிழமை.

4. திண்ணைப் பள்ளிக்குக் கருணாநிதியை அனுப்பி வைத்தனர். அத்துடன் இசை கற்பிக்கவும் ஏற்பாடு செய்தனர். ஆனால் இசை கற்கப் போன இடத்தில், சட்டை அணியக் கூடாது. செருப்பணியக் கூடாது. கைகட்டி மரியாதை செய்ய வேண்டும் என்றெல்லாம் கடுமையான விதிமுறைகள் இருந்ததால், அவை பிடிக்காமல், இசைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

5. திருவாரூர் உயர்நிலைப் பள்ளியில் படிக்கும் போது நடத்திய கையெழுத்துப் பத்திரிக்கை ''மாணவர் முரசு'' அப்போது கலைஞரின் புனைபெயர் 'சேரன்.'

6. மாணவர் மாநாடு ஒன்றுக்காக, குடந்தைக்கு வந்திருந்தனர் அன்பழகனும், மதியழகனும் (1941–ல்). வந்தவர்களுக்கு வழிச்செலவுக்குத் தர கையில் பணமில்லை. நிலைமையைச் சமாளிக்க கருணாநிதி ஒருவருக்கும் தெரியாமல், வீட்டிலிருந்து தங்கச் சங்கிலியை எடுத்துக் கொண்டு போய், செட்டியார் கடையில் அடகு வைத்து, பணம் வாங்கிச் சமாளித்தார். வீட்டில் சங்கிலி காணாமல் போனது தெரிந்ததும் ஏகக் கலாட்டா. கருணாநிதியோ மூச்சுவிடவில்லை.

7. 1944 செப்டம்பர் 13–ம் தேதி கருணாநிதிக்கும், பத்மாவதிக்கும் திருமணம் திருவாரூரில். திருமணத்துக்கு நாவலர் வந்திருந்தார். மணம் முடிந்த மறுவாரமே, கட்சிப் பணிக்காக 10 நாள் சுற்றுப் பயணம் கிளம்பி விட்டார்.

✕ அரங்கண்ணல் - கலைஞர் - சிவாஜி



✕ போப் ஆண்டவருடன் கலைஞர் தம்பதி





✗ காகிதப்பூ நாடகத்தில் கலைஞர்

8. பெரியாரின் 'குடியரசு' பத்திரிகை அலுவலகத்தில் துணை ஆசிரியராக கருணாநிதி பணியாற்றியபோது, அவருக்குச் சம்பளம் ரூ. 40. இரவு, பகல் சாப்பாட்டுக்காக 20 ரூபாய் பிடித்துக் கொண்டு, மீதி 20 ரூபாய் தருவார்கள். இதில் தன் செலவுக்கு 15 ரூபாயை வைத்துக்கொண்டு, மீதியை ஊரிலுள்ள மனைவிக்கு அனுப்புவார் கருணாநிதி.

9. 'ராஜகுமாரி' படத்துக்கு வசனம் எழுத அழைப்பு வந்த போது, பெரியார், ''போய் வா!'' என்றார். படத்தின் கதாநாயகனை அறிமுகப்படுத்தி வைத்தனர். அவர் காங்கிரஸில் இருந்தார். அவர்தான் எம். ஜி. ஆர்.

10. புராணப்படமான அபிமன்யுவிற்கு வசனம் கருணாநிதி. படம் பார்க்கத் தியேட்டருக்கு, மனைவி, நண்பர்கள் சகிதம் சென்ற போது, டைட்டிலில் கலைஞரின் பெயர் இல்லை. பட அதிபர் இதற்குச் சொன்ன காரணம், ''கொஞ்சம் பொறு. உன் பெயர் பிரபலமானதும் போடு றேன்!''

11. மனைவி பத்மாவதி, 'முத்து'வைப் பெற்றெடுத்த சில நாட்களிலேயே இறந்து போனார்.

12. கருணாநிதிக்கு மறுமணம் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, பலரும், ''மாப்பிள்ளை சினிமாக்காரராம்!'' ''மாப்பிள்ளை கட்சி, கட்சி என்று அலைவாராம்! வீட்டைக் கவனிக்க மாட்டாராம்!'' என்றெல்லாம் சொல்லி, பெண்தர முன்வரவில்லை. கருணாநிதியை மணக்க முன்வந்தார் 'தயாளு.'

13. கருணாநிதி – தயாளு திருமணத்தின் போது, மாப்பிள்ளையைக் காணோம். உள்ளூரிலேயே இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் போய் விட்டார். மறியல் முடிந்ததும், நேரே மணமேடைக்கு வந்தார்.



✗ 'அண்ணாவுக்குப்பின் யார்?' என்ற கேள்வி எழுந்தபோது ''சந்தேகத்துக் கிடமின்றி கலைஞரே'' என்று அழுத்தம் திருத்தமாகத் தம் கருத்தைக் கூறியவர் ராஜாஜி



✗ புதல்வர்கள் மருமகள்களுடன்



✗ பெற்றோருடன் கருணாநிதி

14. முதன்முதலில் தேர்தல் களத்தில் குதித்தபோது கருணாநிதிக்கு வயது 31. தொகுதி— குளித்தலை (திருச்சி மாவட்டம்). பதிவான ஓட்டுக்கள் 48,000—ல் 23,000 கருணாநிதிக்கு. ஒரு கிராமத்து வாக்குச் சாவடியில், பதிவான அத்தனை ஓட்டுக்களும் உதயசூரியனுக்கே.

15. மிகுந்த நஷ்டத்தை அனுபவித்துக் கொண்டிருந்த சமயத்தில், எம். ஆர். ராதாவுக்குக் கருணாநிதி எழுதித் தந்த நாடகமே 'தூக்கு மேடை'. அதில் கருணாநிதி 'பாண்டியன்' பாத்திரமேற்று நடித்தும் இருக்கிறார். அந்த சமயத்தில், கருணாநிதிக்கு எம். ஆர். ராதா அளித்த பட்டம் தான் ''கலைஞர்.''

16. பல்லவன் பஸ்களில், வள்ளுவர் படமும், திருக்குறளும் வைப்பதற்கு வித்திட்டவர் கலைஞரே.

17. கலைஞர், வைத்துக் கொண்ட புனை பெயர்கள் சேரன், மருது, விமானி.

18. தேர்தல் பிரச்சாரத்துக்காக கலைஞர் எழுதியவை: உதயசூரியன், வாழ முடியாதவர்கள், பரப்பிரம்மம், தூக்குமேடை, காகிதப்பூ.

19. 'அவன் பித்தனா?' படத்தில் ஒரு உருக்கமான காட்சிக்குப் பாடல் ஒன்று தேவைப்பட்டது. இசையமைப்பாளர் ராமமூர்த்தியின் இசைக்குப் பலரும் எழுதிய பாடல்கள் திருப்தியாய் இல்லை. விஷயம் கலைஞருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஃபோனிலேயே மெட்டைக் கேட்டுக் கொண்டார். அரை மணியில் பாடல் ரெடி. அந்தப் பாட்டுதான், ''காகித ஓடம்; கடலலை மீது...''

20. 1953 வரை கருணாநிதி செயின் ஸ்மோக்கர். ஆனால் அதன்பின் தன் தாயின் வேண்டுகோளின்படி, சிகரெட் பிடிப்பதை அறவே நிறுத்தி விட்டார்.

21. கல்லக்குடி போராட்டத்தின் போது கருணாநிதி மீசை வைத்திருக்கவில்லை. அந்தப் போராட்டத்தின் போது, சிறை சென்று வந்தது முதல் தான் மீசை வைத்துக் கொண்டிருக்கிறார்.

22. மேடைப் பேச்சின்போது, உவமைகள் சொல்வதில் கலைஞருக்கு நிகர் அவரே. பாலையும், நீரையும் கலந்து தந்தால், பாலை மட்டும் பருகும் அன்னம் போல என்று வழக்கமான உவமையை கலைஞர் ஒரு போதும் சொல்லாமல், சர்க்கரையும், மண்ணும் கலந்த கலவையிலிருந்து சர்க்கரையை மட்டும் பிரித்து எடுத்துச் செல்லும் எறும்பை உவமை சொல்வார்.

23. ஒருமுறை, சென்னை மருத்துவக் கல்லூரி முத்தமிழ் விழாவில், கலைஞர் தலைமையில் கவியரங்கம், கவியரங்கிற்கு நிலா, தென்றல், ஊரார் என்ற தலைப்புக்களில் கவி பாட வேண்டியவர்கள் வரவில்லை. தலைமை வகித்த கலைஞர் நகைச்சுவையுடன் சொன்னார்: ''கவியரங்கம், பகலில் நடப்பதால் நிலா வரவில்லை; ஏ. சி. அரங்கத்தில் நடப்பதால் தென்றல் வரவில்லை; மாணவர் நடத்தும் விழாவானதால் ஊரார் வரவில்லை.''

24. கொழுப்புச் சத்துள்ள உணவுகளைத் தொட மாட்டார்; கறி, மீன் குழம்பு கலைஞருக்குப் பிடிக்காதாம். பச்சரிசி சாதம் தான். குழைய வடிக்க வேண்டும். ரசமும், ஊறுகாயும் அவசியம் இருக்கவேண்டும்.

25. கருப்பு — சிவப்புக் கரை போட்ட வேட்டி — துண்டுதான் அணிவார். தி.மு.க. மந்திரிசபையில் இடம் பெறும் வரை காலர் இல்லாத சட்டை (ஜிப்பா) அணிவார். அதன்பின் தான் காலர் வைத்த சட்டை அணிய ஆரம்பித்தார்.

26. மேஜை மீது வைத்துக் கொண்டு, நாற்காலியில் உட்கார்ந்து எழுதுகிற பழக்கம் கிடையாது. கட்டிலில் உட்கார்ந்து, மடியில் வைத்துக் கொண்டுதான் எழுதுவார்.

27. விலையுயர்ந்த பேனாக்களைப் பயன்படுத்த மாட்டார். பட்டையடிக்கும் சாதாரணப் பேனாக்கள்தான். பச்சை, சிவப்பு இங்க் பிடிக்காது. எப்போதும் கருப்பு இங்க்தான்.

28. பழந்தமிழிலக்கியங்களில் மிகவும் பிடித்தது 'புறநானூறு'. பிடித்த இதிகாசம் 'மகாபாரதம்.'

29. ஒரு முறை காங்கிரஸ் தலைவர் ஒருவர், ''தி. மு. க. வுக்கு வடக்கிலிருந்து பணம் வருகிறது'' என்று குற்றம் சாட்டின போது, கலைஞரின் பதில், ''ஆமாம்! எங்களுக்கு வருவது வடக்கே — நாசிக்கில் அச்சிட்ட நல்ல நோட்டுக்கள். ஆனால் உங்களுக்கு வருவது, உள்ளூரில் அச்சிட்ட கள்ள நோட்டுக்கள்தானே!''

30. முன்பெல்லாம், கலைஞரை எம். கருணாநிதி என்றுதான் ஆல் இண்டியா ரேடியோ செய்திகளில் குறிப்பிடுவார்கள். (தமிழ் செய்திகளில்) ஒருமுறை கலைஞரே போன் செய்து, ''நான் மு. கருணாநிதி. அப்படியே குறிப்பிடுங்கள்'' என்று சொல்லியதன்பின், ''மு. கருணாநிதி'' என்று குறிப்பிட ஆரம்பித்தார்கள்.

31. பேச்சிலும் சரி, எழுத்திலும் சரி, நிறைய திருக்குறள்களைப் பயன்படுத்துவார் கலைஞர்.

32. முரசொலி அலுவலகத்தில் கலைஞருக்கென்த் தனியறை உண்டு. எப்போதாவது வரும்போதுதான் அந்த அறையைப் பயன்படுத்துவார். பொதுவாக மற்றவர்கள் யாரும் அந்த அறைக்குள் போக மாட்டார்கள்.

ஹிந்தி பேசிப் பழகுங்கள்



Big Size
Pages : 266
Price : Rs. 20/-
Postage Free

தமிழ்-ஹிந்தி லர்னிங் கோர்ஸ்

இதோ, அதற்கான வழி—

- தமிழ் வழி நொடிப்பொழுதில் ஹிந்தி கற்க அற்புதமான உத்திகள்.
- அன்றாடத் தேவைகளை ஹிந்தியிலேயே பேசி நிறைவேற்ற அவசியமான ஹிந்தி மொழியறிவு தரும் 2,500 'தமிழ்-ஹிந்தி' வாக்கியங்கள்.
- ஹிந்தி வாக்கியங்கள்/சொற்றொடர்களின் உச்சரிப்பைத் 'தமிழி'ல் கொடுத்துள்ளது.
- ஹிந்தி மொழி வழங்கும் மாநிலத்துக்கு இட-மாற்றம் பெறும் நிலையிலுள்ள அலுவலர்க்கும், ஹிந்தி பேசும் நகரங்களில் வர்த்தக நிறுவனங்கள் நடத்துவோர்க்கும் அத்தியாவசியமானது. விற்பனையாளருக்கோ உற்றதுணையானது.

போலிப் பெயர்களைக் கண்டு ஏமாறாதீர்கள். "ரேபிடெக்ஸ் கோர்ஸ்" என்றே கேட்டு வாங்குங்கள்.


வகுப்புகளில் சேராமலேயே, ஆசிரியர் உதவியை நாடாமலேயே, ஆங்கிலத்திலும் ஹிந்தியிலும் நீங்கள் தடையின்றிப் பேசலாம், கடிதங்கள் வரையலாம்.

'ரேபிடெக்ஸ்' என்பது தில்லி புஸ்தக் மஹாலால் பதிவுசெய்யப்பட்ட "டிரேட் மார்க்" ஆகும்.

திருப்தி இன்றேல் பணம் திருப்பித் தரப்படும்

AVAILABLE AT: Leading bookshops, Railway Book Stalls Higginbotham's or ask by V. P. P. from

PUSTAK MAHAL
Khari Baoli, Delhi-110006
10-B, Netaji Subhash Marg, New Delhi-110002


வைட்டமின்கள்
தெம்பும்
உடல்
ஆரோக்கியமும்
பெற
சில துளிகளே
தேவை

33. நிகழ்காலம்
ஒரு
தமிழ் அகராதியைத்
தயாரித்திருக்கிறது.
அதில்
'கலைஞர்' என்ற சொல்லுக்கு
நாலுகோடி
தமிழர்களின்
நம்பிக்கை
என்று
அழகாகவல்லவா
அர்த்தம் போட்டிருக்கிறது!

—கவிஞர் வைரமுத்து, கலைஞரைப் பற்றி எழுதிய கவிதையின் சில வரிகள்.

34. கலைஞர் தம் அறையில் உட்கார்ந்து, எழுத ஆரம்பித்து விட்டால், அதை முடிக்காமல், எழுந்திருக்க மாட்டார். இடையில் யாரும் அவரைத் தொந்தரவு செய்யக் கூடாது. அடித்தல் திருத்தலில்லாமல் அழகாக எழுதுவார்.

35. கலைஞர் வீட்டு முன் பகுதியில் நிரந்தரக் கீற்றுப் பந்தல் உண்டு. வராண்டாவில் சுவர் முழுக்கப் பாராட்டிதழ்கள், புகைப்படங்கள். அங்கே சென்னை வள்ளுவர் கோட்டத்தின் மாதிரி அமைப்பும் வைக்கப் பட்டுள்ளது..

36. இதுவரையில் கலைஞர் குறளோவியம் எழுதியுள்ள பத்திரிகைகள், முரசொலி, முத்தாரம், தினமணிக்கதிர், குங்குமம்.

37. தினசரி இரவு 8 மணியிலிருந்து ஒன்பது மணிக்குள், முரசொலி அலுவலகத்தில் உள்ளவர்கள் கலைஞர் தொலைபேசியை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். மறுநாள் என்ன செய்தி வரப்போகிறது போன்ற விஷயங்களை விசாரிப்பது மட்டுமல்லாமல் சிலசமயம் தலைப்புக்களையும் கலைஞரே தருவதுண்டு.

38. இரவு எத்தனை மணிக்குத் தூங்கப் போனாலும், சரியாக ஐந்தரை மணியளவில் எழுந்து விடுவார்.

39. இரவுப் பொதுக் கூட்டங்களுக்குப் போகு முன்னர் ஹார்லிக்ஸ் அல்லது வேறு ஏதாவது சூடான பானங்களை குடித்து விட்டுப் போவார். இரவு பொதுக் கூட்டம் முடிந்து வந்தவுடன் 'லைட்டாக' சிற்றுண்டி சாப்பிட்டு விட்டுப் படுத்துக் கொள்வார்.

40. கலைஞரிடம் இருக்கும் மற்றொரு நல்ல பழக்கம் வெளியூர்களுக்குச் செல்லும் போது பேரன் பேத்திகளுக்கு முத்தங்கள் கொடுத்து வீட்டிலுள்ள எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு போவது.

41. கலைஞரின் நகைச்சுவை உணர்வு நாடறிந்தது. ஒருமுறை சட்டமன்றத்தில் காங்கிரஸ் உறுப்பினராய் இருந்த தேனி தியாகராஜன் ''நிதிநிலை அறிக்கை சர்க்கரைப் பொங்கல் மாதிரி இருக்கிறது'' என்றார். உடனே கலைஞர் குறுக்கிட்டு,

,,நாங்களெல்லாம் நிதிநிலை அறிக்கையைப் படித்துத்தான் பார்த்தோம்; கனம் உறுப்பினர் சாப்பிட்டுக் கூடப் பார்த்து விட்டார் போலிருக்கிறது'' என்றவுடன் அவையில் குபீர் சிரிப்பு.

42. தாம் முரசொலியில் எழுதும் உடன் பிறப்புக்கான கடிதங்களை அச்சுக்குப் போகு முன் பிழை இருத்துவது அவரே தான். அதே போல் அவர் தொடர்கதைக்கான படங்களை முதலிலேயே பார்த்து ஓ. கே. செய்வார்.

43. 1962—ல் சென்னை மாநகராட்சியை தி. மு. க. பிடித்தது. அந்தத் தேர்தலில் பொறுப்பேற்று தி. மு. க. வுக்கு வெற்றி தேடித் தந்த கலைஞருக்கு அண்ணா தங்க மோதிரம் போட்டார். அப்போது அவர் கூறியது: ''என் மனைவிக்கு நகைகள் வாங்கக் கூட நான் கடை கடையாக ஏறி இறங்கியது கிடையாது. ஆனால் தம்பி கருணாநிதிக்காக கடை, கடையாக ஏறி, இறங்கி, இந்த மோதிரத்தை வாங்கி வந்தேன்.''

44. 1972—லிருந்தே கலைஞருக்கு வள்ளுவருக்கான நினைவுச் சின்னம் ஒன்றைக் கட்டுவது பற்றிய திட்டம் மனத்தில் இருந்தது. அதுவும் சென்னையில் தான் அது அமைய வேண்டுமென்று அவர் விரும்பினார். கடைசியாகக் கட்ட திட்டமிட்டபிறகு இடத்தைத் தேர்ந்தெடுத்தது மட்டுமில்லாமல், தன் கையினாலேயே வரைபடங்களைப் போட்டுத் தந்தார் கலைஞர். வள்ளுவர் கோட்டத்தைப் பொறுத்தவரை அதைக் கட்டுவதற்கு பொறியாளர்கள் இருந்தார்களே தவிர, கட்டிடக் கலை நிபுணர் (architect) கலைஞர்தான்.

45. அவசர நிலைக் காலத்தில் கலைஞரது ஆட்சி கலைக்கப்பட்டு, பிறகு, வள்ளுவர் கோட்டம் திறக்கப்பட்ட போது அடிக்கல்லை நீக்கியது மட்டுமல்லாமல், இவரை அழைத்த முறை வேறு சரியில்லை. இது வரையில் கலைஞர் மட்டுமல்ல; வள்ளுவர் கோட்ட பணியில் தம்மை இணைத்துக் கொண்ட பல அதிகாரிகளும் கோட்டத்திற்குள் சென்றதில்லை.

46. ஆட்சியைக் கலைத்த பின் சில நாட்கள் கலைஞர் வீட்டை விட்டு வெளியே வர முடியாத சூழ்நிலை இருந்தது. தி. மு. க. தலைவர்கள் பலர் சிறையிலிருந்த நேரம். வெளியில் இருந்தவர்களோ பேச பயப்பட்டுக் கொண்டிருந்தனர். மதுரைச் சிறையில் போலீஸ் அடக்கு முறை காரணமாக சாத்தூர் பாலகிருஷ்ணன் என்ற தொண்டர் மரணமடைந்ததாக போனில் கலைஞருக்குத் தகவல் வந்தது. ''நானே நேரில் வருகிறேன்; சவ ஊர்வலத்தில் கலந்து கொள்கிறேன்'' என்று கூறிவிட்டு, காரிலேயே கிளம்பி விட்டார். அவரது டிரைவர்கள் கூட பணியிலிருந்து விலகி விட்ட நேரம் அது. முன்னாள் அமைச்சர் கண்ணப்பன் காரை ஓட்ட வழியில் தங்க இடம் கூடக் கிடைக்காமல் சிரமப்பட்டு, அந்தத் தொண்டரின் சவ ஊர்வலத்தில் கலந்து கொண்டார்.

47. அவசர நிலைக்காலத்தில், பத்திரிகை தணிக்கை கடுமையாக இருந்தது. கலைஞர் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதங்கள் எல்லாம் கன்னாபின்னாவென்று சென்சார் செய்யப்பட்டன. இதனால் கோபமடைந்த கலைஞர் ஒருநாள் காலை அண்ணாசிலை அருகே உண்ணாவிரதம் இருக்கச் சென்று பொது மக்களுக்கு மத்திய அரசின் போக்கைக்கண்டித்து நோட்டீஸ்களை விநியோகிக்கத் தொடங்கினார். கைது செய்யப்பட்டு மாலையில் விடுதலை அடைந்தார்.

48. அவசர நிலை அறிவித்த போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தமது மந்திரி சபையைக் கலைத்து விட கலைஞர் முடிவு செய்தார். ஆனால் அவ்வாறு செய்ய வேண்டாம் என்றும், இந்தியாவிலேயே எதிர்க்கட்சி அரசு அவருடையது ஒன்றுதான் என்றும் கூறி அவரது முடிவை மாற்றிய ராஜதந்திரி: காமராஜர்.

49. ஆட்சியில் இருக்கும் போது பொதுக் கூட்டத்தில் தாம் அறிவித்த திட்டங்களைப் பற்றி சிறு குறிப்பு ஒன்றைக் கலைஞர் வைத்திருப்பார். என்னென்ன திட்டங்களை அறிவித்தோம்; அதற்குத் தமது அரசில் உள்ளவர்கள் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறார்கள் என்பதைக் கண்காணித்து வருவார். அடிக்கடி அந்தச் சீட்டை எடுத்துப் பார்த்து அதிகாரிகளைக் கேள்வி கேட்பார். சட்டைகள் பல மாறினாலும் அந்தச் சீட்டு மட்டும் கலைஞரிடம் இருந்து கொண்டே இருக்கும்.

50. சென்னையில் இருந்தால், சரியாகப் பத்து மணிக்குக் கோட்டையில் இருப்பார் முதல்வர் கருணாநிதி. கோப்புக்களைப் பார்க்கும்போது சந்தேகம் ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட செயலாளரை மட்டுமல்லாமல் குறிப்புக்களை எழுதியவர், அவருக்குக் கீழ் வேலை செய்பவரென்றாலும் கூப்பிட்டு விசாரிப்பார்.

51. மந்திரி சபைக் கூட்டம் மாதம் ஒரு முறை கண்டிப்பாக நடந்தே ஆகவேண்டும். அது சம்பந்தப்பட்ட முடிவுகளைத் தாமே பத்திரிகையாளர்களிடம் அறிவிப்பார். சம்பந்தப்பட்ட மந்திரிக்குத் தெரியாமல் அவரது துறையில் எந்த மாறுதல்களையும் செய்ய மாட்டார்.

52. கலைஞருக்குப் பிடிக்காத ஒரு விஷயம் தவறான புள்ளி விவரங்களைக் கொடுப்பது. 'பார்த்து எடுத்துத் தருகிறோம்' என்று சொல்லலாமே தவிர அவசரத்திற்கு ஏதாவது புள்ளி விவரங்களை அதிகாரிகள் தெரிவித்தால் மாட்டிக் கொள்ள வேண்டியது தான்.

53. முதலமைச்சராக இருந்த காலத்தில் டெல்லிக்குச் சென்றால் அங்கு பல்வேறு

துறைகளில் வேலை செய்யும் தமிழகத்தைச் சேர்ந்த அரசுச் செயலாளர்களை சந்திக்க விரும்புவார். அவர்களும் இவரைச் சந்திக்க வருவார்கள். இரமலை என்ற அதிகாரி மாநில அரசில் இருந்து விட்டு மத்திய அரசுக்குச் சென்றவர். காவிரி நீர் பிரச்சினையை பற்றி நன்கு தெரிந்து வைத்திருப்பவர். கலைஞர் காவிரி நீர் பிரச்சினைக்காக பேச்சு வார்த்தைக்கு டெல்லி சென்றால் இரமலையையும் கலந்து கொள்ளச் செய்வார்.

54. ரயிலில் பயணம் செய்வதையே மிகவும் விரும்புவார் கலைஞர். அப்போது தானே சக மந்திரிகளுடனும், கட்சித் தலைவர்களுடனும் பேசிக் கொண்டே செல்லலாம்.

55. ரயிலில் கோப்புக்களை பார்க்கும் வழக்கம் கலைஞருக்கு உண்டு. எழும்பூரிலிருந்து செல்லும் ரயில்களில் விழுப்புரம் வரையிலும், சென்ட்ரலிலிருந்து போகும் ரெயில்களில் காட்பாடி வரையிலும் கோப்புகளைப் பார்த்துக் கொண்டே பயணம் செய்வார். அந்த ரயில் நிலையங்கள் வந்தவுடன் கலைஞர் பார்த்த கோப்புக்களை எடுத்துக் கொண்டு அவரது உதவியாளர்கள் காரில் திரும்பி விடுவார்கள்.

56. நிதிநிலை அறிக்கை தயாரிக்கும் போது சில குறிப்புக்களை மட்டும் அதிகாரிகளிடம் பெற்றுக் கொண்டு, கொள்கை அளவில் உள்ள திட்டங்களைப் பற்றி தாமே கைப்பட எழுதித் தருவார்.

57. அவசர நிலையின் போது கலைஞர் ஆட்சி கலைக்கப்பட்டது. செய்தி முன்னமே அரசல்புரசலாகத் தெரிந்தாலும், எந்தவித சஞ்சலத்தையும் காட்டாமல் தாம் அன்று ஒப்புக் கொண்ட எல்லா நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

58. அரசின் செயல்பாடுகளைப் பற்றிய குற்றச்சாட்டுகள் பத்திரிகைகளில் வந்தால் அதைப்பற்றி உடனடியாக அதிகாரிகளிடத்தில் விசாரிப்பார். அதிகாரிகள் 'தப்பாக செய்தி போட்டிருக்கிறார்கள்' என்றால் ''நீங்க நல்லா பாருங்க; பத்திரிகையில தப்பாப் போட மாட்டாங்க'' என்பார்.


59. சட்டசபையில் எதிர்க்கட்சியினர் பேசும்போது அவரே குறிப்பெடுத்துக் கொள்வார். பிறகு பேச்சுக்கள் டைப் அடிக்கப்பட்டு வந்தவுடன் முக்கியமான பகுதிகளை அடிக்கோடிட்டு அவற்றுக்கான பதில்களை அவரே கைப்பட எழுதுவார்.


60. தேர்தல் பிரச்சாரத்துக்காக சில நாட்கள் வெளியூரில் தங்க வேண்டுமென்றால் சமைத்துப் போட மனைவியையும் சில போது அழைத்துப் போவதுண்டு.

தொகுப்பு: **ப்ரியன், மௌனி**

படங்கள்: **சுபா**

மேலட்டை வண்ணப்படம்: **யோகா**


பம்பாய் கலவரங்கள்
கலவரங்களை ஒடுக்கும் முயற்சி
முதல்வர்


அண்ணா நகர்
மயிலாப்பூர்
தோல்வி
தோல்வி
வ்·வ்·· ஆ··ஆ··


தமிழக அரசு சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றியும் பாட புத்தகத்தில் சேர்க்க வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார் — செய்தி
தொ·ப·செ·வின் பெயர் என்ன? பிறந்த தேதி என்ன?.. படிப்பு என்ன?.. நடிப்பு என்ன?
போதுங்க. சுதந்திரப் போராட்ட வீரர்களைப் பற்றியும் சொல்லிக் கொடுங்க...



கல்கி

1984 ஜூன் 3
மலர் : 42 இதழ் : 44
ரக்தாக்ஷி வைகாசி 21



முடிந்தது இடைத்தேர்தல்; வருகிறது பொதுத் தேர்தல்

வெற்றியை வெற்றி என்றும் தோல்விகளைத் தோல்வி என்றும் கண்ணியமாக ஏற்காமல் தோல்விகளைக் கூட வெற்றியாக்க முயலும் விதத்தில் கருப்பையா மூப்பனாரும் தமிழக முதல்வரும் பேசி இருக்கிறார்கள். 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற கதைதான்.

''இடைத்தேர்தல் முடிவுகள் அ. இ. மு. க. மீது மக்களுக்கு உள்ள நம்பிக்கையையே காட்டுகிறது'' என்ற முதல்வரின் வாதத்தை எப்படி ஏற்பது? எம். ஜி. ஆரின் சினிமா பிரபை, மதிய உணவுத் திட்டத்தைச் சொல்லி வோட்டு கேட்கிற தவறான போக்கு, தேர்தல் கமிஷனின் கட்டளைகளை மீறிச் சீருடை போன்ற வாக்குறுதிகளைத் தேர்தலுக்கு முன்பாக அள்ளி வீசிய அநீதி, தேர்தலுக்கு முன் தொகுதி மக்களுக்கு அரசாங்க இயந்திரத்தை முழுமையாகப் பயன்படுத்தி அவசரம் அவசரமாகப் பல வசதிகள் செய்து தந்த முறைகேடு, அதிகார துஷ்பிரயோகங்கள் போன்ற இவ்வளவையும் மீறி மக்கள் நாலில் இரு தொகுதிகளில் தி. மு. க. வேட்பாளர்களையே தேர்ந்தெடுத்து உள்ளனர் என்பது இன்றைய ஆட்சிக்கு எச்சரிக்கை விடுத்து ஆளும் கட்சிக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியம் செய்ததாகவே அர்த்தம்.

'சென்ற தேர்தலை விட அ. இ. மு. க. அதிக வோட்டுக்களைப் பெற்றுள்ளது' என்று தப்புக் கணக்குப் போடுகிறார் முதல்வர். இ. காங்கிரஸ் கூட்டணி அமைத்தபின் வோட்டுக்கள் அதிகரிப்பதில் என்ன அதிசயம்? அந்தக் கூடுதல் வோட்டுக்களுக்கும் அதிகமாகவே தி. மு. க. கூட்டணி பெற்று இரு இடங்களில் வெற்றி அடைந்துள்ளது என்பதல்லவா முக்கியம்? போதாக்குறைக்கு அவலை நினைத்துக் கொண்டு உரலை இடிப்பது போல் கருணாநிதி மீது உள்ள கோபத்தில் போலீஸைச் சாடுகிறார். தி. மு. க. சார்பாக நடந்து கொண்டதாகக் குற்றம் சாட்டுகிறார். இது நியாயமுமல்ல, சாணக்கியமுமல்ல. ஆபத்தான போக்கு. ஆட்சியிலிருப்பவர்கள் கோபத்தில் நிதானமிழக்காமல் வார்த்தைகளை எண்ணிப் பேசுதல் நலம்.

கேரளத்தில் ஆட்சியிலுள்ள ஜனநாயக முன்னணி ஓரளவு தன் நிலையை பலப்படுத்திக் கொண்டது தவிர அகில இந்திய ரீதியில் பார்க்கும்போது இந்த இடைத் தேர்தல் முடிவுகள் இந்திரா காங்கிரஸுக்கும் பேரிடிதான். மத்திய ஆட்சியாளரும் சரி, மாநில அரசாளரும் சரி, மக்கள் வேண்டுவது தேர்தல் கால திடீர் வசதிகளும் வாக்குறுதிகளும் அல்ல. நாம் மகாநாடு, ஏஷியாட், செயற்கை மழைக்கும், கொள்ளையரைப் பிடிக்கவும் விமானங்கள் வாங்குதல் போன்ற ஆடம்பரங்களால் மக்கள் துயர் தீராது. பஞ்சாப், அஸ்ஸாம் பிரச்னைகள் மட்டுமின்றி, வேலையில்லாத் திண்டாட்டம், பண வீக்கம், லஞ்ச ஊழல், விலைவாசி உயர்வு போன்ற பிரச்னைகளைச் சமாளிப்பதிலும் மெத்தனப் போக்கே காணப்படுகிறது. தொழில் வளர்ச்சியும் அதையொட்டிய வேலை வாய்ப்பும் பொருளாதார அபிவிருத்தியும் தான் மக்கள் வறுமை நீக்கி துயர் துடைக்கும். சத்துணவு, சீருடை போன்ற நன்கொடைத் திட்டங்கள் நிரந்தரப் பரிகாரங்கள் அல்ல.

எதிர்க்கட்சிகளும் இந்த இடைத் தேர்தலின் விளைவாக விவேகம் பெற்று கூட்டணியும் தொகுதி உடன்பாடும் மட்டும் அமைக்காமல் தேசத்தின் துரித முன்னேற்றத்துக்கான ஓர் அடிப்படையான செயல் திட்டத்துடன் மக்களைப் பொதுத் தேர்தலில் சந்திப்பது நலம். அப்படிச் செய்தால் ஒரு முறை இந்திராவை மன்னித்து ஆட்சியில் அமர்த்தியது போல் ஜனதா ஆட்சிக் காலத் தவறுகளையும் மன்னித்து மறுபடி எதிர்க்கட்சியினருக்கு மக்கள் வாய்ப்புத் தருவார்கள்.

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மூலக்கனல்

அத்தியாயம் 8

திருமலையின் வளர்ச்சியில் மாறுதலும், மாறுதலில் வளர்ச்சியும் இருந்தன. 1949-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 17-ந்தேதி அவன் ஈரோட்டுப் பாதையிலிருந்து காஞ்சிப் பாதைக்கு வந்து சேர்ந்ததைப் போலவே தமிழ்நாட்டின் பெருவாரியான இளைஞர்களும் வந்திருந்தனர். சென்னை மாநகரில் ராபின்சன் பூங்காவில் புதிய கட்சி பிறந்த கூட்டத்திற்கு அவனும், நண்பர்களும் வந்து கலந்து கொண்டு ஊர் திரும்பிய போது மாபெரும் உற்சாகத்தோடு திரும்பியிருந்தனர்.

திருமலை ஊரில் இல்லாத போது அவன் பெயருக்குத் தபாலில் வந்திருந்த ஓர் அரசியல் மஞ்சள் பத்திரிகையைத் தற்செயலாகப் பிரித்துப் படிக்க நேர்ந்த சண்பகம் ஏற்கெனவே பராபரியாகக் கேள்விப்பட்டிருந்த பல வதந்திகளை உறுதிப்படுத்திக் கொள்ள முடிந்தது. திருமலையின் எதிர்த்தரப்பைச் சேர்ந்த அரசியல் மஞ்சள் பத்திரிகை திருமலைக்குப் பல ஊர்களில் பல்வேறு பெண்களோடு தொடர்பு இருப்பதாகவும் ஐயா இதைக் கண்டித்ததால்தான் அவன் விலகியதாகவும் எழுதியிருந்தது. பத்திரிகையைப் படித்ததும் சண்பகம் இடிந்து போனாள். அவள் மனம் சுக்கல் நூறாக உடைந்து சிதறினாற் போலிருந்தது. மனத்தை விட்டு விடாமலிருக்கச் சிறுவன் ராஜாவை அணைத்து உச்சி மோந்து ஆறுதலடைய முயன்றாள். அன்று குழந்தைக்கு இராவணன் என்று பெயர் சூட்டச் செய்த திருமலை இன்று தானே இராவணனாக மாறிக் காடு மேய்வது அவளை அதிர்ச்சி கொள்ளச் செய்தது. அவள் மனம் தடுமாறிக் குமுற ஆரம்பித்தது.

திருமலை சென்னைக்குப் போய் விட்டுத் திரும்பிய தினத்தன்று காலை மற்றத் தபால்களை எல்லாம் அவனிடம் அடுக்கிக்கொடுத்த சண்பகம், அந்தப்பத்திரிகையை மட்டும் கொடுக்கவில்லை. அன்றிரவு எப்படியும் அவனிடம் கண்டித்துப் பேசி அந்தப் பத்திரிகையையும் காட்டிவிட வேண்டுமென்று திட்டமிட்டிருந்தாள் அவள். நாள் நட்சத்திரம் பார்க்காமல், தாலி சடங்குகள் இல்லாமல் நடந்த கல்யாணமாதலால்தான் இப்படியெல்லாம் ஆகி விட்டதோ என்று கூட அவளுடைய மனத்தில் பயம் ஏற்பட்டது. இப்படிப்பட்ட ஓர் ஆளையா காதலித்து, உருகி. உயிரை வைத்துப் பிரியம் செலுத்தி மணந்தோமென்று எண்ணியபோது அவளுக்கு வேதனை தாங்க முடியவில்லை. கோபித்துக் கொண்டு போய் விடலாமென்றால் எங்கே போவது? தாயும் இல்லை. தந்தையும் இல்லை. உடன் பிறந்தவனோ பேச்சு வார்த்தையின்றி ஒதுங்கி விட்டான். திருமலையிடம் பேசி அவனைத் திருத்த முடியுமென்று அவளுக்கு நம்பிக்கையுமில்லை.

கொஞ்ச காலத்துக்கு முன்பு பொன்னுச்சாமி அண்ணன் உயிரோடிருந்த போது இப்படி நடந்திருந்தாலாவது அண்ணனை விட்டுக் கண்டிக்கச் சொல்லியிருக்கலாம். இப்போது அண்ணனும் இல்லை. இரவுச் சாப்பாடு முடிந்து குழந்தையைத் தூங்கச் செய்தபின் தானே அவனிடம் நைச்சியமாகப் பேச்சை ஆரம்பித்தாள் சண்பகம்.

மெல்ல வெற்றிலையை மடித்து நீட்டிக் கொண்டே, ''முன்னெல்லாம் எங்கிட்டே ரொம்பப் பிரியமா இருப்பீங்க... இப்ப வர வர வெளியூருக்குப் போனாத் திரும்பி வர்ரப்ப ஒரு முழம் பூக் கூட வாங்கி வர்ற இல்லே நீங்க...'' என்று கெஞ்சலாகத் தொடங்கினாள்.

''எங்கே முடியுது?... வரவரப் பொது வாழ்க்கையும் கட்சி வேலையுமே நேரத்தை எல்லாம் முழுங்கிடுதே.''

''சட்சி மட்டும்தானா? உங்க நேரத்தை இப்ப யார் யாரோ முழுங்கறாங்க!''

''நீ என்ன சொல்றே சண்பகம்?'' —அவன் கை அவள் மடித்துக் கொடுத்த வெற்றிலையை வாங்கிக் கொள்ளாமல் சற்று முரட்டுத் தனமாகவே விலக்கியது.

''நான் இல்லாததை ஒண்ணும் சொல்லலே! இதோ இதைப் பாருங்க, புரியும். உங்களைப் பத்தி இப்பிடித் தாறுமாறா வர்றதைப் பார்த்தா நல்லாவா இருக்கு...?'' —என்று வினவியபடியே மறைத்து வைத்திருந்த அந்தப் பத்திரிகையை எடுத்துப் பிரித்து அவனிடம் நீட்டினாள். அதை அவளிடம் இருந்து வாங்கிப் படித்த அவன் தனக்கு ஏற்பட் ஆத்திரத்தில் சீறினான்.

''உங்க பேருக்குத் தபால்லே வந்திச்சு. பிரிச்சுப் படிச்சேன்.''

' எனக்கு வந்த தபாலை நீ எப்பிடிப் பிரிக்கலாம்?''

''.......''

சுளீரென்று அவள் கன்னத்தில் மாறி மாறி அறைகள் விழத் தொடங்கின. ஒவ்வொன்றும் ஒரு பேயறை. வலி பொறுக்க முடியாமல் அவள் கதறிய கதறலில் தூங்கிக் கொண்டிருந்த குழந்தை விழித்துக் கொண்டு மருண்டு போய் அழ ஆரம்பித்தது.

''சீ! நீ ஒரு மனுஷனா? நீ பண்ணின தப்பைச் சொன்னா அதுக்காக இப்பிடிப் பிசாசு மாதிரி அறையிறியே...?''

நா. பார்த்தசாரதி

ஆத்திரத்தில் கூப்பாடு போட்டாள் அவள். வலியும், வேதனையும் தாளாமல் ஏக வசனத்தில் வந்து விட்டது.

''ஆம்பிளை உடம்பிலே வலு இருந்தா என்னவும் பண்ணுவான். எங்கேயும் போவான். அதைக் கேக்கறத்துக்கு நீ யாருடி?''

''நான் கேக்காமே வேற யாரு கேட்பாங்க?... தெருவில போறவளா வந்து கேப்பான்னேன்?''

''எதுத்தா பேசறே...? வாயை மூடுடி''

மறுபடியும் அறை. குழந்தையையும் அவளையும் தனியே விட்டுவிட்டு வெறியோடு வெளியேறினான் திருமலை. அவளும், குழந்தையும் கதறியழுத சத்தம் கேட்டு என்னவோ ஏதோ என்று பதறி ஓடிவந்த அக்கம்பக்கத்தாரிடம், ''ராத்திரி முருங்கைக் காய் சாம்பாரு வைக்கச் சொல்லியிருந்தாரு. மறந்து போச்சு... அதுக்காகக் கோவிச்சுக்கிட்டு இத்தனை கூத்தும் பண்ணிட்டுப் போறாரு'' — என்று பொய் சொல்லிச் சமாளித்தாள் சண்பகம்.

அதன்பின் அவளது இல்வாழ்க்கை நரகமாயிற்று. தினம் வீடு திரும்பினால் அடிதான், உதைதான். திருமலையைத் திருத்த அவளால் முடியவில்லை. அவன் சார்ந்திருந்த மனிதர்களில் யாரும் தனி மனித ஒழுக்கத்தையோ — சமூக ஒழுக்கத்தையோ பற்றி அக்கறை எதுவும் காட்டவில்லை. ஒழுக்கச் சிதைவையே நியாயப்படுத்த முயன்றார்கள். குடும்பம் என்ற அமைப்பின் புனிதத்தை மதிக்கத் தயாராயில்லை. குடும்பம் என்கிற கரையை உடைத்துக் கொண்டு காட்டாறாகப் பெருகினான் அவன். தந்தை, தாய், உடன் பிறந்தான் அத்தனை பேருடைய பேச்சையும் மதிக்காமல் இந்த மனிதனைக் காதலித்து மணந்த வேதனை அவளை வாட்டியது. வாழவும் முடியவில்லை. அவனை விட்டுவிட்டு ஓட வேறு போக்கிடமும் இல்லை. வீட்டின் நாலு சுவர்களுக்குள்ளேயே தேய்ந்து நைந்து சண்பகம் நலிந்து கொண்டிருந்தாள். கூட்டம், இயக்கம், கட்சி வேலைகள் என்று, வீட்டுக்குச் சதா வந்து கொண்டிருந்த கும்பலுக்குப் பிரியாணி தயாரித்துப்



போடும் சமையற்காரியாகக் காலந்தள்ளினுள் அவள். பார்க்க அடையாளமே தெரியாமல் எலும்பும் தோலுமாகக் களையிழந்து போஞள் சண்பகம். சண்பகத்தை இந்த நிலையில் வைத்ததற்காகத் திருமலையைக் கண்டிப்பார் யாருமில்லை.

''தலைவர் இருக்காருங்களா?'' — என்று கைகட்டி வாய் புதைத்துத் தேடி வருகிறவர்களிடம் அவளை விட்டுக் கொடுத்து அவன் என்ன சொல்ல முடியும்? வீடு, வருமானம், மின் விசிறி, கட்டில், சோபா என்று வசதிகள் பெருகின. அன்பும், ஒட்டுறவும் குறைந்தன. திருமலையை இரவு நேரத்தில் யாராவது தேடி வந்தால், ''அவரு இங்கே இல்லிங்க... 'அந்த வீட்டிலே' போய்ப் பாருங்க...'' என்று இவளே பதில் சொல்லும்படி உள்ளூரிலேயே ஒரு சக்களத்தி வீடு ஏற்பட்டு விட்டது. பகலில் இங்கே, இரவில் அங்கே என்று 'வாழப் பழக்கிக் கொண்டு விட்டான் திருமலை. அந்தக் கொடுமையையும் தாங்கிக்கொண்டு வாழ்ந்தாள் அவள்.

கொஞ்ச நாள் ''கூட்டம் முடிஞ்சதும் அண்ணன் இங்க சாப்பிட வரலேன்னு தாக்கல் சொல்லியனுப்பிச்சாரு. சாப்பாடு வெளியிலயாம்'' — என்று கட்சி ஆள் ஒருத்தன் வந்து தகவல் சொல்லிக் கொண்டிருந்தான். அப்புறம் அதுவும் நின்று போய் விட்டது. அவளாகப் புரிந்து கொள்ள வேண்டிய நிலைதான். பக்கத்து வீட்டில் குடியிருந்த ஒரு வயதான ஆச்சி சண்பகத்திடம் அடிக்கடி துணைக்குவந்துபேசிக் கொண்டிருந்தாள். அறுபது வயதுக்கு மேல் ஆகி வெளேரென்று தும்பைப் பூவாகத் தலை நரைத்துப் போன அந்த ஆச்சி சிலநாள் பழக்கத்தில் சண்பகம் எதுவும் வாய் திறந்து சொல்லாமலே அவளது வேதனைகளைப் புரிந்து கொண்டாள். குழந்தை ராஜாவை எடுத்து வைத்துக் கொஞ்சும் போது அந்த ஆச்சி, ''உங்க அப்பன் இப்பிடிப் போயிட்டானேடா பாவி'' என்று சிரித்துக் கொண்டே சொல்வாள். அப்போது சண்பகம் குறுக்கிட்டு, ''ஆச்சி! இவனாவது உருப்படியா வளரட்டும்... அப்பனைப் பத்தியே இவங்கிட்டப் பேசாதீங்க...'' என்பாள். ஆச்சிக்குச் சண்பகத்தினிடம் அளவு கடந்த அநுதாபமும், பிரியமும் உண்டு. அடிக்கடி சண்பகத்தைத் தேற்றுவதற்காக ஏதாவது சொல்லிக் கொண்டிருப்பாள். ஒருநாள் ஆச்சி சண்பகத்திடம்பேசும் போது சொன்னுள்:

''அப்பன், ஆத்தா, சாதி சனங்களையெல்லாம் விட்டுப் போட்டு ஒன்னையும் லட்சியம் பண்ணுமே நீ இந்த மனுஷனை நம்பி வந்தே. இது பழைய ஊரா இருந்தா ஊராரே இப்ப இவன் பண்ற அக்கிரமத்தைத் தட்டிக் கேட்பாங்க. பழைய சமூகக் கட்டுப்பாட்டிலே தனி மனிதன் தப்பாவோ, தாறுமாறுகவோ நடந்துக்கிடறது அவனோட சொந்த விஷயம்னு விட்டுட்டு ஒதுங்கிப் போயிட மாட்டாங்க. உரிமை எடுத்திட்டுக் கண்டிப்பாங்க. ஒரு தெருவிலே ஒரு வீட்டிலே தீப்பிடிச்சா பக்கத்திலேயும் பரவிடக் கூடாதுன்னு ஊர் பூரா ஓடியாந்து தீயை அணைக்கிற மாதிரித் தான் அன்னிக்கி இதுவும் இருந்திச்சு. ஒரு காட்டிலே நெருப்புப் பத்திக்கிட்டா எல்லா மரமும் தான் அழியும்கிற மனப்பான்மை அன்னிக்கி இருந்திச்சு. பெரியவங்க கண்டிப்பாங்களேங்கிற பயம் அன்னிக்குப் பெரிய அம்சமா இருந்து தப்புப் பண்றவங்களைத் தடுத்திச்சு. தப்புத் தண்டாவுக்குப் போனுப் பாவம், சாமி கண்ணை அவிச்சுப் போடும்னு நம்பிக்கை வச்சிருந்தாங்க... இன்னைக்குப் பயமும் இல்லே... நம்பிக்கையும் போச்சு. யாரும் எதுக்கும் பயப்பட வேணும்னு ஆயிப் போயிடிச்சு. யாரும் எதையும் நம்பாத படியும் பண்ணிட்டாங்க... தனி மனுசன் ஒழுக்கங் கெட்டுப் போனு அது • மொத்த சமூகத்தையும் உடனே பாதிக்கலேன்னுலும் படிப்படியா' பாதிக்கத் தான் செய்யும். தனி மனித ஒழுக்கத்தில் பிடிக்கிற தீயாலே சமூக ஒழுக்கமும் பற்றிக் கொண்டு எரிந்து சிதைவது தவிர்க்க முடியாமப் போயிடும்! இன்னிக்கு யாருக்குமே அது புரியறதில்லே சண்பகம்! தேவைக்கு மேலே தனி மனுஷனுக்குச் சுதந்திரம் கொடுத்திட்டா அது இப்பிடித் தான் ஆகும்மா!''

''யாரு குடுத்தாங்க ஆச்சி? எல்லாம் இவங்களா எடுத்துக்கிற சுதந்திரம்தானே?''

''அதில்லேமா! சமூகக் கட்டுப்பாடு, பொது ஒழுக்கம்லாம் வேண்டாம்கிற அளவு அந்த சுதந்திரம் வந்திரிச்சு. கட்டுப்பாடில்லாத சுதந்திரம் இந்த மாதிரித்தான் ஆகும்.''

''அதாவது முன்னெல்லாம் பெரிய பெரிய தப்புக்களைப் பண்ற ஒரு மனுஷனை அந்தத் தப்புக்களை மறந்திட்டு நல்லா மேடையிலே பேசுறன், கச்சேரியிலே அழகா பாடுறன் டிராமாவிலே நல்லா நடிக்கிறன்னெல்லாம் மன்னிச்சுப் புகழ்ந்துட மாட்டாங்க... இப்ப அப்பிடிச் செய்துடுறாங்கங்கிறீங்க... அதுதானே ஆச்சி, நீங்க சொல்ல வந்தது?''


சான்பிரான்ஸிஸ்கோவில் உள்ளது 'மார்ஜியா' நர்ஸிங்ஹோம் என்ற பைத்தியக்கார ஆஸ்பத்திரி. இங்கு இருந்த ஆறு பைத்தியங்கள் ஒன்று சேர்ந்து, தங்களைப் பரிசோதிக்க வந்த டாக்டரைப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டனர். பைத்தியங்களில் ஒருவன் டாக்டர் வேடம் போட்டுக் கொண்டு, அதே மருத்துவ மனையில் இருந்த மூன்று நோயாளிகளுக்கு ஆபரேஷன் செய்துவிட்டான். மூன்று நோயாளிகளும் குளோஸ். இப்போது அந்த ஆறு பைத்தியங்கள் மன நோய் சிறைச் சாலையில் இருக்கின்றனர்!

—ஜா. ரவி




"நீங்க கிழடு உங்களால விளையாட முடியலென்னு சும்மா ஒரு இடத்திலே உட்காருங்கோ"
"ம அம்மு! உனக்கு அந்த ராகமாலிகா புடவை வாங்கி கொடுத்தது தப்பா போச்சு 81 வயசாயும் 18 வயசுன்னு நினைப்பு"

சூடேறிய பாய்லர் விவகாரம்



கல்கி 11.3.84 இதழில் வெளியான நெய்வேலி பற்றிய கட்டுரையிலும், தொடர்ந்து தராசு பதில்கள் பகுதியிலும் குறிப்பிட்டிருந்த பாய்லர் விவகாரம், நிஜமாகவே சூடேறிவிட்டது! உள்நாட்டு 'பி.எச்.இ.எல்.' நிறுவனம் இருக்க, ஹங்கேரியிலிருந்து வாங்குவானேன் என்று நாம் கவலைப்பட்டிருந்தோம். நமது கருத்து தவறு என்று காரணம் காட்டி, நெய்வேலியைச் சேர்ந்த கண்ணபிரான் சீறிப் பாய்ந்து வட்டமேஜைக்கும் எழுதினார்.

உண்மை நிலவரம் தான் என்ன? திருச்சி, பி. எச். இ. எல். நிறுவனத்தை அணுகினோம். குரூப் ஜெனரல் மானேஜர் ஈ. எஸ். சந்திரசேகரன் தெரிவித்த விவரம்:

பி. எச். இ. எல். முதலில் பாய்லர் சம்பந்தமான போட்டிக்குப் போகவில்லையாம். டர்போ ஜெனரேட்டர் என்கிற பகுதியை வழங்குவதற்குத் தான் டெண்டர் விடுத்து, அதுவும் விலை அதிகம் என்று தள்ளப்பட்டு விட்டதாம்.

ஆனாலும், டெண்டர் இறுதிவடிவம் பெறுவதில் ஓர் ஆண்டுக்கும் மேல் தாமதம் ஏற்பட்ட நிலையில், டர்போ ஜெனரேட்டரையும், பாய்லரையும் ஒட்டுமொத்தமான அமைப்பில் தயாரித்து வழங்குகிறோம் என்று, நெய்வேலி லிக்னைட் கார்ப்பொரேஷனையும் மத்திய அரசையும், பி. எச். இ. எல். நிறுவனம் அணுகியது. இதற்குள் லிக்னைட் எரிசக்திக்கு ஏற்ற பாய்லர் தயாரிப்புக்கு வேண்டிய தொழில் நுட்ப ஆதரவை பி. எச். இ. எல்லுக்குத் தரச் சில வெளிநாட்டு நிறுவனங்கள் முன் வந்திருந்தன. இருப்பினும் பி. எச். இ. எல். நிறுவனம் அப்போது இந்த ஆர்டரைப் பெற முடியாமல், வெளிநாட்டு நிறுவனம் தட்டிக் கொண்டு போய்விட்டது.

என்றாலும் அடுத்து வரும் பல நெய்வேலித் திட்டங்களில் பி. எச். இ. எல். நெருக்கமான ஒத்துழைப்புத் தரவிருக்கிறது.


-சுப்ரபாலன்

''சரியாப் புரிஞ்சுக்கிட்டிருக்கேடா! உனக்கு இத்தினி பெரிய துரோகத்தைப் பண்ணிப் போட்டு உம் புருசன் மேடை மேடையா ஏறி அத்தினி நீளத்துக்கு தோளிலே ஒரு துண்டையும் போட்டுக்கிட்டு இப்பிடி நெஞ்சை நிமிர்த்திப் பேச முடியுமா? பேரிக்கைட்டு வாங்க முடியுமா? சீர்திருத்தச் சிங்கம், பகுத்தறிவுப் பகலவன்னு பட்டம்லாம் போட்டுக்க முடியுமா? பெரிய குறையுள்ள வங்களைச் சிறிய குணங்களுக்காகப் புகழுகிற சமூக அமைப்பே சீரழிஞ்ச நிலைமையின் அடையாளம்தான்...''

''இப்பத்தான் பணம், பதவி, எல்லாத்தையும் போலப் புகழும் நமக்குக் காரியம் சாதிச்சுக் குடுக்கிறவங்களுக்கு நாம தர்ர லஞ்சத்திலே ஒண்ணு மாதிரி ஆயிடிச்சே ஆச்சி? தகுதிக்காகவா புகழுறோம்? காரியம் ஆவறதுக்காகத்தானே புகழுறோம்? காரியம் ஆகிறதுக்காக ஒருத்தருக்குப் பணத்தை லஞ்சமாக் கொடுக்கிற மாதிரிப் புகழையும் லஞ்சமாக் குடுக்கிறோம். அவ்வளவுதானே?''

''புகழ், பணம், மரியாதை, மதிப்பு, எல்லாத்தையும் தகுதிக்காகக் குடுக்காமே காரியம் ஆகிறதுக்காகக் குடுக்கப் பழகிவிட்ட காலத்திலே இதுதான்டா நடக்கும்! ஒழுக்கமா இருக்கணும்னு எவன் நினைப்பான்? எவன் இனிமே அதுக்கு ஆசைப்பட்டு அக்கறை காட்டுவான்?''

(தொடரும்)



ஒலிம்பிக் விளையாட்டு பயிற்சி அளிக்கும் ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுகிறார்:

"காம்ப்ளான்® ஒண்ணுதான் வலுவையும் தெம்பையும் உருவாக்குகிறது."

ஒலிம்பிக் வீரர் ஜிம்ஓ'டோஹர்த்தி, இந்தியா உள்பட உலகம் முழுவதிலுமுள்ள இளம் விளையாட்டு வீரர்களுக்கு கடினமான போட்டிகளுக்காக பயிற்சி அளித்துள்ளார். 'பிறக்கும்போதே சாம்பியன்களாக பிறப்பதில்லை அவர்கள் உருவாக்கப்படுகிறார்கள்'. என்பதை அவர் நம்புகிறார். ஒருவரை வெற்றியாளராக்குவது கட்டுப்பாடான சக்தி—<u>மற்றும்</u> உடல் சக்தி.

"நீச்சல் வீரர்கள், ஓட்டம் மற்றும் களவிளையாட்டு வீரர்கள், குறிப்பாக வளரும் குழந்தைகளுக்கு இதை சிபாரிசு செய்கிறேன்" என்கிறார் ஜிம் ஓ,டோஹர்த்தி. ஒரு பரிபூரண உணவாகும் காம்பளான்—எளிதில் ஜீரணிக்கவல்லது, தெம்பு அபிவிருத்தி செய்யும் ஆரோக்கிய வளர்ச்சிக்கான 23 மூலதார ஊட்டச்சத்துக்களுடன் கூடியது."

ஜிம் ஓ' டோஹர்த்தி கூறுவதை எடுத்துக் கொள்ளுங்கள். ஆரோக்கியமான முழுமையான வளர்ச்சிக்கு உங்கள் குழந்தைக்கு அன்றாடம் வழங்குங்கள் தாம்ப்ளான். குழந்தைகள் விரும்பிடும் இனிய சுவைகளில் கிடைக்கிறது காம்ப்ளான்.



காம்ப்ளான்®

-திட்டமிட்ட பரிபூரண உணவு

GLC.9-2012 TAM

வேங்கை வனம்

கோவி. மணிசேகரன்

அத்தியாயம் 6

கண்ணீர் அலைகள்

அந்த வேங்கை மரத்துக்குப் பின்புறமாக நின்று என்தான் ஒற்றறிய முனைந்தாளோ தியாகவல்லி...

இரும்பு வேலிக்கு அப்பாலிருந்த அரண்மனைத் தென் வாயில் சுவரோரமாக மறைந்து கவனித்த தானைத்தலைவன் காளிங்கன், இடுப்பிலிருந்த குறுவாளை உருவி குறிபார்க்கத் தொடங்கி விட்டான்.

அப்போதும் ஒரு வேங்கையைத் தானே வீழ்த்தலாம் அடுத்ததை வீழ்த்த....

பரவாயில்லை; ஒன்றை வீழ்த்த, அதைக் கண்டு மற்றொன்று மருண்டோடலாம் என்கிற தீர்மானத்துக்கு வருவதற்குள்....

தொலைந்தோம்; உயிர் போகட்டும்; இதன் மூலமாகவாவது திருமேனியின் மனம் மாற்றம் கண்டு வேங்கைமார்பனை ஏற்க மாட்டாளா என்று தியாகவல்லி எண்ணிப் பார்ப்பதற்குள்...

தொலைவில் மரத்துக்குப் பின்னால் ஏதோ நிழலைக் கண்டு, தங்கள் தலைவனுக்குத் தீங்கு செய்ய முனைகிறார்கள் என்று சருதிச் சீறிப் பாய்ந்து வந்த வேங்கைகள், சிலை போல நின்றிருந்த தியாகவல்லியைக்கண்டு அவளது மோப்பம் ஏற்கெனவே பரிச்சயமானதால், அருகே சென்று, அவள் மீது தாவி உறுமுகின்றனவே யொழிய, கூரிய நகங்களைப் பாய்ச்சி ரணப்படுத்தவில்லை.

அவைகள் அந்த வேங்கை மரத்தில் ஒன்றோடொன்றாக மோதியதால், மரத்தின் பொன்னிறப் பூக்கள் பொலபொலவென்று உதிர்கின்றன.

பின்னால் ஒரு நொடியில் அங்கு ஓடிவந்த வேங்கைமார்பன், நிலைமை புரிந்து ''ராஜா'' என்று அந்த வனமே அதிரும்படிக் கத்துகிறான்.

ராஜா அடங்கினால், ராணி அடங்கிவிடுவாளே...

குட்டியிலிருந்தே வைத்த பெயர் ராஜா, ராணி...

தியாகவல்லியின் உடல் வியர்வைப்புக்கண்டு சொட்டச் சொட்ட நனைந்து விட்டது.

நல்லவேளை...

காளிங்கன் குத்துவாளைப் பாய்ச்சவில்லை.. பாய்ச்சியிருந்தால்...

சூழ்நிலை எரிபட்டுப் பாழ்நிலை உருவாகியிருக்கும்....

அருகில் ஓடிவந்த வேங்கைமார்பன், ராஜாவையும் ராணியையும் பிடித்து அவற்றின் கழுத்துக்களை இருகரங்களில் வளைத்துக் கொண்டு அவற்றின் பாஷையில் அவனும் உறுமியும் முகத்தை முகத்தோடு உரசியும் ''அமைதி ராஜா, அமைதி ராணி'' என்று கூறியும், முத்தமிட்டும் எவ்வளவோ முயன்று சமனப்படுத்தப் பார்க்கிறான்.

அரைநாழிகைப் போதுக்கு மேலாக அவன், வேங்கைகளின் கோபத்தோடு போராடுகிறான்...

....இந்த வேங்கைமார்பனுக்குத்தான் எத்தனைத் துணிச்சல்; வேங்கைகள்தாம் எவ்வாறு கட்டுப்பட்டு அடங்குகின்றன

எண்ணிப் பார்த்த காளிங்கனுக்குக் குப்'பென்று வியர்த்துக் கொட்டியது.

வேங்கைகளின் உறுமல்களில் அடக்கம் தெரிகிறது.

அவற்றை மெல்லத் தட்டிக் கொடுத்துக் கொண்டே, ''தியாகவல்லி! நீ மெல்லத் தைரியமாகத் திரும்பிப் பார்க்காமல் நடந்து செல்... ம்ம்! நான் சொன்னது போலச் செய்!'' என்று உத்தரவிடுகிறான் வேங்கைமார்பன்.

அவளும், அதன் உட்பொருளுணர்ந்து திரும்பிப் பாராது மெல்ல பளிங்கு மாளிகை நோக்கி நடக்கலானாள்.

வேங்கைகளை அணைத்தே வேங்கைமார்பனும் நடக்க, அவையும் தத்தம் நிலையடைந்து பின் தொடர்ந்தன.

வேங்கைகளை அடைத்து வைக்கும் அறை வாயில் வந்ததும், அவை மீண்டும் உறுமத் தொடங்கின: ''எங்களை மீண்டும் அடைத்து விட வேண்டாம்!''

அவற்றின் பாஷை அவனுக்குப் புரிகிறது.

இரண்டையும் தட்டிக் கொடுத்து ''போய் விளையாடுங்கள்'' என்று கைநீட்டிக்காட்ட...

அவை ஏதோ சுதந்திரானந்தம் பெற்றன போல ஓடிச் சென்று வனத்தைச் சுற்றத் தொடங்கின.

இரவில் மட்டுமே கிடைக்கிற இந்த ஆனந்தம் பகற்போதில் கிடைத்துவிடவே, அவை ஒன்றோடொன்று, இடித்துக் கொண்டும் ஒன்றின் மீது ஒன்று பாய்ந்து கொண்டும் வலம் வந்தன.

பளிங்கு மாளிகையின் வாசற் தூணில் சாய்ந்து கண்ணீர் மல்கிய வண்ணம் சிலையனைய நின்றிருந்தாள் தியாகவல்லி.

அருகில் வந்து நின்ற அந்தக் கானப்பேர் எனும் வேங்கைக் கோட்டையின் வேந்தன், வேங்கைமார்பன் சிதிலமாகவிருந்த அந்தச் சிலையைக் கவனிக்கிறான்.



அவள் எங்கோ வெறித்து, நடந்ததை நினைத்து அதனைக் கண்ணீரால் அபிஷேகித்துக் கொண்டிருக்கிறாள்...

''தியாகவல்லி! நான் வராமலிருந்தால் இந்நேரம்...''

அவனது குரலை அந்த அழுகுரல் மறிக்கிறது: ''ஒன்றுமாகி இருக்காது. எனது வாசனை உங்களைவிட உங்கள் வேங்கைகளுக்கு அதிகமாகவே அத்துப்படியாகி இருக்கின்றது. ஆனால் உங்கள் வாசனைதான் திருமேனிக்கு அபிஷேகமாகாமல் போய்விட்டது. என் கண்ணீருக்குக் காரணம் அது தான்.''

''தியாகவல்லி!''

வியப்பு ஒரு தோளில் ஏற துடிப்பு மறு தோளை விட்டிறங்குகிறது.

அவனை நோக்கி அவள் சூன்யமாய்ச் சிரிக்கிறாள்.

''எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டுதானிருந்தேன். வேங்கைகள் என்னைக் கொல்லாதா அந்தச் சாவாவது உங்கள் திருமணத்துக்கு ஒரு நல்ல சாசனமாகாதா என்று எதிர்பார்த்தேன். இதிலும் நான் துரதிர்ஷ்டசாலி!''

விரக்தியான பெருமூச்சு நீண்டு நெளிந்து பறிகிறது.

''தியாகவல்லி! உன்னை நான் அறிவேன். என்ன செய்வது இந்தப் பிறவியில் திருமேனிதான்!''

'''அடுத்த பிறவியில் நீ' என்று உங்கள் பேச்சில் தொக்கி நிற்பதைக் கண்டாவது மகிழ்கிறேன்.''

சேலை முனைப்பு அவளது சேல் விழிகளுக்கு முத்தம் தருகிறது.

கண்ணீரைத் துடைத்துக் கொண்ட தியாகவல்லி, தனது மனத்தை ஒருவாறு தேற்றிக் கொண்டு, ''போகட்டும் பிரபோ! திருமேனி அழகாக இருக்கிறாளா?'' என்று, புன்னகையை வலிந்து வரவழைத்துக் கேட்கிறாள்.

நெருப்பில் நின்று விடைகூற வேண்டிய வினா...

எச்சரிக்கையுடன் சொன்னான்:

''உன்னைப் போலவே இருக்கிறாள்...''

''பொய்! பொய்!''

ஓ... பொய்...

திருமேனி ஆவேசம் பூண்டு அலறிய பொய்க் கூத்து நினைவுக்கு வருகிறது. அவன் தன்னை மறந்து, ''என்னை எல்லோருமே பொய்யனாக்கி விடாதீர்கள்; என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்றான்.

அவனது குரலின் தடுமாற்றம் அவளை உரு மாற்றம் காணச் செய்து விட்டது.

''அப்படியென்றால் திருமேனி உங்களைப் பொய்யராக்கினாளா? அவ்வாறானால் அவள் தான் பொய்யானவள். எனது அத்தானுடைய பரிசுத்தமான காதலையுணராதவள். நான் சத்தியமாக அப்படி நினைக்க மாட்டேன். 'என்னைப் போலிருக்கிறாள்' என்று என்னைத் திருப்திப்படுத்த வேண்டி நீங்கள் கூறியதால், நான் இவ்வாறு பொய் என்று கூற நேர்ந்தது. பிரபோ! மீண்டும் சத்தியம் கொண்டு கூறுவேன். உங்கள் வாழ்வே எனது மகிழ்ச்சி! தயவு செய்து என்னிடம் நடந்ததைச் சொல்லுங்கள். நான் அடுத்த பிறவியில் உங்கள் காதலி; மனைவி! இந்தப் பிறவியில் நான் உங்களுக்குத் துரோகம் செய்யாமலிருந்தால்தானே அடுத்த பிறவியில் இந்தப் பாக்கியம் நிறைவேறும்! திருமேனி, எதற்காக என் மீது சந்தேகப்பட்டாள்? யாரோ ஒற்றன் சென்று உளறியதாக நீங்கள் அமைச்சரிடம் சொன்னதை நான் நம்ப மாட்டேன். மீண்டும் வேண்டுகிறேன். நடந்ததென்ன?''

எவரிடமும் சொல்லக் கூடாது என்று நாவில் அமர்ந்த உறுதி, தியாகவல்லியின் பரந்து திறந்த இதயத்துக்குள் புகுந்து விட்டது.

''உங்கள் பாதங்கள் மேல் சத்தியம் செய்கிறேன்; என்னை நம்புங்கள், பிரபோ! என்ன நடந்தது?''

அவளது கண்ணீர்த் துளிகள் அவனது கண்களில் வெடித்து வழிகின்றன.

நெருப்புக் கட்டியாய், இருந்த வேங்கை மார்பு, பனிக்கட்டியாய்க் கரைய...

நடந்தது நடந்தவாறு நாவிலிருந்து குதித்து விட்டது. புலியனைய நெஞ்சு புழுவாய் துடித்தது.

தியாகவல்லி திகைத்துப் போனாள்.

''விதிதான் முதலை ரூபத்தில் வந்தது. நீங்களாவது பொறுமையாகத் திரும்பிவந்து என்னை அழைத்துச் சென்று நிரூபித்து இருக்கலாம். சபதம் செய்தா திரும்புவது!''

சிந்தனையில் அவளது சொற்கள் சிறப்பு மிக்க பனுவலைப் புனைந்தன. ஆத்திரப்பட்டு விட்டோம்; அவசரப்பட்டு விட்டோம்!

''தியாகவல்லி! ஏதோ விதி, நாடகம் நடத்தி விட்டது; மதியால் இதனை எவ்வாறு வெல்வது? ஏதேனும் ஒரு நல்ல கருத்தைச் சொல்லு தியாகவல்லி! உன்னைப் பரிபூரணமாக நம்புகிறேன். ஏனென்றால் நீ எனது அடுத்த பிறவியின் காதலி; மனைவி!''

அற்பமாக மகிழ்ந்து கொள்கிறாள் தியாகவல்லி. சுருக்கென்று குத்துவது போல ஒரு கேள்வி கேட்கிறாள்: ''மது அருந்துகிற போது என்னை அபிப்பிராயம் கேட்டா அருந்தினீர்கள்?''

''ஓ... தியாகவல்லி! ஏற்கெனவே ரணமான நெஞ்சு! மேலும் கிண்டாதே!''

''நான் ஒரு கருத்தைச் சொன்னால் மது அருந்துவதை விட்டு விடுவீர்களா ''

''விடக் கூடியதானால்...''

இமையாது கவனிக்கிறாள் தியாகவல்லி. அந்த இருவிழிகளுக்குள்ளும் அவனைச் சிறை வைத்துச் சிரிக்கிறாள்.

''பிரபோ! திருமேனியைச் சிலை வடிப்பதை நான் ஆதரிக்கிறேன். அதே சிலைக்கு ஒரு முகூர்த்த நாள் குறித்துப் பிரகடனம் செய்து பகிரங்கப்படுத்தி மாலையிடுங்கள். வரலாற்றில் இது ஒரு புதுமை நிகழ்ச்சியாக ஏறட்டும். உங்களையோ, அல்லது எவரையோ, மணப்பதில்லை என்று திருமேனி செய்த சத்தியம் தளரும்; தளர மறுத்தால் பெருவழுதிப் பாண்டிய மாமன்னர் தளரச் செய்வார். வேறு வழி? மானம் பறி போகும் விஷயமல்லவா?''


வாய் துர்நாற்றத்தை தடுத்திடுவீர்...
பற்சிதைவை எதிர்த்திடுவீர்
Colgate
DENTAL CREAM
Colgate
எப்படி என்றால்...
கோல்கேட்டின் சம்பகமான
ஃபார்முலா, சிறப்புடன்
செயல்பட்டு நீங்கள்
பல்துலக்கும் ஒவ்வொரு
முறையும்
உங்களுக்கு புத்துணர்ச்சிதரும்
தூய சுவாசம் அளிக்கின்றது
பற்களுக்கு ஆரோக்கியமும்
உறுதியும் தருகிறது.
கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும்
பெப்பர்மெண்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

வேங்கைமார்பன் நெஞ்சுக்குள் ஒரு புதிய உற்சாகம் பூக்காமல் காய்த்து, 'ஆ! இது ஒரு புதிய மார்க்கம்' என்றும் கனிகிறது.

''மெச்சுகிறேன் உனது கருத்தை தியாக வல்லி!''

''மது அருந்த மாட்டீர்களே?''

''நீ உயிரோடு இருக்கும் வரை அருந்த மாட்டேன்.''

அதன் அர்த்தம் புரிந்து அந்தப் பூஞ்சை நெஞ்சு பூரிக்கிறது. அதாவது, 'காதல் தோல்வியால் நீ மாண்டுவிட முயற்சி செய்யக் கூடாது' என்ற பொருள். அதனுள் பொன்னாய் மின்னுகிறது.

அவளது கண்களில் கொற்கை முத்துக்கள்.

அதுவரையில் மிகத் தொலைவில் நின்று கவனித்து வந்த தியாகவல்லியின் அண்ணனும் சேனாதிபதியுமான காளிங்கனுக்கு ஒன்றும் புரியவில்லையானாலும், ஏதோ தங்கையை வேங்கைமார்பன் சொல் கொண்டு ஏமாற்றுகிறான் என்று அவனது நெஞ்சு கருவிக் கொள்கிறது.

அப்போது துணைச் சேனாதிபதி தென்னவன் வேளான் அவசரமாகச் செல்வதைக் கண்டு, அந்த இடத்தை விட்டு நகர்ந்து சென்றான்.

இரும்புவேலிக்கு அப்புறமாகவே வந்து நின்ற தென்னவன் வேளான், தனது மன்னனை வணங்கி, அமைச்சர் காத்துக் கொண்டிருப்பதாகச் செய்தியறிவித்தான். வேங்கைகள் அவிழ்த்து விடப் பட்டிருக்கின்றனவே! பரிச்சயமில்லாமல் நுழைய முடியுமா?

வேங்கைகளைக் கவனிக்கிறான் வேங்கை மார்பன். அவை ஆனந்தமாக விளையாடிக் கொண்டிருந்தன. அவற்றின் போக்கில் குறுக்கே புக நினையாமல், இரும்பு வேலிக் காவலர்களை எச்சரித்து விட்டு அரண்மனையுள் நுழைந்தான்.

அரண்மனையின் விசாலமான கூடத்தில் வேங்கைமார்பன் பிரவேசிக்கிறான். அமைச்சர் குறுமலைக்கிழார் எழுந்து நின்றார்.

ஒற்றன் பகபதி, ஓடிவந்து நெட்டங்கமாக விழுந்து பணிகிறான்.

''மன்னர் பெருமானே! நம் பாண்டிய குலம் தழைக்க நீங்கள் முயற்சி செய்திருக்கிறீர்கள். எனவே நான் உங்கள் கருத்துக்கு ஒத்துழைப்பது எந்த விதத்திலும் துரோகமாகாது. நமது மீன் கொடியின் மீது சத்தியம்.''

ஒற்றன் பகபதி ஒப்புக் கொண்டான் என்பதறிந்து நிறைவு கண்டான் வேங்கை மார்பன்.

அமைச்சர் குறுமலைக்கிழார் நாவாடினார்: ''மன்னவா! உங்கள் ஏற்பாட்டில் ஒரு திருத்தம். பகபதிதான் சொன்னான். சிற்பிகளை இங்கே அழைத்து வருவதைவிட, அங்கேயே வார்ப்படம் செய்யச்சொல்லி எடுத்து வரச் சொன்னால், இங்கே பொன்னை உருக்கி வார்த்து ஒரு வாரத்தில் திருத்தம் செய்து விடலாம். மேலும் சிற்பிக்கு ஐயம் ஏற்படுகிறபோது, அரசகுமாரியை அடிக்கடி சந்திக்க முடியுமல்லவா? உருவமும் தத்ரூபமாக அமையும்.''

''இது ரகசியமாக நடைபெற வேண்டுமே!''

''நிச்சயமாக நடைபெறும். நமது தானைத் தலைவர் காளிங்கனையே மாறுவேடத்தில் துணையாக அனுப்பி வைக்கப்போகிறேன்.''

''காளிங்கனையா? வேண்டவே வேண்டாம். இந்தக் கானப் பேரெயிலையே வேங்கை வள நாடு என்று புதுப்பெயர் கொடுத்த மாவீரத் தானைத் தலைவன் அவன். எனக்கு உறவு என்று பெயர் சொல்ல அவன் ஒருவன்தானிருக்கிறான். அவனுக்கு ஏதும் ஏற்பட்டுவிடக்கூடாது. துணைத் தளபதி தென்னவன் வேளானை அனுப்பி வைக்கலாம்.''

கொஞ்ச நேரம் மூக்கில் தனது ஆள் காட்டி விரலை உரசிய வேங்கைமார்பன், என்ன நினைத்தானோ, ஒற்றன் பகபதியை நோக்கி, ''உனது இளவரசி திருமேனியிடம் சந்தர்ப்பம் கிடைக்கிற போது சொல்ல மறக்காதே. அதாவது, 'உன் நினைவாக மனம் பேதலிப்பு கண்ட வேங்கையனைய வேங்கை மார்பன், மது அருந்தி சாகிறான் என்று சொல்ல மறக்காதே!'' என்று கூறுகிற போது, தொண்டை அடைபட்டது.

அதுவரை ஒருமருங்கே நின்று கவனித்து வந்த சேனாதிபதி காளிங்கன், அதுதான் சமயம் என்று உள்ளே நுழைய, மறுமூலையிலிருந்து கவனித்த தியாகவல்லி பதறிப் போனாள்.

அண்ணன் ஒன்றுகிடக்க ஒன்றை உருவாக்கி விடக் கூடாதே என்று அஞ்சி அவளும் அவசரமாக உள்ளே பிரவேசித்தாள்.

(தொடரும்)

போர்ச்சுகலின் தலைநகரான லிஸ்பனில் இரவு ஒன்பது மணிக்குமேல் ஓட்டல்களில் சாப்பிட்டால் எல்லா உணவுப் பண்டங்களுக்கும், பாதிவிலை கொடுத்தால் போதும். இதேபோல் டாக்ஸிக்காரர்களும் இரவு ஒன்பது மணிக்கு மேல் பாதிக் கட்டணத்தையே வசூலிக்கின்றனர்.

—அறிவுக் கருவூலம் என்னும் நூலிலிருந்து. —ஜா. ரவி.



எதற்காக நியூட்ரமுல்



"நாக்குலே சாக்லேட் ருசி... நியூட்ரமுல் வஸ்தாத்-ன்ற பெருமை எனக்கு !"

"ரொம்பவும் ஆரோக்கிய மாச்சே இது எம் பையனுக்கு"..



"...விலையோ பலே பேஷ்-- 7 ரூபா மிச்சம் எம் பையிலே !"



"ருசியாயிருக்கா, படு துடியாப்பாலே குடிக்கறான் ராஜு. பண மிச்சம் பிடிக்கவா நான் நியூட்ரமுல் வாங்கறேன், அதான் இல்லே"

ISI தரம் உடைய ஒரே ஒரு கோக்கோ-மால்ட் பானமாக விளங்கும் நியூட்ரமுல் இப்போது பிறவற்றைவிட 7 ரூபா விலை குறைவு- எப்படி சாத்தியமாயிற்று இந்தச் சிக்கனம் ? விளம்பர, விற்பனைச் செலவுகளைக் குறைத்ததால்; உற்பத்தித் திறன்களை முடுக்கிவிட்டுப் புதுப்பித்ததால்... மிஞ்சும் லாபம் அனைத்தையும் உங்களிடம் சேர்ப்பிப்பதால். இனியும் நீங்கள் செயற்கைச் சுவையூட்டிய, ISI தரமில்லாத தயாரிப்புகளுக்குப் போய் அதிக விலை கொடுப்பானேன், நியூட்ரமுல் வஸ்தாதாக ஆகிவிடுங்களேன்.

நியூட்ரமுல்	ரூ. 13.34
போர்ன்விடா	ரூ. 20.48
மால்டோவா	ரூ. 20.45
பூஸ்ட்	ரூ. 21.57

மார்ச் '84 நிலவரப்படி 500 கி.கள். [illegible] போக உச்ச விலைகள். வரிகள் தனி.

மேலும் லாபமடைவீர் ! வாங்குவீர் பெருஞ் சிக்கன 1 கிலோ டின் அல்லது வசதியான 200 கிராம் டின்.



daCunha/GCM/108(A)/84/TM

மறுபடியும் காலேஜில் கதை ஆரம்பம். மெட்ராஸ் என்றால் எல்.ஐ.சி. கட்டிடத்தைக் காட்டுகிற மாதிரி, காலேஜ் என்றால் கான்டீன், கலாட்டா, தேர்தல், போட்டி, டிஸ்கோ பாடல் என்று மறக்காமல் கோர்த்திருக்கிறார்கள். தன்னை உதாசீனப்படுத்திய வனைக் காதலிக்கிற மாதிரி நடித்துக் கடைசியில் 'அடப் போடா' என்று கை கழுவி விடுகிற பாத்திரம் ஊர்வசிக்கு. கொழு கொழு என இளமையை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று புரியாமலேயே பாதி நேரம் விழித்திருக்கிறார்.

'காலேஜ் பையன்' — மோகன். ஓட்டப் போட்டியில் (மராத்தான் ரேஸ்) கெட்டிக்காரராம். ஓட ஓட விரட்டியிருக்கிறார்கள். சரியான கதையோ, சத்தான சம்பவங்களோ இல்லாமல் மோகன் மட்டும் என்ன செய்வாராம் பாவம்! கதை நகராமல் சண்டித்தனம். செய்கிற போதெல்லாம் இவர் ஓடுகிறார். காதல் நிஜமில்லை; ஒரு விளையாட்டுத் தான் என்று ஊர்வசி சொன்ன பிறகு மழையில் கொஞ்ச நேரம் நிதானித்து விட்டு நடையைக் கட்டுகிறார்.

இடைவேளைக்கு அப்புறமும் காலேஜ் சிச்சுவேஷனை விடக்கூடாதென்று மோகனைப் பம்பாய்க் கஸ்தூர்பா இங்கிலீஷ் புரொபஸராக்கியிருக்கிறார்கள். (தமிழில் பாடம் நடத்தும் இங்கிலீஷ் புரொபஸர்.) இந்த முறை ஊர்வசியின் தங்கையாய் வரும் இந்திராவுக்கு (இன்னும் பால் வடிவது நிற்காத முகம்) மோகனிடம் காதல். அக்காவுக்குமுகத்தில்விபத்து பெற்றுக் கொடுத்த தழும்பு. கொஞ்ச நேரம் கண்ணாமூச்சி காட்டிவிட்டு மோகன் —ஊர்வசி இணைகிறார்கள் (அந்த சினிமாக்ஸ் ரேஸைப் பார்த்து விட்டு உங்களுக்குச் சிரிப்பு பொத்துக் கொண்டு வரவில்லை யென்றால்... மாமி யாருடன் படத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்று அர்த்தம்.)

இளையராஜாவின் அரை டஜன் பாடல்கள். அதில் பாதி இனிமை. மீதி? டைரக்ஷன் பொறுப்பை மறந்து விட்டுப் பார்த்தால் ரஞ்சித் குமாரின் காமிரா இளமையான காட்சிகளை இதமாய்க் கவ்வுகிறது. அதுவும் அந்த மழை சீன் தான்!

ஜூனியர்பாலையா - ஜோரு காய்.

இந்த நிலையில் இவர் இப்படி நடித்திருக்காரே— அவர் பெயரைக் குறிப்பிடவில்லையே என்கிற வாசகர் குட்டுக்குத் தப்பிக்க வேண்டுமானால்— மேஜர் சுந்தர ராஜன் (தேவையா?) ஜான் மோகன், மனோரமா, வெண்ணிற ஆடை மூர்த்தி, பி. ஆர். வரலட்சுமி பிந்து கோஷ் தேவி ஆகியோரும் வந்து போகிறார்கள்.

மறக்காமல் ஒன்றைச் சொல்ல வேண்டும். 'பக்த மார்க்கண்டேயா' 'டிட்டோ பிரகலாதா' 'டிட்டோ துருவா' மாதிரியான படங்களுக்கு மட்டுமே பொருத்தக்கூடிய புவராஜ் என்கிற பால் முகத்தை அறிமுகப் படுத்தி இவர்தான் வில்லன் என்கிறார்கள். டைரக்டரோடு சேர்த்து இவரும் திசை புரியாமல் கடைசி வரை குழம்புவது தனி கதை!

-ஜெயமன்மதன்

அன்பே ஓடிவா!





இனிய ரசிகர்களுக்கு

நிலவு பூத்த ஒரு நேசமிகு மாலையில் உங்களின் அன்புள்ள மலரே!
அந்த மலரின் விகசிப்பு எங்கள் இதயங்களில் ஏற்றிவிட்ட பரவசங்களைப்பற்றின ஓர் அலசல் இது.
ஓர் அவசரக் காதலன் தனது சுற்றத்தைத் துறந்து பின்னிரவில் தனது கல்லூரிக் காதலியை மணப் பதிவு அலுவலகத்துக்கு அழைக்கும் காட்சியில்
உங்களது திரைக் காவியத்தைத் தொடங்குகிறீர்கள். நேரே மையத்திற்கு அழைத்துச் சென்ற அந்த நேர்த்தி குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று! பிறகு மின்னல் நடையுடன் கதையைப் புனைந்திருக்கிறீர்கள்.
உங்களுக்கு மிகப் பக்கபலமாய் பேபி அஞ்சு. அந்தப் பிஞ்சுக் குழந்தையின் எதிரில் தாய் 'கற்பழிக்கப்பட்ட' பிறகு ஏகாந்தமான அந்த வீட்டில் குழந்தை துணைக்காகப் பயந்து பயந்து மயங்கிய அன்னையை அழைப்பது க்ளாஸ்! ஸிம்பிளி க்ளாஸ்! அஞ்சுவுக்குத் தனியாக திருஷ்டி கழிக்கச் சொல்லுங்கள்.
அந்த வில்லக் கதாநாயகனை இதற்கு முன் திரையில் சந்தித்த நினைவே இல்லையெனினும் எழுந்து சென்று அவனை இரண்டாகப் பிளக்க வேண்டும் என்கிற உணர்வு வெளிப்படும் அளவு நடித்திருக்கிறார்.
அது சரி, இவ்வளவு பெரிய வாடிவண்டாக அவர் இருப்பதற்கு என்ன காரணம்?
சரத்பாபு ஸ்ரீவித்யா — பாங்கான குடும்பம். அதில் ஏற்படும் சிறு சலசலப்பு.
அது தெளியும் விதம். சீரான ஓட்டம். இருவருக்குமே இயல்பான நடிப்பு!
ஊட்டிப் பனி மூட்டத்தில் அகலக் கண் கொண்டு காமிரா அலையும்போது இயக்கியவர் யார் என்று இயல்பாகக் கேள்வி எழுகிறது. அசோக்குமார் சிரத்தை எடுத்துச் செய்திருக்கிறார்.
ஊசியால் குத்துகிற மாதிரி வசனங்கள். வெல் டன் மகேந்திரன்!
அப்புறம் அந்தச் சண்டைக் காட்சிகள். இத்தனை இயல்பான சண்டைக் காட்சிகளை எந்தத் தமிழ்ப் படத்திலும் சமீபத்தில் கண்ட நினைவு இல்லை. அமைத்த தியாகராஜனுக்கும் அவரைத் தேர்ந்தெடுத்த உங்களுக்கும் இதற்காகவே தனிப் பாராட்டுகள்.
இளையராஜாவோடு 'டூ' விட்டுக் கொண்டீர்களா என்ன? மனிதர் எத்தனை வகையாய் சர்க்கஸ்களைச் செய்கிறவர். இந்தப் படத்தில் எதையுமே காணோமே?
நெருக்கு டான்ஸ்—
ஒரு பத்துப் பெண்களை வைத்து கஜுராஹோ பாவனைகளுடன் நாட்டியத்தை அமைத்திருந்தது புருவங்களை உயர்த்த வைக்கிற புதுமைதான் என்றாலும் கூட — இதைப் பார்த்து எவ்வளவு மனங்கள் வக்கரித்துப் போகும்? இவ்வளவு வேண்டாமே ப்ளீஸ்!
மலரின் அண்மையில் சில உறுத்தும் முட்கள். கடைசிக் காட்சிகளில் சில எடிட்டிங் கோளாறுகள்!
ஒட்டவே ஒட்டாத (விரசம் என்கிற வார்த்தையை எட்டிப் பிடிக்க முயற்சி செய்கிற) நகைச்சுவைக் காட்சிகள்.
ஆனாலும் திரைக் கவிதையை முடிக்கிற வேளையில் எங்கள் மனங்களைக் கனமாக்கி அனுப்புகிறீர்கள் பாருங்கள். அதற்கவே மற்றவை மறக்கப்பட வேண்டும்.

நேசங்களுடன் ஜெயமன்மதன்

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ

இது க்ளாக் மற்றும் ரேடியோ இவற்றின் இணைப்பு மட்டுமல்ல...

கூடுதல் சிறப்புகள் பல கொண்டதாகும்.





படுக்கையறைக்கு ஒரு அழகுப்பொருள்

படுக்கையில் படுத்தவாறே இசையை அனுபவியுங்கள் (உறங்குவதற்கேற்ற ஒரு தனி சுகம்!). இது தானே நிறுத்திக் கொள்ளும். காலையில் தானே இயங்கி உங்களை எழுப்பும்.



வரவேற்பறையில் பல நிகழ்ச்சிகளை வழங்குவது

சக்திவாய்ந்த MW மற்றும் SW செட் ஆகிய இது பட்டனைத் தட்டிய மாத்திரத்தில் உலக நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது.



சமையலறையில் ஒரு உதவிப்பொருள்

பல்வேறு வேலைகளைச் செய்யும்போது சுவையான ஒலிபரப்பு நிகழ்ச்சிகளை வழங்குகிறது. குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது போன்ற முக்கிய வேலைகளை "பஸ்ஸர்" மூலம் நினைவூட்டுகிறது.



நம்பகமான உதவியாளர்

அலுவலகம், தொழிற்சாலை, கடை, வியாபார நிறுவனம்—எங்கிருந்தாலும் சரி—உங்களை நேரந்தவறாது வேலை புரிய செய்ய உதவி செய்து, திறமை வாய்ந்தவரென பெயரெடுத்துக் கொடுக்கிறது.



பரிசளிக்க உன்னதமான பொருள்

வாழ்த்து தெரிவிப்பதற்குப் பரிசளிக்க சிறந்த வழி! நிகழ்ச்சிகளைப் ஒலிபரப்புகிறது. அதே சமயம் புத்திசாலித்தனமாக நேரத்தைத் திட்டமிட்டு செயல்பட உதவுகிறது.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக் ரேடியோ, சக்தி வாய்ந்த ஒரு MW/SW செட் மற்றும் கனகச்சிதமான க்வார்ட்ஸ் கண்ட்ரோல் க்ளாக்கின் இணைப்பு மட்டுமல்ல...கூடுதல் அம்சங்கள் பல கொண்டதாகும்.

உதாரணமாக:

- கண்ணயர்ந்து விட்டாலோ தூங்கி விட்டாலோ அதைத் தானே நிறுத்திக் கொள்ள 'செட்' செய்து விடலாம் (கேட்கும் இசையே உங்களைத் தாலாட்டி விட்டாலும் கவலை இல்லை அல்லவா!)
- இசையுடன் இணைந்த அலாரம் உங்களைக் காலையில் எழுப்புகிறது. தொட்டால் போதும்—நீங்கள் மேலும் பத்து நிமிடங்கள் தூங்கலாம்.
- நாள் முழுதும், உங்கள் அலுவல்களை நினைவூட்டிக் கொண்டிருக்கும், (குழந்தையைப் பள்ளியிலிருந்து அழைத்து வருவது, லஞ்ச் அல்லது மீட்டிங் நேரம் முதலியவை)
- ரேடியோ மற்றும் அலாரத்தை முன்கூட்டி 'செட்' செய்து செய்திகளையோ உங்களுக்குப் பிடித்த நிகழ்ச்சிகளையோ கேட்கலாம்.

பிலிப்ஸ் க்வார்ட்ஸ் கண்ட்ரோல் ரேடியோவை மேலும் மேலும் உபயோகப்படுத்தும் போது நீங்கள் ஒப்புக்கொள்வது...அது பல சிறந்த அம்சங்கள் கொண்ட ஒரு எலெக்ட்ரானிக் அதிசயம் என்பதே. அழகு மற்றும் அறிவின் இணைப்பு.

பிலிப்ஸ்

வழங்குவோர் பிலிப்ஸ்.
50 ஆண்டுகளுக்கும் மேலாக
இந்தியாவில் இல்லங்களெல்லாம்
முழங்கும் நம்பகமான பெயர்

PHILIPS

CASPR-929-203 TAM

சொல்லி விட வேண்டியதுதான். இனியும் சொல்லாமலிருப்பது ஆஷாவுக்கிழைக்கும் அநீதியாகும்.

சொல்லத் தயங்கித் தயங்கி இதோ ஒரு வருட காலம் நழுவிப் போய் விட்டது. இனியும் கால தாமதம் செய்வதனால் யாருக்கும் எந்த லாபமுமில்லை.

அவனால் ஆஷாவைத் தவிர வேறு எந்தப் பெண்ணையும் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இந்த இருபத்தெட்டு வயது வரை எந்தப் பெண்ணும் அவனை இப்படி ஈர்த்ததில்லை.

ஆஷா அழகாக இருப்பாள். அவனுடைய அலுவலகத்தில்தான் அவளும் வேலை செய்கிறாள். வேறு டிபார்ட்மெண்ட், அவ்வளவுதான்... வேலை விஷயமாகவும், பின் கான்டீனிலும் வளர்ந்த நட்பு காதலாக மாறினது அவனுடைய அதிர்ஷ்டம்தான்.

அப்படித்தான் அவன் நினைத்தான். தான் மிகமிக அதிர்ஷ்டசாலி என்று....


ஆஷாவும் அவனை விரும்புகிறாளே. இதை விட அதிர்ஷ்டம் கிடைக்கத்தான் முடியுமா?

சிறு வயதில் பெற்றோர்களை இழந்தவள் ஆஷா. இப்போது, அண்ணன் வீட்டில் தங்கும் இருபத்தைந்து வயதுப் பெண்... கலப்புத் திருமணத்துக்குத் தடை விதிக்கக் கூடிய வயதானவர்கள் அங்கு இல்லை.

ஆனால் அவனுடைய பெற்றோர் இருக்கிறார்களே! சம்பிரதாயங்களில் ஊறிப்போனவர்கள் — உத்தரப் பிரதேசத்திலிருந்து வந்த மாட்டுப் பெண்ணை ஏற்க அவர்களால் சட்டாயம் முடியப் போவதில்லை. அதற்காக அவனால் தன் காதலைத் துறக்க முடியுமா? ஆஷாவை மணந்தால் மனம் விரும்பிய மனைவி கிடைப்பாள்... இருவரும் சம்பாதிப்பதால் வாழ்க்கை வளமாக அமையும்.



நோ ப்ராப்ளம்



இதன் மூலம் பெற்றோருக்கு எந்தவிதமான அநீதி இழைப்பதாகவும் சொல்ல முடியாது. அவனுடைய சம்பாத்தியத்தில் அப்பாவோ, அம்மாவோ பத்துப் பைசா கேட்பதில்லை, அவன் அளித்தால் பெற்றுக் கொள்வதுமில்லை. ''ஏதோ தற்சமயம் நானும் டெல்லியில் வேலை பார்க்கிறேன், நீயும் டெல்லியில் வேலை பார்க்கிறாய்... உனக்கு இரண்டு வேளை சாதம் போட பகவான் கிருபையில் என்னால் முடியும்!'' என்பார் அப்பா... ''நல்லவேளை உன் கையை எதிர்பார்க்கிற நிலைமை எங்களுக்கில்லை... அப்பா சம்பாதிக்கிறார்... கிராமத்தில் வீடும் நிலமும் இருக்கு... அப்பா ரிடையரானப்புறம் கூட ரெண்டு வயத்துக்கு எதேஷ்டம்... எங்க காலத்துக்குப் பிறகு உனக்குத்தான் வீடும் நிலமும்!'' என்பாள் அம்மா பட்டுக் கத்தரித்தாற் போல்... பின், சிரித்துக் கொண்டே, ''நாலு காசு சேர்த்து வை ரவி... பெண்டாட்டி வந்தால் அவள் ஆசைப்படற நாலு சாமானை வாங்கித் தரலாம், மாமனார் கையை எதிர்பார்க்காமல்!'' என்பாள்.

பின். என்ன தயக்கம்? சொல்லிவிட வேண்டியதுதான்!

அப்பாவுக்கோ அம்மாவுக்கோ ஆட்சேபிக்க உரிமையே கிடையாது. அவன் ஆஷாவை மணந்து கொண்டால் என்ன, லக்ஷ்மி சரஸ்வதி என்று யாராவது தமிழ்ப் பெண்ணை மணந்து கொண்டால் என்ன? அவனோடு வாழப் போகிறவன் அவன்தானே! ஒரு வாலிபனுக்குத் தன் விருப்பப்படி மணம் புரிந்து கொள்ள உரிமை இல்லையா என்ன? இதை அப்பாவோ அம்மாவோ மறுக்க முடியுமா?

ஆஷாவுக்குத்தான் கஷ்டம். பாவம், இந்த வயசானவர்களோடு அவளால் இருக்க முடியாது. அட்ஜஸ்ட் பண்ணி வாழ முடியாது... அப்படி வாழச் சொன்னால், அது வீண் மனத்தாங்கலை விளைவிக்கும். அநாவசிய பிரச்சினைகளை எழுப்பும்.

ஒரு டாக்டரை உருவாக்க இந்திய அரசு 1,50,000 ரூபாய்களை செலவு செய்கிறது. இவ்வாறு படித்துவிட்டு டாக்டர்கள் வெளிநாடுகளில் குடியேறி விடுவதால் இந்தியாவிற்கு நஷ்டம் மேலும் 3,30,000 ரூபாய். இதனால் அந்நிய நாடுகளுக்கு லாபம் 51,70,000 ரூபாய். —ஐ. ஐ. டி. தகவலின்படி.

ஜா.ரவி.



வேண்டாம்... தனியே போய்விட வேண்டியதுதான்... தனிக் குடித்தனம். இதில் என்ன கஷ்டம்? பிரச்னையே இல்லை... நோ ப்ராப்ளம்...

அப்பா நாளுக்கு ஐந்து தடவை ராம நாமத்தை வாய்விட்டு ஜபிப்பார்... அதில் ஒரு திருப்தி... என்னதான் திருப்தியோ? அவன் தன் சிநேகிதர்களோடு வரும் போதெல்லாம் அவமானப்பட்டுக் கூட இருக்கிறான். அவருடைய ''பழங்கால'' வழக்கங்களைக் கண்டு... ஆஷாவுக்கு இதெல்லாம் சரிப்பட்டு வராது... அவளுடைய அண்ணன் வீட்டில் பூஜை பூதம் என்றெல்லாம் எதுவும் கிடையாது... ''சத் சங்''கைச் சேர்ந்தவர்களாம். ஆஷாவுக்கு இதில் அலாதி பெருமை... தவிர, அம்மாவோ ஒன்பது கஜப்புடவைதான் சட்டுகிறாள் இந்த டெல்லியில் கூட.. அப்படியே கடைக்கண்ணிக்கும் கிளம்பி விடுவாள்... பான்ட்-ஷர்ட், ஸல்வார் கமீஸ் என்றிருக்கும் ஆஷாவுக்கு இது பிடிக்கவே பிடிக்காது. . தனிக் குடித்தனம் வைத்துவிட்டால் ஆஷாவுக்கு எந்தவிதமான கஷ்டமும் இருக்காது. நோ ப்ராப்ளம்...

ஒன்றாய் இருந்தால் சாப்பாட்டு விஷயத்திலும் ஆஷா திண்டாடிப் போய் விடுவாள்... அவளுக்கு மசாலா சப்ஜிதான் பிடிக்கும்... அவசியம் சப்பாத்தி வேண்டும். சாதம் என்றாலே முகம் சுளிப்பாள்... அடையும் அரிசி உப்புமாவும், பொரித்த ரசமும், வத்தல் குழம்பும்... அவளால் முடியவே முடியாது. தனியே போய் விட்டால் இந்தப் பிரச்னையே இல்லை... மாமனார் மாமியாரின் ஏச்சுப் பேச்சுக்குப் பயப்படாமல் அவள் தன் இஷ்டப்படி சமைக்க முடியும்.

அவனை நம்பி மணக்கப் போகும் பெண் அவள். கஷ்டப்படலாமா? தனிக் குடித்தனம் எல்லாப் பிரச்சினைகளுக்கும் அழகான, கச்சிதமான, விடை.... தனிக் குடித்தனம் வைப்பதிலும் கஷ்டமில்லை. நோ ப்ராப்ளம். ஆபீஸுக்குப் பக்கத்தில் வீடு பார்த்துக் கொள்ளலாம். அப்பா வசிக்கும் இதர் காலத்து அரசாங்க குவார்ட்டர்ஸில் ஒண்டிக் கொள்ள வேண்டாம்... ஆஷாவும் சம்பாதிப்பதால் வாடகை கொடுப்பது கையைக் கடிக்காது.

சரி, சொல்லிவிட வேண்டியதுதான்... ''அப்பா, அம்மா! ஆஷான்னு உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பெண்... நான் அவளைக் கல்யாணம் பண்ணிக்கப்போறேன்.. தனிக்குடித்தனம் வைக்கப் போறேன், அவளுக்குக் கஷ்டமில்லாமல்!'' என்று சொல்லிவிட வேண்டியதுதான்.

ரவி தன் பெற்றோரிடம் சொன்னான்: ''அப்பா, அம்மா! உங்களிடம் ஒரு விஷயம் சொல்லணும். ஆஷான்னு உத்தரப்பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு பெண்... நான் அவளை...''

அப்பாவின் குரல் குறுக்கிட்டது... ''தெரியும் ரவி... உன்னையும் அவளையும் பத்தி நானே நிறையக் கேள்விப்பட்டிருக்கேன்... இதைப் பத்தி உன்னோடு பேசணும்னு நினைச்

சேன்... நீயாகச் சொன்னதில் எனக்குப் பரம சந்தோஷம்.''

''அவளைத்தான் நான் கல்யாணம் பண்ணிப்பேன் அப்பா... இந்த விஷயத்தில் யார் என்ன சொன்னாலும் நான் கேட்க மாட்டேன்...''

''அவளைப் பண்ணிக்கிறதா வாக்குக் கொடுத்திருக்கியா?''

''ஆமாம்...''

''அப்படின்னு கட்டாயம் அவளைப் பண்ணிக்க வேண்டியதுதான்... நம்பின பெண்ணைக் கைவிடறது மகாபாவம்!''

ஒருகணம் ரவி திகைத்தான். பின், சமாளித்துக் கொண்டான்... ''ஆனால் ஒரு விஷயத்தை மட்டும்...''

''பொறு, பொறு''! அப்பாவின் குரல் மறுபடியும் குறுக்கிட்டது. ''உன் அம்மாவும் நானும் இதைப் பத்திப் பேசி ஒரு தீர்மானம் பண்ணியிருக்கோம்... நீ அதை முதலில் கேட்கணும்... புரிஞ்சுக்கணும்...''

இப்போது அம்மா பேசினாள்... ''ரவி... உன் அப்பாவும், நானும் சில பழக்க வழக்கங்களோடு, கட்டுப்பாடுகளோடு வாழ்ந்துட்டோம்... பூஜை, விரதங்கள்னு ஒரு நியமப்படி இருக்கோம்... எங்களைப் பொறுத்தவரை சந்தோஷமாய் இருக்கோம். வரப்போகிற பெண்ணுக்கு அதெல்லாம் புரியவும் புரியாது, ஒத்து வரவும் வராது... அதுக்காக நாங்கள் இந்த வயசில் மாற முடியுமா, சொல்லு!''

அப்பா தொடர்ந்தார். ''ட்ரெஸ் விஷயத்தையே எடுத்துக்கோ... அம்மா உடுத்தறது ஒன்பது கஜப் புடவை. முதுகைப் போர்த்திக்காமல் வெளியே போக மாட்டாள்.... அப்படியொரு பழக்கம்... மாட்டுப் பெண்ணின் உடுப்பு ஜீன்ஸும் பைஜாமாவும் என்கிறதை அவளால் சுலபத்தில் ஏற்க முடியுமா?''

மறுபடியும் அம்மா பேசினாள்: ''சாப்பாட்டு விஷயத்திலும் பிரச்னை இருக்கு ரவி.. நாங்கள் மடி, உபவாசம்னு இருக்கிற நாட்களிலே அவள் பூண்டும், வெங்காயமுமாய் மசாலா அரைச்சால் எங்களுக்குத் தாங்குமா? இல்லே, வீட்டுக்கு வந்த பெண்ணை, ''நீ பிறந்து வளர்ந்ததையெல்லாம் மறந்துட்டு நிமிஷத்தில் மாறியே தீரணும்னு சொல்லத்தான் முடியுமா?''

இப்போது ரவி குழம்பினான். என்ன சொல்கிறார்கள் இவர்கள்? அவன் நினைத்ததையேதான் சொல்கிறார்கள்... ஆனால் ஏன் வேறு மாதிரி தொனிக்கிறது?

அப்பா மிகமிக மிருதுவான குரலில் தொடர்ந்தார். ''இதையெல்லாம் யோசிச்சுப் பார்த்து நாங்கள் ஒரு முடிவுக்கு வந்திருக்கோம் ரவி... நீ உன் இஷ்டப்படியே அந்தப் பெண்ணைக் கல்யாணம் பண்ணிக்கோ... ஆனால், அதுக்கு முன், சின்னதாய் ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்துக்கோ... எங்களுக்கும் சிரமம் தாங்கற வயசில்லே, ரவி!''

அவர் நிறுத்த, அம்மா தொடர்ந்தாள். ''எங்களால் இந்த வயசுக்கு மேல் மாற முடியாது ரவி... தனிக் குடித்தனம் வைக்கச் சொல்றோமேன்னு நீ வருத்தப்படக்கூடாது.

பட்டுப் புடைவை பரிசுத்திட்டம்

(எல்லா வாசகர்களும் கலந்து கொள்ளலாம்; பெண்களுக்காக மட்டுமல்ல)



போட்டி 5: மறக்கமுடியாத ஆரம்ப வரிகள்:

எத்தனையோ சிறுகதைகள், நாவல்களைப் படிக்கிறீர்கள். ஆரம்ப வரிகளிலேயே உங்களை ஒரு கதாசிரியர் கவர்ந்திருப்பார். அவர் பெயரைக் குறிப்பிட்டு அந்த ஆரம்ப வரிகளைக் கீழே உள்ள வெற்றிடத்தில் எழுதி இந்த அரைப்பக்கத்தைக் கத்தரித்து அனுப்பவும். உறையின் மேல் ''ஆரம்ப வரிகள்'' என்று குறிப்பிடவும். ரசமான ஆரம்ப வரிகள் கல்கியில் பிரசுரமாகி சன்மானம் பெறும். தவிர குலுக்கல் முறையில் ஒரு வாசகருக்குப் பட்டுப் புடவை பரிசும் கிடைக்கும்.

முடிவு தேதி: 18-6-84.

நினைவிருக்கட்டும், 48 பட்டுப் புடவைகளுள் ஒன்றை நீங்கள் பெற வாய்ப்புண்டு. வாரம் தவறாமல் போட்டிகளில் பங்கு பெறுங்கள்.

என் பெயர் : ....

விலாசம் : ....

இப்போது...கோத்ரெஜ் உருவாக்கியுள்ள புதிய சோப்
உங்கள் கவனிப்புக்கிணையாக சருமத்தைக் காத்திடும்



Godrej நிமின்

தூய வேப்பெண்ணெயின்
இயற்கை குணம் கொண்ட சோப்.

நீம், மார்கோஸா எனப்படும் வேப்பிலை சரும தொல்லைகளை விரட்ட இயற்கை தந்த வரப்பிரசாதம். தொடர்ந்து வேப்பிலை உபயோகித்தால் உங்கள் சருமம் பளபளப்பாகவும் தெளிவாகவும் விளங்கும்.

கோத்ரெஜ், தூய வேப்பெண்ணெயை நிமின் சோப்பில் கலந்துள்ளது. உங்கள் சருமத் தொல்லைகளை குளித்து ஒழிக்க ஒரு புத்துணர்ச்சியூட்டும் டாய்லெட் சோப். கோத்ரெஜ் தரும் நிமின் வெகுவாக நீடித்து நிற்கும். ஏனெனில் மற்ற வேப்பிலை சோப்புகளைப் போல கொள கொளவென மாறுவதில்லை.

சருமத் தொல்லைகளை அகற்றிடுக
ஆரோக்கியமும் இயற்கைப் பொலிவும் பெற்றிடுக.

CHAITRA-B G 226 TAM

உன் கல்யாணம் மங்களகரமாய் அமையற துக்கு இதுதான் ஒரே வழி...''

''ரவி, உன் நன்மையை, சந்தோஷத்தை நினைச்சுத்தான் நாங்கள் இப்படியொரு முடிவு எடுத்திருக்கோம்... வேறு ஜாதி மாட்டுப் பொண்ணுன்னு நாங்கள் குறை படறதில் அர்த்தமில்லை... நான் டெல்லிக்கு வராமல் கிராமத்திலேயே இருந்திருந்தால், நீயும் அங்கேயே வேலை பார்த்திருந்தால், இப்படியொரு நிலைமை ஏற்பட்டிருக்குமோ, என்னவோ?'' அப்பாவின் குரலில் வருத்த மில்லை, அமைதியும் நிதானமும் தான் இருந் தன...

ரவிக்கு வார்த்தைகள் வரவில்லை. தனிக் குடித்தனம் என்பதை ஏதோ அஸ்திரமாகப் பிரயோகிப்பதாய் நினைத்திருந்தானே! ஆஷா வின் பிரச்னைகளையே நினைத்து உருகினானே. பிரச்னைகள் தன் பெற்றோருக்கும் இருக்கின் றன, அவற்றிலிருந்து நிவாரணம் தேடும் உரிமை அவர்களுக்கும் இருக்கிறது என்பதை ஏன் மறந்து போனான்?

''என்ன ரவி, எங்கள் சஜ்ஜெஷன் உனக்கு சம்மதமா? நீ அடிக்கடி சொல்வாயே, ''நோ ப்ராப்ளம்''னு, அந்தச் சுகம் உனக்கு நிரந்தரமாய் இருக்கணும் என்கிற துக்காகத்தான் இந்தச் சஜ்ஜெஷன். சம்ம தம்னு சொல்லு... உன்னை ஆசீர்வதிக்க ஆவலோடு இருக்கோம்...''

ரவி தன் பெற்றோரின் முகங்களைப் பார்த்தான். பின், அன்பும் மரியாதையும் கலந்த குரலில், ''நோ ப்ராப்ளம்'' என்றான்.



தம்மைக் காண வந்த ஒரு பிரபல ஆயுர்வேத மருத்துவரிடம் காந்திஜி கேட்டார்: ''ஆயுர்வேதத்தால் எல்லா நோய்களையும் குணப்படுத்த முடியுமா?''

''ஓ! பேஷாகக் குணப்படுத்திவிடலாமே!''

''அப்படியெனில், 'தீண்டாமை' என்ற நோய் தீர ஏதாவது மருந்து கொடுங்கள் பார்க்கலாம்!'' மருத்துவர் சிரித்து விட்டார்.

• • •

'எப்பொருள் எத்தன்மைத்தாயினும்' குறளுக்கு ஒருமுறை வினோபாஜி சொன்ன விளக்கம்: ''ஒரு எம். எ ஏ. என்னுடன் யாத்திரையில் கலந்து கொள்கிறார். பார்த்தால் பூதான இயக்கத்தில் அவர் மிகுந்த அக்கறையுள்ளவர் போலத் தோன்றும். ஆனால் உண்மையில் அவர் தமது எம். எல். ஏ. பதவியை ஸ்திரப்படுத்திக் கொள்ளவே உடன் வருகிறார். இதுதான் மெய்ப்பொருள். இதனைக் கண்டு கொள்வதுதான் அறிவு.''



'தி அட்லாண்டிக்' என்ற அயல்நாட்டுப் பத்திரிக்கை, 'இன்றைய இந்தியா' என்று ஓர் சிறப்பு மலர் வெளியிட எண்ணி, நிருபரை இந்தியாவுக்கு அனுப்பியது. நிருபர் நேருவிடம், 'ஒரு கட்டுரை எழுதித் தர முடியுமா?' என்றார். நேருவோ, ''என்னை ஜெயிலுக்குப் போகச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டார்.

''ஏன் இப்படிச் சொல்லுகிறீர்கள்?''—நிருபர்.

''நான் ஜெயிலில் இருக்கிறபோதுதானே, எழுத நேரம் கிடைக்கிறது?'' என்றார் நேருஜி.



• • •

பாபு ராஜேந்திரப்பிரசாத் ஒருதடவை படகில் பயணம் செய்கையில், எதிரே ஓர் இளைஞன், புகைப்பிடித்துக் கொண்டிருந்தான் ஓயாமல். புகை நெடி அவரை வாட்டியது.

''தம்பி சிகரெட் உன்னுடையதுதானே?'' என்று பாபு கேட்க,

''என்னுடையதில்லாமல், பின்னே உன்னுடையதா?'' என்றான் இளைஞன் முறுக்காய்.

உடனே பிரசாத் கேட்டார். 'சிகரெட் உன்னுடையதெனில், புகையும் உன்னுடையதுதானே! அதை மட்டும் ஏன் அடுத்தவர் மீது விடுகிறாய், நீயே வைத்துக் கொள்ளாமல்?'' இளைஞன் சிகரெட்டை தூர எறிந்தான்.

• • •

ஆப்ரகாம்லிங்கன் சொன்ன குட்டிக்கதை இது:

மன்னன் ஒருவன் வேட்டையாடப் புறப்படும்முன் அமைச்சரிடம், ''இன்று மழை வருமா?'' என்றான். அமைச்சர், ''வராது'' என்றதும் வேட்டைக்குப் புறப்பட்டான்.



மேதைகள் தமாஷ்



போகிற வழியில் ஒரு குடியானவன் கழுதை மேல் வந்து கொண்டிருந்தான். அவன் மன்னனை, மழை வரும் என்று எச்சரித்தான். கேட்காமல் வேட்டையாடப் போகுன் மன்னன். நல்ல மழை கொட்ட, மன்னன் நனைந்தான்.

திரும்புகையில் குடியானவனிடம், 'மழை வரும் என்று உனக்கு எப்படித் தெரியும்?' என்முன். அவனோ, ''எனக்குத் தெரியாது. ஆனுல் என் கழுதைக்குத் தெரியும். மழை வருமெனில் அது காதை முன்பக்கம் நீட்டிக் கொள்ளும்'' என்முன்.

அரண்மனை திரும்பிய மன்னன், அமைச்சரை பதவியிலிருந்து நீக்கி, கழுதையை அமைச்சராக்கினன்.

அதுமுதல் நாட்டில் எல்லாக் கழுதைகளும், ஏதாவது ஒரு பதவிக்கு அலைகின்றன!

• • •

ஆங்கில டிக்ஷனரி தயாரித்த சாமுவேல் ஜான்சனிடம் இரு அழகிய பெண்கள்



வந்து, இரண்டு அசிங்கமான வார்த்தைகளை சொல்லி, 'இவற்றை அகராதியில் சேர்க்காமல் விட்டதற்கு நன்றி' என்றனர். அதற்கு ஜான்சன் கேட்டார்: ''ஏன் நீங்கள் அந்த வார்த்தைகளைத் தேடினீர்களா?''

• • •

ஜார்ஜ் பெர்ஞட்ஷா ஒரு விருந்துக்குப் போனுர். அங்கே பார்த்த ஓர் இளம்



பெண்ணுடன் மணிக்கணக்கில் பேசினுர். எல்லாம் தம்மைப் பற்றிய சுயப்பிரதாபம். கடைசியாகச் சொன்னுர்: ''சரி, பெண்ணே! இதுவரை நான் என்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்து விட்டேன் இனி உன்னைப் பற்றிப் பேசலாம். என் கடைசி நாடகம் இருக்கிறதே! அதைப்பற்றி நீ என்ன நினைக்கிறுய்?''

• • •

பண்டிதமணி கதிரேசன் செட்டியார் சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். பெண்கள் பகுதியிலிருந்து ஓயாத சத்தம், நாசூக்காக எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் பயனில்லை. பண்டிதமணி ''பெண் மணிகள் அல்லவா? அதுதான் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கிருர்கள்'' என்றதும் கப்சிப்!

'மேதைகள் தமாஷ்' என்ற புத்தகத்திலிருந்து தொகுப்பு: எஸ். இந்திரா



சொல் ஒன்று வேண்டும்

அனுராதா ரமணன்

21

எத்திராஜ், பரந்தாமன் முன் நீட்டிய சிலேட்டில் ஆஸ்பத்திரி விலாசம் 'பளிச்' செனத் தெரியவில்லை. யாரோ, விரலால் தேய்த்து அழித்திருந்தார்கள். இருந்தாலும் என்ன எழுதியிருந்தது என்பதை ஊகிக்க முடிந்தது.

''இது எங்கேயிருந்து கிடைச்சது எத்திராஜ்...?''

''கார் மெக்கானிக் ஒருத்தனைப்பார்க்கப் போயிருந்தேங்க... பெரிய ஸ்டோர்லே ஒண்டுக் குடித்தனம் இருக்கான் அவன்... அக்க வீட்டு வாசல்லே ஒரு பொண்ணு, இந்த சிலேட்டை வச்சுட்டு பொம்மை வரைஞ்சு பார்த்துக்கிட்டு இருந்தது. சிலேட் டோட பின் பக்கத்துல இந்த அட்ரஸ் எழுதியிருந்ததுங்க... அந்தப் பொண்ணை, சிலேட்டைக் கொஞ்சம் கொடும்மான்னு கேட்டேன். மிரள மிரள விழிச்சது... உடனே என்ன தோணிச்சோ, சிலேட்டைத் திருப்பிப் பார்த்தது... அவசர அவசரமா எச்சிலைத் தொட்டு, எழுத்தை அழிச்சது... அப்படியே சிலேட்டோட எழுந்து ஓடப் பார்த்தது... நான்தான் சிலேட்டைப் பிடுங் கிட்டு வந்தேன்...''

''த்சு...''

பரந்தாமன் அலுத்துக் கொள்கிறார்.

''நீ ஏமாந்துட்டே எத்திராஜ்... எப்ப இந்த சிலேட்டை ஒரு பொண்ணு கையிலப் பார்த்தியோ — முதல்லே, அந்தப் பெண்ணை தான் பிடிச்சிருக்கணும். அதுதான் புத்தி சாலித்தனம். வெறும் சிலேட்டை வச்சுட்டு என்ன பண்றது...''

''இப்பக் கூட ஒண்ணும் மோசமில்லே... ரெண்டு கான்ஸ்டபிளை என் கூட அனுப் புங்க... அந்தப் பொண்ணை மாத்திர மில்லே... அதுங் குடும்பத்தையே பிடிச்சுத் தரேன்...''

பரந்தாமன் எத்திராஜை பார்த்து, 'அட அப்பாவி மனுஷா' என்பது போலச் சிரிக்கிறார்.

''உன்னை விடவும் அவங்களுக்குப் புத்திக் கூர்மை அதிகமாயிருக்கும் எத்திராஜ்.... இத்தனை நேரம், அவங்க அங்கேயே உட் கார்ந்துட்டிருப்பாங்கன்னு நினைக்கறே.... சிட்டாப் பறந்திருப்பாங்க... எதுக்கும் ரெண்டு கான்ஸ்டபிளை உன் கூட அனுப்ப றேன். போய்ப் பாரு...''

பரந்தாமன் சொன்னது நிஜம்தான். எத்திராஜ் போலீசுடன் ஸ்டோருக்குப் போன போது — அந்த கடைசி போர்ஷன் கதவுகள் விரியத் திறந்து கிடந்தது. சட்டிப் பானைகளைத் தவிர, அங்கு வேறெதுவுமே இல்லை. சுத்தமாய்த் துடைத்து வைத்திருந் தது.

''ஆயாவும், சின்னப் பொண்ணும் அப் பவே கிளம்பி வெளியே பூட்டாங்களே... எப்ப வருவாங்களோ தெரியாது...''

தலைகுனிந்தபடி தன்னெதிரில் நின்ற எத்திராஜை, முதுகில் தட்டிக் கொடுக் கிறார் பரந்தாமன்.

''வருத்தப்படாதே. இன்னொரு சந்தர்ப் பம் கிடைக்கும். அப்பவாவது ஏமாறாம விழிப்போடு இரு!''

இதோ—அவர் சொன்ன அடுத்த சந்தர்ப் பமும் வந்தேவிட்டது.

ஆஸ்பத்திரி வாசலில் கார் நின்றதும், அது நேரம் வரையில் அடைத்து வைக்கப் பட்டிருந்த புலிக்குட்டி போல, வெளியே பாய்கிறார் பரந்தாமன்.

காருக்குப் பின்னாலேயே உறுமிக்கொண்டு வந்து நின்ற போலீஸ் ஜீப்பைக் கண்டதும் பதறிப் போகிறாள் விஜி.

இத்தனைக்கும் நடுவில் உமாவின் அலறல் வேறு...

''ஐயோ... அம்மா...''

''ஐயோன்னு சொல்லாதே என் தங்கமே. கடவுளை நினைச்சுக்க... அம்பிகையை நினைச்சுக்க... பிரசவம் நல்லபடியா ஆகட் டும்... மலைக்கோட்டை தாயுமானவ ஸ்வாமி சன்னதியிலே குலையோட வாழைத் தார் வாங்கிக் கட்டறேன்...''

மீனாட்சி, மருமகளின் தோளை ஆதர வுடன் பிடித்து, காரிலிருந்து இறங்க உதவி செய்கிறாள்...

ஆஸ்பத்திரி வாசலிலேயே குடும்ப லேடி டாக்டர்...

''ஸ்ட்ரெச்சர் எங்கேப்பா... சீக்கிரம் கொண்டாங்க...''

டாக்டரம்மாவுக்குக் குரல் பெரிசு... அடுத்த குரல் வருவதற்குள், உமாவை ஆபரேஷன் தியேட்டருக்குள் கொண்டு செல்ல, சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்ட் ரெச்சர் வருகிறது...

உமா அதில் ஏறிப் படுத்துக் கொண்ட தும் வண்டி, ஆபரேஷன் தியேட்டரை நோக்கி நகர... வண்டியின் பின்னாலேயே

கிளம்பிய டாக்டரை, பரந்தாமனின் குரல். சற்று தயங்க வைக்கிறது...

''டாக்டர்... தியேட்டருக்கு உள்ளே நுழைய எத்தனை வாசல் இருக்கு...''

''ஏன் கேட்கறீங்க... மெயின் என்ட்ரன்ஸ் இதுதான். இதைத் தவிர, சைடுல ஒரு வாசல்... வார்டு பாய், தியேட்டரை சுத்தம் பண்ற ஆயா வந்து போக...''

''அந்த இடத்தைக் காட்டுங்க...''

பரந்தாமன், தன் பின்னால் நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டருக்கும், போலீசுக்கும் கட்டளையிடுகிறார்...

''ஹாஸ்பிடல்லே சுத்தி ஒரு இஞ்ச் விடாம வளைங்க... எங்கே அவனைப் பார்த்தாலும் கால்லே சுடுங்க...''

''ஐயோ!''

மீனாட்சி, நிலைமையைப் புரிந்து கொண்டவளாய் இரைந்து கூச்சலிடுகிறாள்.

''நீங்க போகலாம் டாக்டர்... இந்த டெலிவரி முடியற மட்டும் ஹாஸ்பிடலைச் சுத்தி போலீஸ் பாதுகாப்பு போட வேண்டியிருக்கு. தியேட்டருக்குள்ளே, என்ன அசம்பாவிதம் நடந்தாலும், உடனே காலிங் பெல்லை அழுத்துங்க...''

அது நேரம் வரையில் மிடுக்குடன் வளைய வந்த டாக்டரின் முகத்தில் திடீரென ஒருவித மிரட்சி...

''எனி திங் ராங்...?''

''இப்ப என்னால ஒண்ணும் சொல்ல முடியல்லே டாக்டர்... ப்ளீஸ், நீங்க போய் என் மருமகளை கவனிங்க... அவ அழறதை என்னாலத் தாங்க முடியல்லே...''

பரந்தாமன் கெஞ்ச — டாக்டர் தியேட்டருக்குள் பிரவேசிக்க...

அங்கே அவர் கண்ட காட்சி...

ஸ்ட்ரெச்சரைத் தள்ளி வந்த வார்ட் பாய் இருவரில் ஒருவன் தன் முகத்தில் கிருமிகள் படாமல் இருப்பதற்காகக்கட்டியிருந்த வெள்ளைநிற கைக்குட்டையை ஒரு கையால் அவிழ்த்தபடி, இன்னொரு கையில் வைத்திருந்த பளபளக்கும் கத்தியை, டாக்டர் நர்சுகள், இருந்த பக்கம் சுழற்றிக் கொண்டிருக்கிறான்... அவனோடு, வண்டியைத் தள்ளிக் கொண்டு வந்த இன்



அருள்வாக்கு

மநுஷ்யனின் ஆத்மாபிவிருத்திக்கு ப்ரதிகூலமாக வெறும் லௌகீக ரீதியில் செய்கிற எந்த உபகாரமும் உபகாரமேயில்லை, அபகாரம்தான். எத்தனைக்கெத்தனை எளிமையாக வாழ்கிறோமோ அத்தனைக்கத்தனை ஆத்ம க்ஷேமம். ஆனதால் மற்றவர்கள் எளிய வாழ்க்கையில் இருக்கும்படியாகப் பண்ணுவதுதான் நிஜமான உபகாரம். இதை எப்படிப் பண்ணுவது? நாம் டாம்பீகமாக வாழ்ந்து கொண்டு அவர்களுக்கு உபதேசம் செய்தால் நடக்குமா? ஆகையால் நாமே எளிமையாக வாழ்ந்து காட்ட வேண்டும். அதாவது, 'நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே பிறரும் வாழவேண்டும் என்று நினைப்பதற்கு முந்தி, நாம் எப்படி வாழ வேண்டும் என்பதையும் தீர்மானம் பண்ணிக் கொள்ளவேண்டும். 'ஏழைகள் உள்பட மற்றவர்கள் எல்லோரும் எப்படி வாழ முடியுமோ, எப்படி வாழ்ந்தால் தான் ஆத்மாபிவிருத்திக்கு நல்லதோ, அப்படித்தான் நாமும் வாழ வேண்டும்; அதாவது ரொம்ப ஸிம்பிளாக வாழ வேண்டும்' என்று முதலில் தீர்மானம் பண்ணிக் கொள்ள வேண்டும்.

வயிறு நிரம்பச் சாப்பாடு, மானத்தைக் காப்பாற்றத் துணி, இருப்பதற்கு, ஒரு குச்சு வீடு — இம்மாதிரியான அடிப்படை (basic) தேவைகள் எல்லோருக்கும் பூர்த்தியாக வேண்டும். இதற்கு மேல், ஆசைக்கு மேல் ஆசை, தேவைக்கு மேல் தேவை என்று பறக்க வேண்டியதில்லை. அப்படி மற்றவர்களைப் பறக்காமல் இருக்கச் செய்வதற்காக நாமும் எளிமையாக வாழ வேண்டும்.

-ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடி
சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி
சங்கராசார்ய ஸ்வாமிகள்



நெரு வார்டு பாய் நடுங்கியபடி ஒரு மூலையில்...

"சத்தம் போட்டீங்க... கத்தி யார் மேலப் பாயும்னு சொல்ல முடியாது..."

அவன் அவர்களைப் பார்த்தபடியே, தியேட்டரின் மையத்தில் போடப்பட்டிருந்த நீள் மேஜையில், வலியில் துடித்துக் கொண்டிருந்த உமாவை நெஞ்சோடு அணைத்துக் கொள்கிறான்.

அந்த ஸ்பரிசம்...

உமாவின் பிரசவ வலியைக் கூடச் சற்று மறக்கச் செய்வதாய்...

"ஐயோ... நீங்க எப்படி இங்கே வந்தீங்க...?"

—உமாவின் குரலில் பீதி கலந்த சந்தோஷம்...

ராஜா...

அவளை இழுத்தணைத்து முத்தமிடுகிறான்...

"கண்ணம்மா... பேச நேரமில்லே... மறுபடியும் எப்ப சந்திப்போமோ... சின்ன ராஜாவுக்கு அட்வான்ஸ் முத்தங்கள்...."

இவன் அதைச் சொல்லி முடிப்பதற்குள், டாக்டர் தன்னை ஓரளவுக்கு சுதாரித்துக் கொண்டு, 'காலிங் பெல்'லை அழுத்த....

ராஜா 'ஸிங்'மேஜைப் பக்கத்தில் இருந்த, குளியலறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொள்கிறான்...

இதற்குள் நர்சுகள் வெளியே ஓடி விவரத்தைச் சொல்ல...

பொது வார்டில் — எங்கிருந்தோ ஒரு பெண்மணி அலறுகிறாள்...

"நர்ஸ் இங்கே வாங்க... வார்டு பாயை பாத்ரூம்லே யாரோ கட்டிப் போட்டுட்டுப் போயிருக்காங்க..."

குரல் வந்த திசையில் நாலைந்து நர்சுகள் ஓடுகிறார்கள்...

பரந்தாமன் தியேட்டருக்குள் நுழைய முயற்சிக்க... உள்ளிருந்த டாக்டர், அவரைத் தடுக்கிறார்...

"இப்ப நீங்க உள்ளே வர முடியாது சார்..."

"அவன் எந்தப் பக்கம் போனான்...?"

"பாத்ரூமுக்குள்ளே..."

"அது வழியா வெளியே போக முடியுமா..."

"உயரத்துல ஒரு வெண்டிலேட்டர் மாத்திரம் இருக்கு..."

பரந்தாமன், ஒரே பாய்ச்சலாக வெளிப்புற வராந்தாவுக்கு ஓட....

போலீஸிடம் மாட்டிய இரண்டாவது வார்ட் பாய் அலறிக் கொண்டிருக்கிறான்...

"எனக்கு ஒண்ணுமே தெரியாதுங்க... அந்த ஆள்தான் கத்தியைக் காமிச்சு என்னை மிரட்டுனாரு... வாயைத் திறந்தா கொலை விழும்னாரு... என் கூட வேலை செய்யறவனை பாத்ரூமுக்கு இழுத்துட்டுப் போய், அவனோட யூனிபாரத்தைக் கழட்டித் தரச் சொல்லி தான் மாட்டிக்கிட்டாரு... பரந்தாமன் வீட்டுலேருந்து போன் வந்திருக்கு... அவங்க மருமகளுக்கு வலியெடுத்திருச்சாம்னு டாக்டர் சொல்லிக்கிட்டிருந்தப்பவே — எங்கேயிருந்தோ கழுகு மாதிரி வந்துட்டாங்க... நான் முதல்லே ஜெனரல்வார்

ஆண் — பெண் நல்வாழ்வு வாழ அழைக்கின்றோம்



Dr. S. K.

உலகப் புகழ் பெற்ற பழனி சித்த வைத்தியபதி

Dr. S. காளிமுத்து

R.M.P. (IND) V.V.C., A.M.I.H., R.A.M.P., R.H.M.P.,

அவர்களின் சுற்றுப் பயணத்தில் அல்லது பழனியில் நேரில் சந்தித்து ஆலோசனை பெற்று இது வரை கஷ்டத்துடன் அனுபவித்த வியாதிகள் நீங்கிச் சுகவாழ்வு பெறலாம். உங்கள் பிரச்னையான தாம்பத்திய வாழ்வில் மாறுபாடு – சோர்வு அணுக்கள் குறைவு – வீரியமின்மை – குடும்ப உறவில் முன்மாதிரி செயல்படுத்த முடியாமை – நரம்பு தளர்வு – தேக உறுப்பு மெலிவு – கெட்ட கனவுகள், தூக்கம் இல்லாமை – குழந்தைச் செல்வம் இல்லாமை – வெட்கம் – நடுக்கம் – தோல்வி – ஆ. இருமல் – வாத நோய் – சரும நோய் குடல் புண் – வயிற்றுக் கோளாறுகள், நவ மூல வியாதிகள் மற்றும் இதர வியாதிகளும் 87 வருட அனுபவ மருந்துகள் பெற்று சுகவாழ்வும் மறு மலர்ச்சியும் பெறலாம்.

ஒரு மாதம் சிகிச்சை மருந்துகள்

தங்க பஸ்பம்	தங்க பஸ்பம்	மிக உயர்தரம்	ஆ. இருமல் செட்
மிக உயர்ந்த ரகம் ரூ. 330	சிட்டுக்குருவி லேகியம்	மிக உயர்தரம் செட் ரூ. 90	ரூ. 124 — 226
துபி செட் ரூ. 600	90 வேளை ரூ. 180	சரும நோய் செட்	வயிற்று வலி செட்
துபி செட் A. ரூ. 900	60 வேளை ரூ. 120	ரூ. 140 முதல்—260 வரை	ரூ. 92
	30 வேளை ரூ. 60		

சென்னை விஜயம்: 1, 2, 9, 10, 11, 16, 17, 18, 19 நியூ உட்லண்ட்ஸ் ஹோட்டல், எட்வேர்ட்ஸ் எலியட்ஸ் ரோடு, மயிலாப்பூர், சென்னை-4 போன்: 83111

நேரில் ஆலோசனை பெற: 1ந் தேதி திருநெல்வேலி, நெல்லை லாட்ஜ், காலை 8 முதல் 12மணி; 1ந் தேதி நாகர்கோவில் ஸ்ரீ உடுப்பி கிருஷ்ண பவன் பகல் 2 முதல் 4 மணி; 2ந் தேதி மதுரை மணீஸ் கபே காலை 8 முதல் 12 மணி; மாலை 2 முதல் 4 மணி 3ந் தேதி புதுக்கோட்டை சாந்தி லாட்ஜ் (வசந்தா லாட்ஜ்) காலை 11 முதல் 12 மணி; 3ந் தேதி காரைக்குடி AVM.PL ரெஸ்ட் ஹவுஸ் காலை 8 முதல் 10 மணி; 3ந் தேதி பட்டுக்கோட்டை ஹோட்டல் அலங்கார் பகல் 2 முதல் 3–30 மணி; 3ந் தேதி மன்னார்குடி மன்னை லாட்ஜ் மாலை 3 முதல் 4 மணி; 4ந் தேதி திருச்சி ஹோட்டல் அஜந்தா காலை 8 முதல் 2 மணி; 4ந் தேதி கரூர் பெரியார் லாட்ஜ் மாலை 3–30 முதல் 5 மணி; 5ந் தேதி தஞ்சாவூர் ராஜா ரெஸ்ட் ஹவுஸ் காலை 10 முதல் 12 மணி; 5ந் தேதி திருவாரூர் அபூபக்கர் பில்டிங்ஸ் மாலை 2 முதல் 4 மணி; 5ந் தேதி நாகப்பட்டினம் நிஸார் விலாஸ் மாலை 5 முதல் 6 மணி; 5ந் தேதி காரைக்கால் அசோக் லாட்ஜ் மாலை 6–30 முதல் 7–30; 6ந் தேதி கும்பகோணம் தாஜ்மஹால் லாட்ஜ் பகல் 12 முதல் 2 மணி; 6ந் தேதி மாயவரம், காளியாகுடி லாட்ஜ் மாலை 3 முதல் 4–30 மணி; 6ந் தேதி சிதம்பரம் ஜெயராம் லாட்ஜ் மாலை 5–30 முதல் 7 மணி; 7ந் தேதி பாண்டிச்சேரி (அருணா லாட்ஜ்) பாரிஸ் லாட்ஜ் காலை 8 முதல் 9–30 மணி; 7ந் தேதி திருவண்ணாமலை மாடர்ன் கபே காலை 10 முதல் 12 மணி; 7ந் தேதி செங்கல்பட்டு விஜய் லாட்ஜ் மாலை 4 முதல் 6 மணி; 7ந் தேதி கடலூர் (என்.டி.) ஹோட்டல் பிருந்தாவனம் காலை 10–30 முதல் 12 மணி.

23ந் தேதி முதல் 31ந் தேதிவரை பழனி தலைமை வைத்தியசாலை

பழனி சித்தர் வைத்தியசாலை, (REGD) பழனி-624 601

போன்: 316, 316-ஏ, 420, 630. தந்தி: சித்தர்

சுவை, மணம் நிறைந்த
செண்பகம் பிராண்ட்
D.L.C பிராண்ட் நெய்-
உபயோகியுங்கள்.

REGD. No. 130727

DLC

- அக்மார்க் முத்திரையுள்ளது -

MFRS:-

தனலட்சுமி & கோ

நெய்மண்டி... திருப்பூர்-4.

போன்: 21557



போராட்டம்

நா.காமராசன்

- இயற்கை — பிறர் வழிகாட்ட வேண்டிய நிலையிலிருந்து மனிதனை விடுவித்து நீண்ட நெடுங்காலம் ஆகிவிட்டது. பிறர் வயப்படுதல் சோம்பலின் காரணமாகவே உருவாக்கம் பெறுகிறது. மனம் பருவ முதிர்ச்சியை எய்தாததும் காரணமாக அமைகிறது.

- நமது சுகாதாரத்தை ஒரு மருத்துவரும் — எனது அறிவை ஒரு புத்தகமும் —எனது நன்மை, தீமைகளை மதங்களும் முற்றாகவே நிர்ணயம் செய்கிற போது — நாம் வாழ்கிறோம் என்று சொல்வதே பொய்யாகும்.

- சிலர் தகுதிகளை சுயபலமாக வளர்த்துக் கொள்வதில் — பல கட்டங்களில் தோல்வி நேரக் கூடுமென்ற அச்சம்— இதற்காகப் பிறர் துணை நாட வைக்கிறது. ஒரு சிலர் தாம் பெற்ற தகுதி — தொடக்க நிலை வளர்ச்சியிலுள்ள பலரையும் அடிமையாக்குவதன் மூலமே பரிபூரணத் தன்மை பெறுவதாகக் கருதுகின்றனர். இந்த எதிரெதிர் மன உலகங்களால் இயற்கையாகவே — சமூக ஓட்டத்தில் ஆண்டானும், அடிமைகளும் உருவாகி விடுகின்றனர்.

- பிறர் வயப்பட்டு வாழ்பவன் — தன்னை முழுமையாக வளர்த்துக் கொண்ட பிறகு கூட — அந்த வளையத்திற்குள்ளேயே அடங்கி விடுகிறான். காலம் முழுவதும் அதை விட்டு வெளியேறும் முயற்சியில் அவனால் வெற்றி பெற முடிவதில்லை. குறுகிய பள்ளத்தைக் கூட தயக்கத்தின் காரணமாக அவனால் தாண்ட முடிவதில்லை.

- ஆனால் · சுதந்திரமான சிந்தனைகளாலேயே மனித குலத்தை வாழ வைக்க முடியும். மாபெரும் மக்கள் தொகுதிக்கு வழிகாட்டிகளாக இருப்போரில் பலர் சுயசிந்தனையின் மூலம் வெற்றி பெற்றவர்களே. அடக்கு முறையைக் கூட ஒரு திமிர் புரட்சியின் மூலம் வீழ்த்தி விடலாம். ஆனால் அறியாமையை எதிர்த்து. பல வடிவப் போராட்டங்கள் காலங்கள் தோறும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. ஒரு முடிவுதான் இல்லை.

டுலே பேஷண்ட்டைப்பார்க்க வந்த விஸிட்டர்ன்னுதாங்க நினைச்சேன்...''

இதற்குள் ராஜாவினால் கட்டிப்போடப் பட்டவன், கட்டுக்களை அவிழ்த்ததும் தைரியம் வந்தவனாய்க் கத்துகிறான்...

''டேய்... எவண்டா அவன்... என் இட்ட பிடிக்கு நெருப்புக் கேட்டுட்டு, என்னையே பாத்ரூமுக்குள்ளார அடைச்சவன்... வெளியே வாடா...''

''ஏய்... சும்மாயிரு...''

கான்ஸ்டபிள் ஒருவர் அதட்ட....

அந்த இருட்டிலும் வெளியே திமுதிமுவெனப் பூட்ஸ் காலடி ஓசைகள்...

''அதோ அங்கே, சார்...''

''மாமரத்துக் கிளை மேலே...''

''ஷூட், ஹிம்!!''

பரந்தாமனின் இடிகுரலைத் தொடர்ந்து மையிருட்டைக் கிழித்துக் கொண்டு பாய்ந்த துப்பாக்கி வெடிச் சத்தங்கள்...

துப்பாக்கி வெடிச் சத்தத்தைக் கேட்டதுமே உமா வீறிட்டு அலறுகிறாள்....

''மாமா... அவரைச் சுட்டுடாதீங்க....''

அவளது குரலையும் மீறிக்கொண்டு, தீபாவளி அதிர் வேட்டுப் போல சரம் சரமாய் வெடியோசை தொடர....

ராஜாவின் அருமைப் புதல்வன், இந்த வெடிச் சத்தத்தைக் கேட்டுக்கொண்டே, பூமியை ஸ்பரிசிக்கிறான்...

அவனது மெல்லிய குவா குவா சத்தம் மாத்திரம்... எரிமலை வெடித்துச் சிதறுமிடத்தில் தன்னந்தனியே அகப்பட்டுக் கொண்ட குயிலின் அபயக் குரலைப் போல...

பேரன் பிறந்த விஷயத்தைக் கேட்கப் பரந்தாமன் அங்கில்லை... அவர்தான் ராஜாவைத் தேடிக் கொண்டு ஓடியிருக்கிறாரே...

மீனாட்சியோ — தன் நினைவிலேயே இல்லை..

விழி மாத்திரம் தான்... நெஞ்சை இரு கைகளாலும் இறுகக் கட்டியபடி...

''கங்கிராட்ஸ்... மிஸ்டர் பரந்தாமனுக்கு பேரன் பிறந்திருக்கான்.''

டாக்டரின் வார்த்தைகள் சுரத்தேயில்லாமல் ஒலிக்கிறது... (தொடரும்)

இனி என்ன...

இரா.சோமசுந்தரம்

தபால் ஆபீசை நிமிர்ந்து பார்த்தார். வேலை செய்த நாட்களில் இப்படியெல்லாம் நின்று பார்த்ததில்லை. எந்த இலட்சியமும் இல்லாமல் வாழ்க்கை போய்த் தொலைந்தது. இத்தனை வருஷங்களில் ஒருநாள் கூட இந்த மரச்செறிவின் கீழே இதே நிலையில் காலகாலமும் நிற்கவேண்டும் என்பதாய்த் தோன்றினதில்லை. ஓய்வு பெற்று நிற்கின்ற நேரத்தில் இவை மனத்தில் தோன்றுகிறது.

அப்போதெல்லாம் நேராகச் சைக்கிளை மேலே தள்ளிக் கொண்டு போய்ப் பூட்டி, சாவியைச் சட்டையில் திணித்துக்கொண்டு போவார்.

அந்தச் சைக்கிளை நினைக்கும் போது வருத்தமாய் இருக்கிறது. அது ஒரு ஜடப் பொருள் என்பதை அவரால் நம்ப முடிய வில்லை. அது கிரீச்சிட்டு முனகிய போதெல்லாம் அது பேசுவதாகவே நினைத்தார். அவர் தம் நினைவே இல்லாமல் ஓட்டிக் கொண்டு சென்றாலும் சரியாக வீட்டில் கொண்டு சேர்த்தது... கடைசியில் வயிற்றுக் காக அதை விற்றுவிட்டார்.

அவர் வாழ்க்கை அத்தனை மோச மானதா? இல்லை. நிச்சயமாக இல்லை. மாதா மாதம் ஓய்வு ஊதியம் கிடைக்கிறது. அது இவருக்குப் போதுமானதாய் இல்லை. தனி மனிதனுக்கு அப்படியென்ன செலவுகள் இருக்க முடியும் என்று அவரே தனிமையில் தனக்குள்ளாகக் கேட்டுக் கொள்கிறார்.

இப்படியான கேள்வி எழும்போது உடல் சிலிர்க்கிறது. தான் உண்மையிலேயே பிழைக்கத் தெரியாதவன்தானா என்கிற எண்ணம் வருகிறது. ஆனால் இதை அவர் நம்புவதில்லை. பிழைக்கத் தெரியாமல் அவர் இத்தனைக் காலம் வாழ்ந்திருக்க முடியாதே!

இதே நினைவு அவரால் கட்டுப்படுத்த முடியாமல் தொடர்ந்து வரும்போதுதான் நாம் பைத்தியமாகி விடுகிறோமோ என்ற பயம் உண்டாகிறது அவருக்கு. மீண்டும் தபால் ஆபீசைப் பார்க்கிறார். முன்பு பார்த்ததை விட இப்போது வித்தியாசம் இருப்பதாகத் தோன்றுகிறது. இதேபோல் மனைவி இறந்த போதும் கிடத்தில் பார்த்த போது தூக்கிப் போட்டது. அவ்வளவு மாற்றம் அந்த முகத்தில்.

ஓய்வு பெற்றதும் பெண் வீட்டுக்குப் போனார். அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு விதத்தில் அவர் இதை எதிர்பார்த்தார். சரி. அவளுக்கும் ஆயிரம் கவலைகள். அவளைக் குற்றம் சொல்ல முடியாது. கூடாது.




மகன் என்றாலும் இதேதான். ஆண்பிள்ளை பிறக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்த்தார். அவருக்குத் தன் மகன் வந்து சாதிக்க வேண்டியது இன்னின்னது என்ற கனவுகள் எதுவும் இல்லை. அந்த மனம் விச்ராந்தியாய்க் கிடந்தது. தங்கிவிடு நீருக்குச் சில புல்பூண்டுகள் தலைகாட்டச் செய்யும் மேட்டு நிலமாக இருந்தது. ஆக, அவர் மகன் வந்து மனக்கோட்டையை மண் கோட்டையாய் மாற்றச் செய்யும் அவசியம் அதில் இல்லை. ஆனாலும் ஒரு குழந்தை தேவைப்பட்டது. தன் ஆண்மைக்கு நிரூபணமாகவும், பிற்கால அசதிக்குத் தாணாகவும் இருக்கக் கூடிய ஒரு குழந்தை. இந்த விருப்பத்துக்கு அதிக முயற்சிகள் வேண்டியிருக்கவில்லை. எனவே விருப்பம் வித்தானது.

வளைகாப்பு முடிந்த அன்று இரவு மனைவி கேட்டாள்.

—உங்களுக்கு என்ன குழந்தை வேணும்?

—ஆங்... என்ன?

''ஆம்பிளைப் பிள்ளையா? பொட்டைப் பிள்ளையா?



—ஏன் மொதல்ல கேக்கலே?

அவளுக்கு இந்தக் கேள்வி புரியவில்லை.

—இனிமேல் நான் சொல்றதைப் பெத்துத் தர முடியாது. பிரும்மா சிருஷ்டிய முடிச்சிட்டுக் கையைக் கழுவின நேரம்டி இது. பொறக்கறதுதான் பொறக்கும். ‌

ஆனால் பெண் பிறந்து வந்தபோது அவர் நெஞ்சு தொய்ந்து போனது. அவர் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொண்டார்: பெண் பெருமைக்குரியவள். அவளை நான் வணங்குகிறேன். இந்த நடுக்கம், மனச் சோர்வு இவை யாவும் பொருளாதாரச் சிக்கலேயன்றிக் குழந்தையின் மேல் கொண்ட வெறுப்பல்ல.

ஆனால் யார் நம்புவது? அவராலேயே நம்ப முடியவில்லையே.

யாரோ வணக்கம் சொல்கிறார்கள். இவர் தன் கடமைக்கு வணக்கம் சொல்கிறார். அவர்கள் நின்று பெற்றுக் கொள்ளாமல் போகிறார்கள். இவர் அவர்தம் முதுகுக்கு வணக்கம் செய்தபடி ஆகிறது. எரிச்சல் வருகிறது. வேலை செய்த நாட்களில் இருந்த நெருக்கம் இப்போது இல்லை.

பாரம் பூர்த்தி செய்வது: கடிதம் எழுதிக் கொடுப்பது; மனு எழுதிக் கொடுப்பது - இப்படியாக ஒரு முடிவோடு இங்கு வந்து சேர்ந்தார். இதற்கெல்லாம் தன்னைத் தானே நியமித்துக் கொண்டார். அதில் வரும் காசைக் கொண்டு மூக்கும் பொடி மட்டைக்கும் சரிகட்டினார். அந்த அளவுக்குத்தான் காசு தேறியது.

எப்போதுமே வேலை இருந்து விடாது. வருவோர் எல்லோரும் இவரையா நம்பி வருகிறார்கள்?

யாராகிலும் தானே கடிதம் எழுதி ஒட்டும்போது அவருக்கு எரிச்சல் அதிகமாகும். அதையே உற்றுப் பார்ப்பார்.

''எனப்பா பசை கொஞ்சமா தடவு. எல்லாருக்கும் வேண்டாமா?'' என்பார்.

இதனால் மனசு திருப்தியடைந்தது.

அரசாங்க பாரங்களைப் பூர்த்தி செய்யச் சம்பந்தப்பட்ட ஊழியர்களைத் தவிர ஒருவராலும் முடியாது. இதற்கும் படிப்புக்

கும் எந்தவிதத் தொடர்பும் இல்லே. எம்.ஏ. எம். எஸ்ஸி எல்லாமும் இந்தப் பாரங்களில் அவமானப்பட்டிருக்கிறது. இது இவருக்குத் தெம்பான விஷயம். சற்றே நிமிர்ந்துபோய் விழிக்கின்றவனைப் பார்ப்பார். பார்த்து விட்டுத் "தானே வலிய பாரத்தை வாங்கிக் கொள்வார். (இந்த இடத்தில் வெகு ஜாக்கிரதையுடன் அவன் நீட்டும் பேனவை அலட்சியப்படுத்தி விட்டுத் தம் பேனவைத் திறப்பார்.) உண்மையில் அந்த ஓர் இடம் தான் அவனுக்கு இடறல். ஆனாலும் அவர் விட மாட்டார். அவனே முட்டாளாய் நிற்க வைத்து மொத்தமும் முடித்து. 'இதுக்கு அனுபவம் வேணும்' என்று சிரிப்பார். இதற்குமேல் அவன் வெறுமனே நகர்ந்தால் கேவலமாக இருக்கும்.

நிறைய கிராமத்து ஜனங்கள் வருகிறார்கள். பெரும்பாலும் பட்டணத்துப் பிள்ளேயிடம் பணம் அனுப்பச் சொல்லும் கடிதமாய் இருக்கிறது. அல்லது ஏதோ ஒரு கிழம் மண்டையைப் போட்டுவிட அழுதோடி வருகிறார்கள். எப்படியோ பொழுது கழிகிறது.

பொறுமையுடன் விஷயத்தைக் கேட்டுக் கொண்டு எழுத ஆரம்பிப்பார். பாதியில் நிறுத்திவிட்டு வந்தவனேயே பார்த்துக் கொண்டிருப்பார். அவனும் அவரையே பார்ப்பான்.

'என்ன பெரியவரே' (இதே இவன் கொஞ்ச நாட்களுக்கு முன் சார் என்று கூப்பிட்டு இருப்பான்.)

இடதுகாலேத் தூக்கி முட்டியின்மேல் போட்டுக் கொள்வார். கால்விரல்களைப் பிடித்து விடுவார். லேசாகச் சிரிப்பார். 'இந்தக் கடுதாசி எழுதறது இருக்கே இது பத்து பைசா பெருத விஷயம். ஆனாலும் நீ நாலணு குடுக்கற. என்ன! உன்னே மாதிரி சில பேர் குடுத்திங்கன்னு இன்னிக்கி பொழுது கழியும். வேறே கதியில்லாம வந்திருக்கேன். பொண்ணு சோறுபோட மாட்டேன்னு சொல்லிட்டா. இதெல்லாம் முன்னமே தெரிஞ்சுக்கிட்டுப் பொண்டாட்டி போய்ச் சேர்ந்தா. உம் பேரு என்ன?'

'சோமு.'

''சோமுவா மாயவரத்துல உன் பேர் கொண்ட ஃப்ரெண்டு, இருக்கான். ரொம்ப நல்லவன். அப்புறம் என்ன எழுத....''

இந்த மாதிரி சமயங்களில் கேட்டதைவிட அதிகமாகக் கொடுக்கும் ஜீவன்களே அதிகம்.

சிலர் ரொம்ப உணர்ச்சிவசப்பட்டு ஏதாவது ஒன்றை நேரம் காலம் தெரியாமல் உளறி வைக்கும். அது இவரைப் போலவே பென்னுல் நிராகரிக்கப்பட்டுக் கிணற்றிலோ குளத்திலோ, உயிரைவிட்ட துராத்மாவைப் பற்றிய தகவலாய் இருக்கும். அந்தச் சமயத்தில் நொந்து போவார். தாமும் அப்படி சாக தைரியமில்லாதது வருத்தும். இது கௌரவப் பிச்சையாகத் தோன்றும். ஆனாலும் இது கொஞ்ச நேரம்தான். பிறகு பழையநிலேக்கு வந்து விடுவார்.

குறைந்தபட்சம் தான் ஆரம்ப பாடசாலே ஆசிரியனுக இல்லாமல் போனேமே என்று வருத்துவார். அவர்கள் ஓய்வு பெற்ற பின்பும் தனி வகுப்புகள் நடத்தி வாழ்க்கையை வளம்படுத்துகிறார்கள். தங்கள் நிலேமையைமேம்பாடுடையதாகச் செய்து கொள்கிறார்கள். இதையெல்லாம் விட, கொடூர தனிமை கிடையாது. சின்னஞ்சிறு பூக்களிடையே பழுத்த பழமாய் உலவுதல் மனத்துக்கு நிறைவைத் தருகிறது.

இது இல்லாவிட்டால் போகிறது.கணக்கு எழுதவாவது கற்றுக் கொண்டிருக்கலாம். அதையும் செய்யவில்லே.

இதற்கெல்லாம் காரணம் இருந்தது. அவர் தம் ஆயுளே நாற்பது வயது என்று நிர்ணயம் செய்து கொண்டார். அதாவது அதற்குமேல் தான் வாழப் போவதில்லே என்று திடமாக நம்பினுர். ஆனுல் அது பொய்த்தது. காலம் போனது. ஆனுல் ஜீவன் போகவில்லே.

இதுவரையில் எந்த இலட்சியமும் இல்லே. இனிமேல் உருவாக்கிக் கொள்ள முடியுமா? அப்படியானுல் அது எப்படியானது.' எந்த வகையினது?யோசிக்கிருர். முதுமைச் சிந்தனே மழுங்கிக் கிடக்கிறது.



அமெரிக்காவில் எண்பது வயதைத் தாண்டிய ஒரு பெரியவர்—செல்வந்தர்—உயில் எழுத எண்ணினுர். ஓர் இளம் வழக்கறிஞரிடம் ''நான் இறந்த பிறகு மனேவி மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்தால் என் சொத்துக்கள் என் மனேவிக்கு உரிமையாக வேண்டும். அவள் மறுமணம் செய்து கொண்டால் என் மக்களுக்கு உரிமையாக வேண்டும் — இப்படி உயில் எழுதிவிடுங்கள்'' என்று கூறினுர். உங்கள் மனேவிக்கு வயது எழுபத்தைந்தைத் தாண்டிவிட்டது.இனி அவருக்கு மறுமணம் என்ற எண்ணம் எங்கே வரப்போகிறது? இந்த நிபந்தனே உயிலில் 'குறிப்பிடத் தேவையில்லே' என்ருர் வழக்கறிஞர் ''அப்படிச் சொல்லாதீர்கள். உங்களைப் போன்ற இளேஞர்கள் சும்மா இருப்பீர்களா? பணத்துக்காக எதை வேண்டுமானுலும் செய்வீர்களே!'' என்ருர் கிழவர்.

ஆதாரம்: உவகையூட்டும் உலக நிகழ்ச்சிகள்

தகவல்: காயாமொழி சவுக்கத் அலி



மின்னும் மேனி மெருகுக்கு
ரெக்ஸோனா
REXONA
Rexona
FOR SOFT AND GLOWING SKIN
மின்னி மிளிரும் மேனி...என்னாளும் உங்கள் பொன்னான கனவு...நிறைவேற வரமளிப்பது ரெக்ஸோனா.
சரளம், கருவா, கிராம்பு, ஹபுஷா (தேவதாரம்) ஆகிய நாலு வகை இயற்கைத் தைலங்களின் நற்கலவையான ரெக்ஸோனா...சருமப் பராமரிப்பிற்கு இயல்பான வழியாகும்.
ரெக்ஸோனா எங்கள் மேனியை மென்மையோடு மெருகு மிளிர வைத்திருக்கிறது.
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
LINTAS RX 84 2014 TM



புதிய அதிக சக்திவாய்ந்த
சூபர் 777 டிடர்ஜெண்ட் பார்

வாக்குறுதி உன்னதத்தன்மைக்கு மட்டுமே அல்ல, வாக்குறுதிகூட வாக்குறுதியைக் காப்பாத்தும்.

இப்போது, புதிய சூபர் 777 டிடர்ஜெண்ட் பார் மூலம் எனக்கு அனைத்தையும் விட அதிக வெண்மை சலவை கிடைக்குது. இதோட டிடர்ஜெண்ட் ஃபார்முலா முன்னைவிட அதிக சிறப்பா இருப்பதாலே முன்னைவிட அதிக நுரை தருது, அதிக துணிகளை துவைக்குது, அதிக நாட்கள் உழைக்குது. இதனால்தான் மற்றெல்லா டிடர்ஜெண்ட் பார் மற்றும் சோப்புகளைவிட இது சிறந்ததாகும்.

உபயோகப்படுத்திப் பாரீர்...நீங்களே கண்டு கொள்வீர் நயத்தை,
திரும்பத் திரும்ப வாங்குவீர் இதை.

Shilpi DM 2/83 Tam.



அமரர் கல்கி



நினைவுச்சிறுகதைப்போட்டி

அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம்போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ.**	**1000**
இரண்டாவது பரிசு	**ரூ.**	**500**
மூன்றாம்பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 விதம்)	**ரூ.**	**500**

ஆக மொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும்.

தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளர்களுக்குப் போனஸ் உண்டு.

❊ கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.

❊ அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும் வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.

❊ நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.

கதைகளை அனுப்பவேண்டிய கடைசி தேதி: ஜூன் 15

❊ உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.

❊ பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.

❊ கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.

❊ எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.

❊ சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

❊ போட்டி முடிவும் முதல் பரிசுக் கதையும் கல்கி ஆகஸ்டு 5 ஆண்டு மலரில் பிரசுரமாகும்.

ஆசிரியர், கல்கி, சென்னை - 600 032.


ஓம் க்ரீம் க்ரைம்
8
கதை: ஜே.எஸ்.ராகவன்
சித்திரம்: செல்லம்
மாஜி கவர்ச்சி நடிகை ஸ்ரீலஸ்ரீ தன் வீட்டில் ஸ்கிப்பிங் ஆடிக் கொண்டிருக்கிறாள். சதீஷ் உள்ளே நுழைகிறான்.
முப்பத்திமூணு, முப்பத்தி நாலு, முப்பத்தி அஞ்சு... ....
அட! உங்க வயசு அவ்வளவு வேகமாவா ஓடின்டு இருக்கு. தெரியலியே! ஆஹா! இந்தக் 'கிறுகிறு' காட்சியை வர்ணிக்க சதீஷ் வயசு போறாது. சாண்டில்யன் வயசு வேணும்.
ஸ்ரீலஸ்ரீயின் ஸெக்ஸ்-நட்சத்திரமுகம் சிவக்கிறது.
நான்சென்ஸ், மிஸ்டர்! யார் நீ? தொறந்த வீட்டில் அல்சேஷன் நொழையற மாதிரி....
மேடம் நான் சுவாமி பிஸ்டலானந்தாவின் பக்தன். அவரைத் தேடி வந்தேன். எங்கே அவர்?
என்னைக் கேட்டா? எனக்கு எப்படித் தெரியும்!
நடிகையின் வீட்டில் சுவாமியைத் தேடக் கூடாது தான். ஆனா இவர்.. ....
ஏய்! மிஸ்டர் யார் நீ?
சதீஷ்! என் முடியைக் கருப்பாக்கிய சுவாமி எங்கே.
ஸ்ரீலஸ்ரீ வாயைத் திறக்கு முன் நீலகண்டன் வருகிறான்.
அட! சதீஷா? வாங்க சார்! ஏது? தலையை மாத்திட்டீங்களா? ....ஆமா உங்க அக்கா செத்துட்டாங்களாமே!



செத்துட்டாங்கனு சொன்னியே. எப்படிச் செத்தாங் கனு சொல்றதானே. அதுவும் போலீஸ் கிட்டே.
அதெல்லாம் எதுக்கு பிரதர். ஏதோ இருந்தார் போய் சேர்ந்தாங்க அடுத்தது யாசிரா?
இவ்வளவு ஈசியா ஒவ்வொருத்தரா போயிடுவோமா? இது என்ன கொசு அடிக்கிற மாதிரியா?
ஆமாண்டா! இப்போ நினைச்சாக் கூட நான் உன்னை.....
பாண்ட் பாக்கெட்டிலிருந்து துப்பாக்கியை எடுக்கிறான். மின்னல் போல சதீஷ் பாய்ந்து..
வாங்கிக்கோ! ரொம்ப நாளா பாக்கி
ஐயோ...
இந்தா இது போனஸ். அடி உதை எல்லாம் ஒத்தைப் படையா இருக்கக் கூடாது.
செத்தேன்
பிஸ்டலா எடுக்கறே. இந்த ரூம்லே ரெண்டு பேரும் கெடங்க.
ஸ்ரீலஸ்ரீயையும், நீலகண்டனையும் ஒரு அறைக்குள் தள்ளி பூட்டி விடுகிறான்.
பிரதர்! கொஞ்ச நேரம் அங்கேயே இரு. ரொம்ப போரடிச்சா சின்ன லேடிங்க ஸ்ரீலஸ்ரீயை சின்னதா ஒரு காபரே ஆடச் சொல்லிப் பாரு......
தொடரும்

என்பீல்ட்

மண்ணெண்ணை

பம்பு செட்டுகள்

- உறுதியானவை. நம்பிக்கையானவை. நெடுநாள் உழைப்பவை.
- சிறு விவசாயிகளுக்கு மிக ஏற்றவை: 3 ஏக்கர் வரை- 2 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு 5 ஏக்கர் வரை-3:4 ஹார்ஸ் பவர் பம்பு செட்டு
- மிக இலேசானவை—நிலம் விட்டு நிலம் எடுத்துச்செல்ல எளிதானவை
- அரசுக் கடன்களுக்கும் மானியங்களுக்கும் அங்கீகாரம் பெற்றவை.




என்பீல்ட்

புல்லெட் மோட்டார் சைக்கிள் அளிப்பவர்கள்

ADWAVE-EIA 2404

வட்டமேஜை

குஜராத்தைச் சுற்றி வந்த அனுபவம்



● திருமதி. அநுசூயாபென் தொழிலாளர்களுக்காகப் போராடிஉள்ளதைப் படித்ததும் பெண்கள் எதிலும் ஆண்களுக்குச் சோடை போனவர்கள் அல்ல என்பது புரிந்தது.

உள்ளி (குடியாத்தம்)

என். சண்முகம்

● இசை மேதை எம். டி. ஆருக்கான அஞ்சலி மனத்தில் பதிந்து, ஒரு நிமிடம் மனம் அவருக்கு மௌன அஞ்சலி செலுத்தும்படி செய்தது.

கிருஷ்ணகிரி, பூபாலன்.

● சென்னையில் கொள்ளைகளில் ஈடுபட்டு பீதிகளை உருவாக்குகிற சமூக விரோத சக்திகளைப் பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தாமல், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க விமானம் வாங்குவதற்கான திட்டம் கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் கோபுரம் ஏறின கதையாகத்தான் முடியும்.

சென்னை—57,

இரணியல் 'கலை'.

● குஜராத் சிறப்பிதழ்—2—ல் 'பொருளாதார மேம்பாடு' பகுதியில் உள்ள கட்டுரையைப் படித்தேன். அசந்து போய் விட்டேன். இந்தியாவிலும், இப்படி முன்னேற்றம் அடைந்த—அடைந்து கொண்டிருக்கும் மாநிலம் உள்ளதா? என்று நினைக்கும் போது பெருமையாக உள்ளது.

மன்னார்குடி, க.ராஜ்நாதன்

● 'மறுபக்கம்' சிறுகதை வித்தியாசமான கோணத்தில் எழுதப்பட்ட கதை. மெல்லிய மன இயல்புகளைப் பிசிறில்லாமல் படம் பிடித்துக் காட்டுகின்ற இக்கதை பலரை மனத்தளவில் பாதிக்கும்.

திருச்சி—12,

ச. விக்டர் ஆல்பர்ட்.

● 'ரிவால்விங் ரெஸ்டாரெண்ட்' ஆமதாபாத்தில் தான் முதலில் கட்டிவருவதாக எழுதியிருப்பதுதவறு. குஜராத்தில் சூரத்தில் பல வருஷங்களாக ஒரு ரிவால்விங் ரெஸ்டாரெண்ட் இயங்கி வருகிறது. பம்பாயில் ஸீ—ராக் அம்பாஸடர் ஹோட்டலிலும் சுழல் உணவகம் உள்ளது.

பம்பாய்,

பிச்சுமணி.

● திரு. சுப்பிரமணியன் ஆமதாபாத்தில் முருகன் கோவிலைக் கட்ட உழைத்தவர் என்பது உண்மை. ஆனால் தமிழ் மன்றத்திற்கும் அவருக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. தமிழ் மன்றத்தை திரு. கோபாலகிருட்டிணன், திரு. செல்லத்துரை, திரு.சந்தானம், திரு. மூர்த்தி ஆகிய நாங்களும் மற்றும் நண்பர்களும் நல்ல முறையில் நடத்தி வருகிறோம். எங்கள் தமிழ்மன்றம் தவிர இங்கு அன்னை கலைக்குழு, தமிழ்ச் சங்கம், பாரதிதாசன் மன்றம், கலைவாணிஆர்ட்ஸ் போன்ற பல அமைப்புகள் உள்ளன.

ஆமதாபாத்.

எஸ். கே. மூர்த்தி.
க. செல்லத்துரை.

● குஜராத்தி மொழி இலக்கிய கர்த்தாவான 'ஜவேர்சந்த் மேகாணி' பற்றி ஒரு வரி கூடக்காணவில்லை. இருபத்தைந்தாவது வயதில் நல்ல ஊதியம் பெற்றுக் கொண்டிருந்தவர் வேலையைத் துறந்து தேச சேவைக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டார். அவருள் மறைந்திருந்த இலக்கியத் திறன் கொஞ்சம் கொஞ்சமாக ஒளி வீசத் தொடங்கியது. எளிய நடையில் தம் வட்டாரத்தின் விசேஷ தன்மைகள் குஜராத்தி இலக்கியத்திலும், மொழியிலும் பிரதிபலிக்குமாறு செய்தார்.

மதுரை—1, ஜெகப்ரதாப்.

குஜராத்தி மொழியை வளப்படுத்திய எழுத்தாளர் பட்டியல் மிகப் பெரிது. அவ்வளவு பேரையும் குறிப்பிடுவது சாத்தியமல்ல. கட்டுரை பொதுநோக்கில் எழுதப்பெற்றது. -ஆர்.

● தேர்தல் களத்தில் உங்கள் நிருபர்களின் நேர்முக வர்ணனை, உமாபதியின் அட்டைப்பட ஹாஸ்யம் எல்லாம் ரசிக்கும்படி அமைந்தது வியப்பில்லை; நிருபர்களின் கணிப்பு நூற்றுக்கு நூறு உண்மையாகி விட்டதே. அதற்காக ஒரு ஷொட்டு!

சென்னை, சாலமன்.

● அரசாங்க பஸ்களில் படிகளில் நின்று பயணம் செய்வோரைக் கண்டித்தால் எம்மைப் போன்ற கண்டக்டர்களைத் தவறாகப் புரிந்து கொள்கிறார்களே ஒழிய, அதன் பின் விளைவுகளை அவர்கள் எள்ளளவும் எண்ணிப் பார்ப்பதில்லை. இது மிகவும் வேதனை அளிக்கிறது எங்களுக்கு.

விருத்தாசலம்

வி. கே. செல்வராஜ்.

கடைசிக் கடிதம் பரிசு பெறுகிறது

விளக்கு வெளிச்சத்திலே...

-மோகனராஜா-



'டமால்' - குப்புற அடித்து விழுந்தான் வேலுச்சாமி. இரண்டு முட்டிக் காலும் 'சொர்' என்று எரிந்தது. கையில் இருந்த லாந்தர் விளக்கின் கண்ணாடி உடைந்து சிதறிக் கிடந்தது. விளக்கிலிருந்து சிந்திய கெரோஸின் தரையெல்லாம் பரவி குப்பென்று கெரோஸின் வாசம் அடித்தது. நெஞ்சுக்குள் ஏற்பட்ட பய உணர்வு உடம்பு முழுவதும் பரவி, அந்த மாலை நேரத்திலும் வியர்த்தது. கண்களில் கண்ணீர் குளம் கட்டியது. சிதறிக் கிடந்த கண்ணாடித் துண்டுகளும், பரவிக் கிடந்த கெரோஸின் நாற்றமும் அதன் விளைவாக ஏற்பட்ட பயமும் கீழே விழுந்ததில் ஏற்பட்ட வலியை மறந்து போகச் செய்தது.

செல்ல பாட்டியின் தகர மூடியில் ஆணி அடித்து ஓட்டை போட்டு அதில் ஒரு துணியை திரி மாதிரி சுருட்டி, கெரோஸின் ஊற்றி அந்த விளக்கு வெளிச்சத்தில் (வெளிச்சத்தை விட புகைதான் அதிகம் வரும்.) ஒன்பதாவதும் பாஸ் செய்து விட்டான்.

அந்த கிராமத்தில் முக்கால்வாசி வீட்டிலே கரண்ட் போட்டாயிற்று. இந்த அறுவடை முடிந்ததும் வேலு வீட்டிலேயும் கரண்ட் போட்டுவிடுவதாய் அப்பா சொல்லி இருக்கிறார். நல்லாப் படிச்சா அப்பா எது கேட்டாலும் வாங்கி தந்திடுவார். ஆனாலும் கோபம் வந்தா அவ்வளவுதான். அடிக்கறதுக்கே தனியா ஒரு மூங்கில் குச்சி வீட்டத்திலே செருகி வைத்திருக்கிறார். அந்த குச்சியை எடுத்தால் அவ்வளவுதான், எல்லோரும் நடுங்க ஆரம்பிச்சுடுவாங்க.

எது சொன்னாலும், கண்டிப்பாக அடி விழும். ''அய்யோ அடிக்காதீங்கோ, அப்பா''ன்னு அழுதா, 'எதுக்கு பாசாங்கு போடறே தொடறதுக்கு முன்னலே ஊரை கூட்டறியா வாயை மூடு' — இரண்டடி அதிகமாகவே விழும். வாயை மூடிட்டு இருந்தா, ''செய்யறதையும் செஞ்சுட்டு கல்லுளி மங்களுட்டமா நிக்கறே'' — அப்பவும் அடிதான்.

வேலுவுக்கு ஸ்கூல்லே வாத்தியார் காந்தியைப் பற்றி இயேசு கிறிஸ்துவை பற்றிச் சொல்லிக் கொடுக்கும்போது எல்லாம் அப்பா ஞாபகம் தான் வரும். எவ்வளவு கோபக்கார அப்பா! வேலுவுக்கு ஒரே வெறுப்பாய் இருக்கும். தப்பு செய்தா இதுவரைக்கும் ஒரு தடவை கூட அப்பா மன்னிச்சதே இல்லே. அப்பா எதிரிலே நிக்கவே பயமா, வெறுப்பா இருக்கும். இந்தப்பா ஏன்தான் இப்படி அடிக்கிறர், அவருக்கு இரக்கமே கிடையாதா? பொன்னேடை அப்பா அவனே சைக்கிள்ளே வைச்சிட்டு சினிமாவுக்கெல்லாம் கூட்டிட்டுப் போறர்.

வேலுவுக்கு மனசுக்குள் ஒரே ஏக்கமாய் இருக்கும்.

அப்பா ஏதாவது வாங்கிட்டு வந்தாக்கூட அம்மாகிட்டதான் கொடுப்பார். அம்மா தான் எல்லாத்தையும் எங்களுக்குக் கொடுப்பாங்க. பசங்களுக்கெல்லாம் அம்மா கிட்டதான் செல்லம். அம்மா அடிச்சா வலிக்காது. ஒரே சிரிப்புத்தான். வெவ்வே காட்டிட்டு ஓடிடுவோம்.

அப்பா, கோபமாய் வரும்பொழுது, எப்படி தப்பிக்கிறதுன்னு அம்மா சொல்லிக் குடுப்பாங்க. ''அப்பா ரொம்ப நல்லவரு. உங்க நல்லதுக்குத்தான் அடிக்கறர்'' அம்மா அடிக்கடி சொல்லுவார். 'சரி கொஞ்சம் மெதுவா அடிக்கக் கூடாதா'ன்னு சொன்ன அம்மாவுக்கு ஒரே சிரிப்பு.

அம்மாதான் அப்பாகிட்ட சொல்லி இந்த லாந்தர் விளக்கு வாங்கி கொடுத்தாங்க. விளக்குக் கண்ணாடியை தினமும் துடைச்சு கெரோஸின் ஊத்தறது என்னோட வேலே.

இன்னிக்கு அப்படித்தான் கண்ணாடியெல்லாம் துடைச்சு விளக்கு பத்த வைக்கலாம்னு வரும்பொழுது கீழே இருந்த பலகையை கவனிக்காம அது தடுக்கி கீழே குப்புற விழுந்து போன வாரம் வாங்கின லாந்தரும் கீழே விழுந்து கண்ணாடியும் உடைந்து போனது.

''என்னடா கெரோஸின் வாசம் அடிக்குது'' என்றவாறு எட்டிப் பார்த்த அம்மா வேலு விளக்குடன் கீழே கிடப்பதைப் பார்த்தாள். ''அடப்பாவி மகனே ஏன்டா விழுந்தே? உனக்குக் கண் எங்கடா போச்சு சனியனே, இரு, இரு. உங்கப்பா வரட்டும் வாங்கி ஒரு வாரம் கூட முழுசா ஆகலே,

நாகரீகம் வளர வளர உலகம் முழுவதும் எடை குறைவான உள்ள குழந்தைகளின் எண்ணிக்கை பெருகிக் கொண்டே வருகிறது. உலகம் முழுவதும் ஆண்டுக்கு 21 மில்லியன் குழந்தைகள் 2.5 கிலோ கிராமும் அதற்கும் குறைவான எடை உள்ளனவாகவும் பிறக்கின்றன. இந்தக் குழந்தைகளில் 90 சதவிகிதம் நாகரீகம் முற்றிய நகரத்தை சேர்ந்தவை என்பது குறிப்பிடத் தக்கது.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.





''உங்க பாடு தேவலாம் சார், மனைவி மேல் கோபம்னு அவளைப் பிறந்த வீட்டுக்கு அனுப்பிடலாம். என்னல் அப்படி அனுப்ப முடியாதே!''

''ஏன்?''

''நானே அவள் பிறந்த வீட்டில் தானே இருக்கேன்!''

—நா. பாலன்.

அதுக்குள்ளே உடைச்சிட்டயே போச்சு உங்கப்பா வந்தா நீ தொலைஞ்சே!''

அம்மா திட்டத்திட்ட வேலுவின் உடல் நடுங்க ஆரம்பித்தது. அம்மாவே இப்படி என்றால் அப்பா? மேலே விட்டத்தில் இருந்த மூங்கில் குச்சியைப் பார்த்ததும் வயிற்றைக் கலக்கியது. விவசாயிகள் போராட்டம்னு அப்பா டவுனுக்குப் போயிருக்கிறார். கடவுளே அப்பா இன்று வராமல் இருந்தால் நன்றாக இருக்குமே. நாளைக்கு காலையிலே சாமி படத்துக்கு முன்னாலே சேர்த்து வைச்சிருக்கிற காசை எடுத்துப் பத்தலைன்னு அம்மாகிட்ட கெஞ்சிக் கொஞ்சம் காசு சேர்த்து ஒரு கண்ணாடியை வாங்கிடலாம்.

இப்போ அம்மாகிட்டே கேட்டா அவ்வளவுதான். 'உடைச்சுப்போட்டு காசு வேறே கேக்கறயா'ன்னு கத்த ஆரம்பிச்சுடுவா. கடவுளே அப்பா காலையிலே வந்தா நல்லா இருக்குமே. அந்த விவசாயிகள் போராட்டம் முடிய லேட் ஆகணுமே. வேலு மனதிற்குள் ஜெபம் பண்ணிக் கொண்டு இருந்தான்.

அடுப்படியில் அம்மா திட்டிக்கொண்டே சமையல் செய்து கொண்டு இருந்தாள்.

நன்றாக இருட்டிவிட்டது.

கண்ணாடி இல்லாமல் லாந்தர் விளக்கு காற்றில் ஆடியது.

வேலு கையில் புத்தகத்தை வைத்துக் கொண்டு இருந்தான். கண்ணும் காதும் வாசலைப் பார்த்துக் கொண்டு இருந்தன. யாராவது வருகிற சப்தம் கேட்டால் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

அம்மா சமையலறையில் முணுமுணுத்துக் கொண்டு இருந்தாள்.

''என்னத்தை பெரிய போராட்டம் வேண்டிக் கிடக்குது. போனாலும் நேரமே காலமே வர வேண்டாமா, அட இங்க வீட்டிலே காத்துட்டு இருப்பாங்கன்னு நினைப்பு வேண்டாமா, இந்த சனியன் வேற வௌக்கை கீழே போட்டு கண்ணாடியை உடைச்சிட்டு நிக்கறான். அதுவேற மனசுக்கு கஷ்டமா இருக்குது.''

அம்மாவின் புலம்பல் தொடர்ந்து கொண்டு இருந்தது.

நேரம் ஓடிக் கொண்டு இருந்தது.

வாசலில் காலடி சப்தம்.

வேலுவுக்குத் திக்கென்றது நெஞ்சம்.

அம்மா அவசரமாக வாசலுக்கு வந்தாள்.

வந்தது பொன்னாச்சி அத்தை!

''என்ன ஆயா இன்னும் வரலையா!''

அம்மா உதட்டைப் பிதுக்கினாள்.

''என்னமோ டவுன்லே பெரிய தகராறாமே, விவசாயிகளையெல்லாம் போலீஸ் புடிச்சுட்டுப் போகுதாம், நம்ம சின்னப்பன் வந்து சொன்னான். அப்புறம் அந்த ராமசாமியை...''

பொன்னாச்சி அத்தை சொல்லிக்கொண்டு இருந்தாள்.

வேலுவுக்கும் அம்மாவுக்கும் எதுவும் காதில் விழவில்லை.

கொஞ்ச நேரம் அளந்து விட்டு அத்தை போய் விட்டாள்.

அம்மா சாமி படத்தின் முன் போய் உட்கார்ந்து விட்டாள். அம்மாவை பார்க்க



வேலுவுக்கு மனசை என்னவோ செய்தது. மெதுவாகப் போய் அம்மாவிடம் உட்கார்ந்தான்.

''டேய், மணி பத்தரையாகுது. நீபோய்ப் படுத்துக்கோ.''

''அம்மா, அப்பா இப்ப வந்துடுவாங்களா?''

''வந்துடுவாங்க, நீ போய்ப் படு.''

பாயில் போய்ப் படுத்துக் கொண்டான் வேலு. திடீரென்று மனதில் ஒரு குற்ற உணர்வு நறுக்கென்று தைத்தது. 'நான் அப்பா இன்னைக்கு வரக் கூடாதுன்னு நினைத்தது தப்போ?' என்று நினைத்தான். மெதுவாக அம்மாவைப் பார்த்தான். சாமி படத்தைப் பார்த்தவாறு அம்மா உட்கார்ந்து கொண்டு இருந்தாள்.

வேலு மெதுவாக சாமி படத்தின் அருகே சென்றான். அவனையும் அறியாமல் கண்களில் கண்ணீர் வந்தது. ''சாமி கடவுளே நான் நினைச்சது தப்பு. எங்கப்பா சீக்கிரம் வரணும்'' என்று மனதில் நினைத்தவாறு ஒரு நிமிடம் நின்றான். கண்ணில் தொடர்ச்சியாக கண்ணீர் வந்து கொண்டு இருந்தது.

மீண்டும் போய்ப் பாயில் படுத்துக் கொண்டான்.

அப்பா சீக்கிரம் வரவேண்டும் என்று மனம் ஜெபித்துக் கொண்டே இருந்தது. அப்பாவுக்கு ஏதாவது ஆகி இருக்குமோ என்று நினைக்கும்பொழுது மனம் பதறியது. கண்ணீர் பாயை நனைத்தது. மூக்கில் சளி அடைத்துக் கொண்டது. சத்தம் கேட்காமல் மெதுவாக மூக்கைச் சிந்திக்கொண்டான்.

'சே, அப்பாவுக்கு ஒன்றும் ஆகி இருக்காது.' மெதுவாகத் தன்னைத் தேற்றிக் கொண்டான்.

'கடவுளே என்னை மன்னித்துவிடு. அப்பா சீக்கிரம் வரணும். அப்பா சீக்கிரம் வரணும். அப்பாவுக்கு ஒன்றும் ஆகி இருக்காது.' — திரும்பத் திரும்ப அவன் வாய் முணுமுணுத்துக் கொண்டு இருந்தது. தன் உள்ளத்தின் ஆழத்தில் அப்பாவின் மீது இவ்வளவு அன்பு இருக்கிறதா என்று நினைத்து அவனுக்கே வியப்பாய் இருந்தது. லாந்தர் கண்ணாடியை உடைத்ததற்கு எவ்வளவு அடி கிடைத்தாலும் பரவாயில்லை. அப்பா சீக்கிரம் வந்தால் போதும் என்று மனதில் வேண்டிக் கொண்டான்.

மனசுக்குள் கொஞ்சம் நிம்மதியாக இருந்தது.

வாசலில் செருப்புச் சப்தம்.

வேலு ஆவலுடன் தலையைத் தூக்கிப் பார்த்தான்.

ஆ, அப்பா! அப்பாவேதான்.

மனசுக்குள் சந்தோஷம் பொங்கியது.

கண்களை மூடித் தூங்குவது போலப் படுத்துக் கொண்டான்.

லாந்தர் கண்ணாடி உடைந்தது பற்றிய கவலை, அதற்குக் கிடைக்கப் போகும் அடி எல்லாவற்றையும் அப்பா வந்து விட்ட சந்தோஷம் மறைத்து விட, வேலு நிம்மதியாகத் தூங்க ஆரம்பித்தான்.

எண்கண்ணும் செம்பொன்னும்



✕ எண்கண் வேலன்

சிக்கல் சிங்கார வேலனைத் தரிசித்து அவன் அழகில் பிரமித்துப்போனார் முத்தரச சோழர். அதைச் செய்து வைத்த சிற்பி இதே மாதிரி இன்னொரு சிலை வடித்து விடக்கூடாது என்று தோன்றி விட்டது அரசருக்கு. சிற்பியின் கட்டை விரலைக் கேட்டுப் பெற்றுக் கொண்டார். அப்படியும் எட்டுக்குடி தலத்தில் வேலவனைச் சமைத்து விட்டார் சிற்பி. அதைக் கண்டு மனம் பொறாத அரசர் சிற்பியின் கண்களையே பறித்து விட்டார்!

அதன் பிறகு எண்கண் தலத்துக்கு வந்து மரத்தடியில் அமர்ந்தார் சிற்பி. நம்மைப் படைக்கும் தெய்வத்தையே படைக்கும் கரங்கள் சும்மா இருக்குமா? தன் எண்ணத்தில் உருவான குமரனை உருவாக்கத் தொடங்கினார். எங்கிருந்தோ வந்த சிறுமி ஒருத்தி அவருக்கு உதவிகள் செய்தாள். மயிலின் கால்களிலிருந்து தொடங்கி, மயில் வாகனத்தில் பன்னிரு கரங்களுடன் மிளிரும் வேலவனை எண்ணமே கண்ணாகக் கொண்டு உருவாக்கி விட்டார். ஆனால் கண்களைத் திறக்க வேண்டுமே. பன்னிரண்டு இருவிழிகளை தயை நிறைந்த நயனங்களாகத் திறக்க முடியுமோ, முடியாதோவென்று பயமும் துக்கமும் அடைந்தார் சிற்பி. அந்த சமயத்தில் அவர் செதுக்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து ஒரு சிதல் தெறித்து அருகிலிருந்த பெண்ணின் மீது பட்டது. அந்தக் காயத்திலிருந்து ஒரு துளி இரத்தம் தெறித்துச் சிற்பியின் கண்களில் பட்டது. குருடனாக இருந்த சிற்பி பார்வை பெற்றார். ஆனால் சிறுமியைக் காணவில்லை. முருகப் பெருமானுடைய கருணைக்கு அளவேது?

விழி தந்த தயாபரனுக்கே விழிகளைத் தரும் பெரும் பாக்கியம் கிட்டியது சிற்பிக்கு. அவரைச் சில்ப முனிவரென்றுகொண்டாடி மகிழ்ந்தார்கள் அரசனும், மக்களும்.

இவ்விதம் இறைவனால் மட்டுமின்றி சிற்பியாலும் சிறப்புப் பெற்ற எண்கண் தலத்துக்கு "இங்க நாட்டு இங்கணானை பவித்ர மாணிக்க சதுர்வேதி மங்கலம்" என்ற நீண்ட பெயரும் உண்டு! தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணம் திருவாரூர்ச் சாலையில் காப்பணாமங்கலத்துக்கு இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள எண்கண் குமரப் பெருமான் புகழ் ஓங்கியுள்ள தலமாக விளங்குகிறது.

எண்கண் என்றதுமே, சிவஞான வள்ளலாருடைய பாடல் ஞாபகம் வருகிறது.

"எண்கணனைக் குட்டிய குட்டு எங்கேனும் பட்டதோ
மங்கை அரிமேல் அடித்த மத்தடி போய் எங்கேனும்
பட்டதோ எங்கள் பரமன் மேல் பட்ட அடி
பட்டதே எவ்விடத்தும் பார்."


சிவபெருமானே எல்லா உயிர்களிலும் குடிகொண்டு விளங்குகிறார் என்பதைச் சாதிக்க வந்த சிவஞான வள்ளலார் 'முருகன் பிருமாவைக் குட்டிய போது யாருக்காவது வலித்ததா? யசோதை கண்ணனை மத்தால் அடித்தாளே அது யார் மீதாவது பட்டதா? எங்கள் ஈசனை பாண்டிய ராஜன் அடித்த பிரம்படி எறும்புக் சடையானஎல்லா உயிர்கள் மீதும் பட்டதே' என்று எக்களிப்புடன் கூறுகிறார்.' சிவபெருமான் அடிபட்டதில் அவருடைய மேன்மை தெரிந்து விட்டதல்லவா?

திருவிண்சாருடைய மகா தேவருடைய கோவிலாக இருந்த போதிலும், முருகனின் மகத்துவம் மிகுதியான தலமான போதிலும் ஷண்மதத் தலமாகவே காண்கிறோம். பிரும்மதேவர் விடுதலை பெறவும், இழந்த தொழிலைத் திரும்பப் பெறவும் சிவபெருமானைப் பூஜித்ததால் பிரும்மபுரீசுவரர் என்று நாமம்தாங்கிய சிவபெருமான், குமரன், பிருஹந்நாயகி என்று போற்றப்படும் சக்திதேவி, ஆதி நாராயணப் பெருமான் என்று அழைக்கப்படும் மகாவிஷ்ணு ஆகிய அனைவரும் காட்சி தருவதோடு

ஆனந்தி

சூரிய பகவானுக்கும் உகந்த தலமாக இருக்கிறது. வருடத்தில் ஐந்து நாட்கள் ஆதவன் தன் பொன்மயமான கிரணங்களால் உதயமாகும் போதே சிவலிங்கத்தைப் பூஜிக்கிறார். அதனால் பாஸ்கர க்ஷேத்திரம் என்ற பெயரும் வழங்குகிறது.

எண்கணன் என்றால் பிரும்மா. நான்முகனுக்குச் சிருஷ்டித் தொழிலை முருகப் பெருமான் உபதேசித்த இடமாதலால் எண்கண் என்றும் பிரும்மபுரி என்றும் பெயர் பெற்றது. இங்கு முருகப் பெருமான் பிரணவ ரூபியாகவே மயில் வாகனத்



✖ செம்மங்குடி

தில் அமர்ந்து காட்சி தருகிறார். ஸோமாஸ்கந்தர் படிவத்திலுள்ளது போல தந்தையின் சந்நிதிக்கும் அன்னையின் சந்நிதிக்கும் மத்தியில் கந்தனின் சந்நிதி இருப்பது இன்னொரு விசேஷம். தெற்குப் பார்த்து ஆறுமுகத்தோடு உபதேச கோலத்தில் அமர்ந்திருப்பது இவரே குருகுஹன் என்பதைத் தெளிவாக்குகிறது.

விக்கிரம சோழன் கல்வெட்டும், அவருடைய தந்தையான முதலாம் குலோத்துங்க சோழனின் கல்வெட்டும் இந்தக் கோவிலில் இருக்கின்றன.

தேவதேவனின் சந்நிதியில் அர்ச்சனை செய்து பிரஸாதங்கள் வழங்கிய பரமசிவ குருக்கள் கோவிலைப் பற்றிய புராணக் கதைகள், வரலாறு இரண்டையுமே எடுத்துக் கூறுகிறார்.

முருகப் பெருமானின் சந்நிதியில் மனமுருகித்தான் நிற்கிறோம். சில்ப முனிவருக்குப் பணிப்பெண்ணாக இருந்து உதவிய வள்ளல்.

''தயை நிறைந்த திருவிழிகள் பனிரண்டும்
தவழ்ந்த முறுவல் வதனம் ஆறும்'' என்ற பாடல் வரிகள் ஸிம்ஹேந்திரமத்தியமத்தில் உள்ளத்தில் ரீங்காரமிடுகின்றன. ஆறுமுகங்கள், சிகிவாகனம், மூக்கண்கள், வஜ்ரம், சக்தி, திரிசூலம், கேடயம், வில், சக்கரம், பாசம், குக்குடம் முதலியவற்றைத் தாங்கும் கரங்கள், வட்டவடிவமான திருவாசி இந்தக் கோலத்தில் அருளாளன் தரிசனம்.

உற்சவ மூர்த்தியைச் சுற்றிச் சுற்றி வந்து தீபத்தின் ஒளியில் தரிசிக்கிறோம். ஆறுமுகங்களின் அழகு மட்டுமா? ஒவ்வொரு விரலும், நகமும் கூட அற்புத அழகு. பன்னிரு காதுகளிலும் தோடுகள் அணிவிக்கலாம். பெருமை பொங்க நிற்கும் தேவியர்.

''கலியுகதேவதையே திருவடி கை தொழுவார் நிதியே!'' என்று அருள் நிதியான குமரனின் திருவடிகளைத் தொழுது நிற்கும் போது, 'என்ன இது! மயில் உயிர் பெற்று விட்டதா என்ன?' என்று ஒரு கணம் திகைத்துத்தான் போகிறோம். கோவிலில் வளர்க்கும் மயில் அகவும் சப்தம் கேட்டதும் முருகன் வீற்றிருக்கும் மயிலே அகவுவது போல ஒரு பிரமை!

அருணகிரி நாதரின் திருப்புகழ்பெற்ற தலம். இத்தனை சிறப்புகளை உடைய இந்தத் தலத்தில் ஆறு கால பூஜைகளை நித்தியம் நடத்துவதற்காக ஓர் அறக்கட்டளை நிதி ஏற்படுத்தியுள்ளார்கள். நூறு ரூபாய் அனுப்பி வைத்தால் அந்தத் தொகையை முதலீடு செய்து ஆண்டுக்கு ஒருநாள் ஒரு கால பூஜை செய்து பிரஸாதம் அனுப்ப ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.

• • •

எண்கண் தலத்துக்கு அருகில் சோழ சூடாமணி ஆற்றங்கரையில் அமைந்திருக்கிறது செம்மங்குடி. 'எந்த செம்மங்குடி?' என்று கேட்கிறீர்களா? ஆமாம்! சங்கீத வித்வானான செம்மங்குடி ஸ்ரீநிவாஸ ஐயர் அவர்களுடைய ஊர்தான்.

குறுமுனிவரான அகஸ்தியர் குடமுருட்டி ஆற்றங்கரையில் சிவலிங்கம்பிடித்து வைத்துப் பூஜை செய்து கொண்டிருந்தார். திடீரென்று வெள்ளம் பெருகி சிவலிங்கம் மிதந்து கொண்டே போய் ஓரிடத்தில் தங்கியது. அதனால் அந்த லிங்கத்துக்கு அகஸ்த்யேச்வரர் என்ற பெயரும் ஏற்பட்டது. இந்த அகஸ்த்யேசுவரர் குடிகொண்டிருக்கும் தலம் செம்மங்குடி. செம்பொன்குடி என்பது செம்மங்குடியாக மருவி வழங்குகிறது என்று கூறுகிறார்கள்.

செம்மங்குடி கோவிலில் குடிகொண்டு அருளைப் பொழியும் அம்பிகை ஆனந்தவல்லி. ஒவ்வொரு பௌர்ணமியிலும் ஊரில் உள்ளவர்கள் அனைவரும் கோவிலுக்குச் சிரத்தையுடன் போகிறார்கள். அன்று நடைபெறும் நவாவரண பூஜையில் பங்கு பெறுகிறார்கள்.

✖ எண்கண்



"சந்திர மண்டல மத்யகா" என்று தேவியை துதிக்கிறது ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமம். முழுநிலவின் சௌந்தர்யத்தை இயற்கை எழில் சூழ்ந்த இடத்தில் அனுபவித்து ஆனந்த பரவசம் அடைந்தவர்கள் சந்திரமண்டலத்தின் மத்தியில் அன்னை இருந்து கொண்டு தன் அன்பை தன் நிலாக்கதிர்களாகப் பொழிகிறாள் என்பதை நன்குணர்வார்கள்.

அம்பிகை வெளிர்மஞ்சளில் சிவப்புக்கரை,போட்ட சேலையைப் பாங்காக அணிந்து, இரட்டைத் திருமாங்கல்யமும், திருவாபரணங்களும் அணிந்து இரு கரங்களில் ருத்ராக்ஷமும்,தாமரை மலரும் தாங்கி அபய வரத ஹஸ்தங்களும், ஆனந்தப் புன்னகையும், நாசியில் ஒளிவீசும் புல்லாக்கும் அணிந்து தரிசனம் தருகிறாள்.

"கமலாம்பாம் பஜரே" என்று கல்யாணி ராக நவாவரண க்ருதி கேட்கிறது.

பெண்கள் எல்லோரும் ஆர்வத்தோடு பௌர்ணமி பூஜையில் நவாவரணக்கிருதிகளைப் பாடி மகிழ்ச்சியோடு அம்பிகையின் தாடங்க மணிந்த திருச்செவிகளில் வார்க்கிறார்கள்.

செம்மங்குடியில் ஆற்றங்கரையோரமாகக் கோயில் கொண்டிருக்கும் கரும்பாயிரம் சுவாமியைப் பற்றி ஒரு சுவையான கதை வழங்குகிறது. ஒரு விவசாயி வண்டியில் கரும்பு ஏற்றிக் கொண்டு போகும் போது ஆற்றங்கரையில் தங்கினன். அரசமரத்தில் குடியிருந்த முனீச்வரன் "கரும்பு தா" என்று கேட்டாராம். விவசாயி கொடுக்கவில்லை. காலையில் எழுந்தால்வண்டியில் ஒரு கரும்பு கூட இல்லை. அத்தனையும் சுவைத்துச் சக்கையாகக் கிடந்தது. அன்று முதல் அந்தக் கரும்புக் கொல்லையிலிருந்து கரும்பாயிரம் சாமிக்கு வண்டியில்கரும்பு கொண்டு வந்து கரும்புப் பந்தல் போடும் வழக்கம் ஏற்பட்டது. சிவன் கோவிலில் கரும்பாயிரம் சாமியின் உற்சவ மூர்த்தி கையில் கிளியுடன் செங்கோல் தாங்கி பெரிய தலைப்பாகையுடன் பூமண்டலச் சக்கரவர்த்தியாகக் காட்சியளிக்கிறார்.

கிழக்கே சிவன்கோவில்; மேற்கே பெருமாள்கோயில். கிராமத்தின் இஷ்டதேவதை மாரியம்மன். ஆடி மாதத்தில் உற்சவம் தடபுடல். இரவெல்லாம் நாடகமும், கூத்தும் தான்.

ஆறு குளம், தோப்பு வயல் என்று இயற்கை எழில் கொஞ்சும் எத்தனையோ தமிழ்நாட்டு கிராமங்களைப் போல் செம்மங்குடியும் இருக்கிறது. மக்களும் பக்தி சிரத்தையாக இருந்து கோயில்களைப்பராமரிக்கிறார்கள். ஆயினும் வேறு பல கிராமங்களில் உள்ள ஒரு குறை இங்கும் நிலவுகிறது. அது நீர்நிலைகளைப் பாதுகாக்காததுடன் மக்கள் சிலர் அசுத்தப் படுத்துவதுதான். தாயைப் பழித்தாலும் தண்ணீரைப் பழிக்காதே என்ற பழமொழி நிலவும் தமிழகத்தில் இந்நிலை வருந்தத்தக்கது. பரிசுத்தமானநீரின் முக்கியத்துவத்தை உணர்த்தத்தானே நமது முன்னோர்கள் ஆற்றங்கரையிலும் குளக்கரையிலும் படித்துறை அருகே மரத்தடி விநாயகர்களை பிரதிஷ்டை செய்து பூஜித்தார்கள்.

"ஏன் சார் நான் சொன்ன ஜோக்கைக் கேட்டு இப்படி விடாமத் தொடர்ந்து சிரிச்சுக்கிட்டே இருக்கீங்களே... அவ்வளவு நல்லாவா இருந்தது?"

"அதுக்கில்லே சார்!... சிரிக்கறதை நிறுத்தினா நீங்க வேற ஏதாவது ஜோக்கைச் சொல்லி அறுப்பீங்களேன்னு பயந்துக்கிட்டுத்தான்...!"

—எம். பாஸ்கர்.





உலகின் பெரிய செய்தித்தாள் ஜப்பானில் வெளிவரும் 'யோமியூரி ஷிம்பன்' என்பதாகும். காலைப்பதிப்பு, மாலைப் பதிப்பு இரண்டுமாக 136 லட்சம் பிரதிகள் அச்சாகின்றது. இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் மட்டும் 3059 பேர்கள் பணிபுரிகின்றனர்.

—ஆர். எஸ். சுப்பிரமணியன்.

சொர்க்கத்தில் நிச்சயமாகி



திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படலாம். ஆனால் அவை வெற்றி அடைவதும் தோல்யுறுவதும் நம் கையில்தான் இருக்கிறது. ஆதர்ச தம்பதிகளாய் விளங்க, அழகாகக் குடும்பம் நடத்த, நீங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை:

1. உங்களைப் புரிந்து கொள்ளுங்கள்.
2. உங்கள் வாழ்க்கைத் துணையைப் பொக்கிஷமாகக் கருதுங்கள்.
3. திருமணம் செய்து கொள்ளும் முன்னர் மணவாழ்க்கைக்கு முழுமையாக உங்களை அர்ப்பணித்துக் கொள்ள மனத்தைப் பக்குவப் படுத்திக் கொள்ளுங்கள்.
4. உடலுறவு ஒரு கலை என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
5. பெற்றோராவதற்கு முன் அந்த இனிய நிகழ்ச்சிக்கு உங்களைத் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
6. அளவான குடும்பத்தை உருவாக்க, அறிவோடு திட்டமிடுங்கள்.
7. மணவாழ்வில் விட்டுக் கொடுக்கும் தன்மை மிக மிக அவசியம். சின்ன விஷயங்களைக் கௌரவப் பிரச்சினைகளாக்காதீர்கள்.
8. மணவாழ்வைப் பேணிப் போற்றி வளருங்கள்.
9. தேவையான போது அனுபவஸ்தர்களை அணுகி என்ன செய்யலாம் என்று யோசனை கேட்கத் தயங்காதீர்கள்.
10. எப்போதும் இந்தப் பொன்னான விதியைக் கடைபிடியுங்கள் – உங்கள் துணைவர் அல்லது துணைவி எப்படியெப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ அப்படியே நீங்களும் அவரிடம் நடந்து கொள்ளுங்கள். ஒருவர் மற்றொருவரின் தேவைகளை அறிந்து கொள்ளுங்கள்; உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுங்கள். மன்னிக்கப்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதில் தவறில்லை. அதே வேகத்தை மன்னிப்பதிலும், காட்டுங்கள். ஆள நினைத்தல், அவமதித்தல், புறக்கணித்தல், துரோகம் செய்தல் – இவற்றை எப்படி நீங்கள் விரும்ப மாட்டீர்களோ அப்படியே உங்கள் துணைவரும் விரும்ப மாட்டார் என்பதை நினைவு வைத்துக் கொள்ளுங்கள். எந்த மனித உறவிற்கும் இந்த விதி பொருத்தமானதே. மணவாழ்வில் இதை அடிப்படைக் கொள்கையாக்கிக் கொண்டால் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்பட்ட உங்கள் திருமணம் பூவுலக சொர்க்கமாய் மலரும்.

நன்றி: ஏ மேரேஜ் மான்யுவல்

குழந்தை பிறந்த 6 மணி நேரத்திற்கு பின்பு, அது முதல் தடுப்பு ஆகாரம் பெறுகிறது. அதை ஊட்டுவது நீங்கள்தான்.



இயற்கையின் ஒரு வரப்பிரசாதம் தாய்ப்பால்.

தாய்ப்பாலில் இயல்பாகவே நோய் எதிர்ப்புப் பொருள் அடங்கியுள்ளது. புதிதாகப் பிறந்த குழந்தைக்கு, வயிற்றில் வாயுக்கோளாறு மற்றும் இதர நோய்களுக்கு எதிரே பாதுகாப்பு அளிப்பதில் முக்கிய பங்காற்றுகிறது தாய்ப்பால்.

இயல்பான ஊட்டச்சத்து

இயற்கையும் அறிந்துள்ளது: குழந்தைக்கான தாய்ப்பாலை உன்னத உணவாக்குபவை அதில் இயல்பாக சரிவிகிதமாகக் கலந்துள்ள உடல் வளர்ச்சிச் சத்துக்கள் (புரதம்), சக்தி தரும் சத்துக்கள் (கார்போ ஹைட்ரேட்டுகள், கொழுப்பு) ஆரோக்கியமான பாதுகாப்புச் சத்துக்கள் (வைட்டமின்கள்) ஆகும் (உதாரணமாக தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் வைட்டமின் 'சி' குறைவினால் ஏற்படும் ஸ்கர்வி நோயால் பொதுவாக பாதிக்கப் படமாட்டார்கள்) முலைப்பால் உண்ட குழந்தை பாதுகாப்பையும் தன்னம்பிக்கையையும் பெறுகிறது. காரணம், பசியைத் தணித்திட குழந்தை முலைப்பாலை உறிஞ்சும்போது, நீங்கள் குழந்தையை அரவணைத்துப் பாசத்தையும் சேர்த்தல்லவா பாலூட்டுகிறீர்கள்.

உலகளாவிப் பிரபலமடைகிறது.

அதன் ஊட்டச்சத்து மற்றும் இதர நலன்கள் விரிவாகவும் அதிகமாகவும் உணரப்படுவதால் மேலை நாடுகளிலும் கூட முலைப்பால் கொடுத்தல் மிகவும் அதிகமாக பிரபலமாகி வருகிறது.

உங்கள் உடல் நல பாதிப்பு அல்லது பால் பற்றுக்குறை ஆகியவற்றால் நீங்கள் குழந்தைக்கு பால் கொடுக்கமுடியாமல் போனால் என்ன செய்வது?

உங்கள் குழந்தைக்கு நீங்கள் சிறந்த 'தாய்ப்பால் மாற்று' தேர்ந்தெடுக்க வேண்டும்.

ஸ்ப்ரே ட்ரை செய்யப்பட்ட அமுல்ஸ்ப்ரே

அமுல் ஸ்ப்ரே-நன்கு சமச்சீராக கலக்கப்பட்ட சத்துக்களுடன் கூடியது—பிரதம தரமுள்ள புரதம், ஜீரணிக்க எளிதான கொழுப்பு மற்றும் கார்போ ஹைட்ரேட்டுகள், சரியாகக் கலந்துள்ள வைட்டமின்கள் மற்றும் தாதுக்கள்.

ஏற்கனவே கொதிக்க வைத்த வெதுவெதுப்பான நீரில் அதைக் கலப்பது எளிது, முன்னாலேயே அதை பசைபோல் தயாரிக்கவேண்டிய அவசியம் இல்லை.

சிக்கனமானது

டின்னில் அடைக்கப்பட்டுள்ள குழந்தை உணவுகளில் மிகவும் சிக்கனமானது, அமுல் ஸ்ப்ரே. காரணம், அது இந்தியாவின் 'வெண்மைப் புரட்சிக்கு' முன்னோடியான நவீன பால் நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டது.

ஆனால் கொதிக்க வைத்த நீர், சுகாதார முறையில் கிருமி நீக்கம் செய்யப்பட்ட பாத்திரங்கள் மற்றும் பால்புட்டிகள் உபயோகித்தலை உறுதி செய்து கொள்ளுங்கள். பால் கலக்கப்படும்போது அதிகம் நீராகி விடுவதை தவிர்ப்பதற்கும், போதுமான ஊட்டச் சத்துக்களை உறுதி செய்வதற்கும் டின்மீது குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை கவனமாக பின்பற்றுக.



அமுல்ஸ்ப்ரே

தாய்ப்பாலுக்கு அடுத்ததுதான்

இலவசம்! அமுல் வளர்ப்பு வழி—
இதில் அடக்கியுள்ளவை: கருத்தரித்தல், பேறு காலத்திற்கு முன் கவனிப்பு, பிரசவம், தாய்ப்பால் ஊட்டுதல், வெளியில் கிடைக்கும் உணவு வகைகள், லேசான திரவ உணவு தருதல், குழந்தையின் அன்றாடக் கடன்கள், குழந்தையின் வளர்ச்சி, நோய்த் தடுப்பு, முதலுதவி, பொதுவான நோய்கள், நோயுற்ற குழந்தையைப் பாதுகாத்தல் ; தமிழ், இந்தி, மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம், தெலுங்கு மற்றும் மலையாள மொழிகளில்.

உங்கள் பெயர் மற்றும் முகவரியுடன் ரூ. 1.25 தபால் தலை ஒட்டி எழுதுக இம் முகவரிக்கு: தபால் பெட்டி எண் 10124, பம்பாய் 400 001.

விற்பனைக்கு விடுப்போர்:
குஜராத் கோ-ஆப்பரேடிவ் மில்க் மார்க்கெட்டிங் :.பெடரேஷன் லிமிடெட்,
தபால் பெட்டி எண் 10, ஆனந்த் 388 001, குஜராத் மாநிலம்.

ASP/AS-TAM5/83

"அப்பப்பப்பா... எத்தனை விளம்பரங்கள்!" என்று வியப்புடன் கூறினார் ராஜகோபாலன், தட்டுக்கு அருகே மடித்து வைத்த செய்தித் தாளை மேலோட்டமாகப் புரட்டிய படி.

"இருக்காதே தா" என்றாள் ரஞ்சிதா. "ஞாயிறு இதழ்-ஆயிற்றே!"

"திருமண விளம்பரங்களைப் படியுங்கள் அப்பா. ரஞ்சிதா ஒரு நல்ல கணவனைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம்!" என்றான் விவேக் குறும்பாக.

அஞ்சலி விவேக்கைக் கடிந்து கொள்ள, ரஞ்சிதாவின் பாதம் சட்டென்று விவேக்கின் கணுக்காலை நோக்கித் திரும்பியது. ஆனால் ராஜகோபாலன் இந்த மேஜையடி நாடகத்தைக் கவனிக்கவில்லை....

"இப்போதே இடம் கிடைக்கும்!" என்று உரக்கப் படித்தார் ராஜகோபாலன். "அங்கீகாரம் பெற்ற பள்ளி: எல்.கே.ஜி. முதல் பத்தாவது வகுப்பு வரை. பள்ளிக்கூட பஸ் வசதி உண்டு."

"அதை ஏன் படிக்கிறீர்கள்?" என்றாள் அஞ்சலி. "நம் குழந்தைகள் கல்லூரியில் அல்லவா சேர வேண்டும்?"

"ஒரு பக்கம் முழுவதும் இதே மாதிரி விளம்பரங்கள் தான்!" என்றார் ராஜகோபாலன்.

"பள்ளிக்கூடம் இல்லாத தெருக்களே இல்லைபோலிருக்கிறது இங்கே. அப்படியும் ஏன் இந்த அட்மிஷன் தொல்லைகள்?"

"உண்மைதான் அப்பா. ஆனால் எல்லா பள்ளிகளும் பிரபலமானவை அல்லவே? என் பள்ளிக்கூடத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நகரிலேயே சிறந்தது எங்கள் பள்ளிதான்" என்றாள் ரஞ்சிதா.

"அதாவது பெண்கள் பள்ளிக்கூடங்களில் — இல்லையா?" என்றான் விவேக், இளக்காரமாக. "எந்த அளவுகோலை வைத்துப் பார்த்தாலும் எங்கள் பள்ளி தான் மிகச் சிறந்தது!"

"பாவம் ராதா," என்றாள் அஞ்சலி. "விவேக்கின் பள்ளியிலிருந்து ஓர் அப்ளிகேஷன் பாரம் வாங்குவதற்கு அவள் நாலு மணி நேரம் க்யூவில் நிற்க வேண்டி வந்தது!"

"எத்தனை முட்டாள்தனம்!" என்று இரைந்தார் ராஜகோபாலன். "இங்கே என்னடா என்றால் எல்லாப் பள்ளிக்கூடங்களுமே மிகச் சிறந்தவை என்றும், உடனே விண்ணப்பம் செய்யுங்கள் என்றும் விளம்பரங்கள். அங்கேயோ ராதா தன் பிள்ளையைச் சேர்க்க, ஏகமாய்க் கெடுபிடி பண்ணும் ஒரு பள்ளியில் பல மணி நேரம் க்யூவில் நிற்கிறாள். எல்லோரும் ஓரிரு பள்ளிகளிலேயே முட்டி மோதுவானேன்?"

"விவேக்கைச் சேர்க்க, தலைமை ஆசிரியர் அறைக்கு வெளியே மணிக்கணக்காகக் காத்திருந்தது மறந்து விட்டதாக்கும் உங்களுக்கு?" என்றாள் அஞ்சலி. "இப்போது செல்வாக்குள்ள அரசாங்க அதிகாரியாக இருக்கும் உங்கள் பள்ளித் தோழரை சிபாரிசு பிடிக்க ஓடினீர்களே! அது மட்டுமா, ரஞ்சிதாவுக்காக மிஸஸ் ராமனைப் பார்த்து அவள் கணவரிடம் சிபாரிசு செய்யச் சொல்லி....."

"இரு... இரு..." என்று குறுக்கிட்டார் ராஜகோபாலன். "அந்த நாளில் இந்த மாதிரி சிறந்த பள்ளிக்கூடங்கள் நிறைய இருக்கவில்லையே?"

"ஆங்... அந்த நாளிலும் இருந்தன. ஆனால் நாம் தான் சிறந்த பள்ளி போதாது என்று மிகச் சிறந்த பள்ளிக்கூடத்தையே தேடி ஓடினோம்!"

"அந்த மாதிரி மிகச் சிறந்த பள்ளிக்கூடங்களில் தான் எல்லோரும் க்யூவில் நிற்கிறார்கள்!" என்றாள் ரஞ்சிதா.

"பணத்தையும் கொட்டிக் கொடுக்கிறார்கள்!" என்று வெடித்தார் ராஜகோபாலன். "எங்கள் ஆபீசில் மிஸ்டர் மணியன் ஐயாயிரம் ரூபாய் கொடுத்தாராம் அவர் பையனை ஒரு புகழ் பெற்ற கிண்டர்கார்டன் பள்ளியில் சேர்க்க. என்ன அக்ரமம்!"

"அதற்கு ஏன் கோபப்படுகிறீர்கள் அப்பா?"





பள்ளிகள் படுத்தும் பாடு

மாலினி சேஷாத்ரி



என்று கேட்டாள் ரஞ்சிதா. ''உங்கள் நண்பர் அதைப் பயனுள்ள காரியமாகக் கருதியிருக்கலாம். ஏன், நல்ல ஃப்ரிஜ்ஜோ, டீவியோ வாங்க நீங்கள் செலவழிப்பதில்லையா என்ன?''

''அது வேறு விஷயம்'' என்று ஆரம்பித்தார் ராஜகோபாலன். ''கல்விவசதி நமது அடிப்படை உரிமை. ஆடம்பர விஷயம் அல்ல!''

''இந்தியாவில் கல்வியே இன்னும் ஆடம்பர விஷயம் தான்!'' என்று அடித்துச் சொன்னான் விவேக். ''எங்கள் ஆசிரியர் கூடச் சொல்லுவார். எங்களுக்கு இந்தக் கல்வி · பயிலக் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்று.''

''வருஷா வருஷம் இதே கதைதான்!'' என்றாள் அஞ்சலி. ''பெற்றோர்கள் பாவம், பள்ளிக்கூட அட்மிஷனுக்காக அலைந்து அல்லாடுகிறார்கள்.''

''இந்த வருஷம் கமலா மாமியின் குடும்பத்துக்கு விடுமுறை நாட்களை அநுபவிக்கவே முடியாது. மொத்தக் குடும்பமுமே குழந்தை சஞ்சய்யின் அட்மிஷன் விஷயத்தில் ஏக பிஸியாக இருக்கிறது'' என்றாள் ரஞ்சிதா.

''இந்தத் தொல்லைகளுக்கு எல்லாம் நான் ஓர் அருமையான முடிவு வைத்திருக்கிறேன்!'' என்று அறிவித்தார் ராஜகோபாலன். ''மேற்கத்திய நாடுகளைப் போல, நாமும் வட்டாரப் பள்ளிகள் அமைக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்துக்குள் இருக்கிற மாணவ—மாணவிகள் அங்கே இருக்கிற பள்ளியில்தான் சேர வேண்டும். அந்தப் பள்ளி, ஏழை— பணக்காரர் வித்தியாசமில்லாமல் எல்லோரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். இப்படியிருந்தால் ஓர் ஒழுங்கு இருக்கும். தராதரம் பார்க்க வேண்டிய அவசியம் இராது. சமுதாய ஏற்றத் தாழ்வு குறையும்...''

''அது ஒருநாளும் நடக்காது!'' என்றான் விவேக் உறுதியாக. ''அது மட்டுமல்ல. தமக்கு வேண்டியதைத் தேர்ந்தெடுக்க மக்களுக்கு வசதி இல்லை என்றால் அது ஜனநாயகமாகாது.''

''கிராமங்களில் படிக்கிற குழந்தைகளுக்கு நீ சொல்கிற மாதிரி பள்ளிக்கூடத்தைத் தேர்ந்தெடுக்க என்ன வசதி வாய்ப்பு இருக்கிறது? இருப்பது ஒரே ஒரு பள்ளி. அதுவும் மோசம்.''

''அதனால் தான் எங்கள் ஆசிரியர் நாங்களெல்லாம் அதிர்ஷ்டசாலிகள் என்று சொன்னார்!'' என்றான் விவேக்.

''நகரங்களிலும் பல பள்ளிகள் மோசம்தான்'' என்றாள் ரஞ்சிதா. ''அம்மா, நீ ஏன் வாசல் அறையில் ஒரு நர்சரிபள்ளி ஆரம்பிக்கக் கூடாது? என் சிநேகிதியின் அம்மா கூட ஆரம்பித்திருக்கிறாள்!''

அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்
அடுத்த வாரம்



சந்தேக விளக்கம்

ஒருசில வாசகர்களின் சந்தேகங்களையும் அவற்றுக்கு விளக்கங்களையும் பார்க்கலாமே!

"வெறுமனே பி. ஏ., பி. எஸ்ஸி என்று படித்து என்ன பிரயோஜனம்? உடனே வேலையா கிடைக்கிறது?" என்று அங்கலாய்க்கிறார் அம்பத்தூர் ராமமூர்த்தி.

இவர் அங்கலாய்ப்பில் நியாயம் இருக்கிறது. ஆனாலும் இன்று எல்லாப் பட்டதாரிகளும் வேலை இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொல்ல முடியாதே! படிக்கும் போதோ, படித்தவுடனே, பாங்க் தேர்வுகள் எழுதலாம், ஸ்டாஃப் செலக்ஷன் கமிஷன், ரயில்வே சர்வீஸ் கமிஷன், பப்ளிக் சர்வீஸ் கமிஷன் போன்ற தேர்வுகள் எழுதலாம். இல்லை, மேலே படிக்கலாம். தவிர டைப் ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் கற்றுக் கொண்டால் நல்ல எதிர்காலம் உண்டே!

ஏக கிராக்கி

திருவண்ணாமலை அன்பரசுக்கு இன்னொரு சந்தேகம்.

"பிளஸ் டூ'வில் கணக்கு படிக்கா விட்டால் பி.காம். ஸீட் கிடைக்காதா?"

பி. காம். சேர கணிதம் படித்திருக்க வேண்டும் என்று பல்கலைக் கழக விதி ஏதும் கிடையாது. பி.காம். பட்டப் படிப்புக்குள்ள ஏக கிராக்கி காரணமாய் ஏற்படும் நெரிசலைத் தவிர்க்க கல்லூரிகளாக ஏற்படுத்திக் கொண்ட ஒன்றுதான் இது. பல்கலைக் கழகங்கள் கூட இது விஷயமாய் ஒன்றும் செய்ய முடியாதாம். ஆனாலும், சில கல்லூரிகளில் கணிதம் படிக்காத மாணவர்களையும் பி. காமில் சேர்த்துக் கொள்கிறார்களாம்.

என்ன செய்வது?

"என் பெண்ணுக்கு மதுரையில் உள்ள எல்லாக் கல்லூரிகளிலும் விண்ணப்பம் போடப் போகிறேன். ஆனாலும் மார்க் குறைவாய்ப் போய், எந்தக் கல்லூரியிலும் இடம் கிடைக்காவிட்டால் என்ன செய்வது?" என்று பயப்படுவதாய்ச்சொல்கிறார் மதுரையைச் சேர்ந்த மாலதியின் அப்பா.

சார்! உங்களாலான வரை முயற்சி செய்தால், மாலதிக்கு எந்தக் கல்லூரியிலாவது நிச்சயம் இடம் கிடைக்கும். அப்படிக் கிடைக்கவில்லையா? கவலைப்பட வேண்டாம். இருக்கிறது தபால் மூலம் படிப்பு. இப்போதுதான் ஏறத்தாழ அத்தனை பட்டப் படிப்புகளையும் தபாலில் சொல்லித் தருகிறார்களே. ஆல் தி பெஸ்ட் மாலதி! (இப்படித்தானே சிநேகிதிகள் மாலதியை அழைப்பார்கள்?)

சட்டம் இல்லை

கேள்வி: 'பிளஸ் 2' படித்தவர்களை பாலிடெக்னிக்குகளில் சேர்த்துக் கொள்வதில்லையாமே? (ஜம்புலிங்கம், அரூர்.)

பதில்: நாங்கள் விசாரித்த வரை, பிளஸ் 2 மாணவர்களை பாலிடெக்னிக்கில் சேர்த்துக்கொள்ளக் கூடாது என்று எந்தச் சட்டமும் இல்லை. ஆனாலும் +2 படிப்பு ஒரு கூடுதல் தகுதியாய்க் கணக்கிடப் படமாட்டாது. +2முடித்து விட்டு பாலிடெக்னிக்குக்கு விண்ணப்பித்தாலும் பத்தாம் வகுப்பு மார்க் அடிப்படையில் தான் விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்.

காந்தி கிராமம்

மாணவர் கணேஷ் காந்தி கிராம பல்கலைக்கழகம் பற்றிக் கேட்டிருக்கிறார் சென்னையிலிருந்து. மதுரை மாவட்டம், காந்தி கிராமத்தில் (பின் கோடு624 302). அமைந்துள்ள கிராமிய பல்கலைக் கழகம் 56-ல் ஆரம்பிக்கப்பட்டது. அங்கே பட்ட, மேல்பட்ட மற்றும் ஆராய்ச்சி படிப்புகள் அளிக்கப்படுகின்றன. பி. ஏ. பி. எஸ்ஸி (கிராமச் சேவை) மற்றும் பி.எஸ்ஸி. (ஹோம் சயன்ஸ் – பெண்களுக்கு) இவை 3 வருடம். மேலும் ஓராண்டு சுகாதார இன்ஸ்பெக்டருக்கான பயிற்சியும் அளிக்கப் படுகிறது. கல்வித்தகுதி: பிளஸ் 2. மேலும் விவரம் தேவையெனில் காந்தி கிராமம் பல்கலைக் கழகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

—எஸ். சந்திரமௌலி

○ காந்தி கிராமம்





சிரிக்கத் தெரிந்தவர்

மறைந்த செட்டி நாட்டு அரசர் ராஜா ஸர் முத்தையா செட்டியார் பற்றி அவர் தந்தையார் காலத்திலிருந்தே அந்தரங்க காரியதரிசியாகவும் குடும்ப நண்பராகவும் விளங்கிவரும் திரு. வைத்தியசுப்பிரமணிய அய்யர் கூறுகிறார்:

பிரஸிடென்ஸி கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்ற பிறகு தமது குல தர்மப்படி லேவாதேவிபழக பர்மாவுக்குப் போனார். தமது இருபத்தி நாலாவது வயதில் சென்னை கார்ப்பரேஷன் பிரசிடெண்ட் ஆனார். 33–34–ம் ஆண்டில் முதல் மேயராகி அடுத்த ஆண்டுக்கு மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

யாருக்கும் எளிதில் கிட்டாத நைட் ஹுட் பட்டத்தை 1941–ல் இங்கிலாந்து அரசர் இவருக்கு வழங்கினார்.

கல்வித்துறையில் நம் தேசம் பிற நாடுகளைப் போல் முன்னணியில் நிற்க உதவ வேண்டும் என்ற பேரார்வத்துடன் ராஜாசர் அண்ணாமலை செட்டியார் ஆரம்பித்து வைத்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அவர் காலத்துக்குப் பின் சிறப்பான முறையில் நிர்வகித்து வந்தார்.

பண்பாளர்:

புகழ், பட்டம், பதவி, பணம் எல்லாம் அவரிடம் இருந்தன. இத்தனைக்கும் மேலாகப் பண்பாடு இருந்தது. அதுதான் அவர் பெருமையைச் சிகரத்துக்கு உயர்த்தியது. எடின்பரோ கோமகன் ஆயினும் சரி, சாதாரண சிப்பந்தியானாலும் சரி, ஒரே மாதிரி பழகுவார். யாருக்கு எந்தக் குறை இருப்பினும் தீர்த்து வைபார்.

ஒரு சமயம் நான் கண் சிகிச்சைப் பெற்று வந்த போது அவரும் உடல்நலமின்றி இருந்தார். மாடிப்படி ஏறக் கூடாது என்று அவருக்கு டாக்டர்கள் உத்தரவு. ஆயினும் நாற்காலியில் அமர்ந்து நாலு பேர் தூக்கிவர என்னை வந்து பார்த்தார். ''ராஜா! உடம்பை இப்படி சிரமப்படுத்திக் கொள்ளலாமா? இப்போது இங்கு வர என்ன அவசியம் நேர்ந்தது?'' என்றேன். ''எனக்கு உடம்பு தேவலாம்; உன் உடம்பைப் பார்த்துக் கொள்'' என்று சொல்லிப் போகத்தான் வந்தேன்'' என்றார். எனக்கு அதற்குமேல் பேசவே நா எழவில்லை!

குறைவாகச் சாப்பிடுவார். ஆனால் விருந்தினரை நிறைவாக உபசரிப்பார். கார் வரை சென்று வணங்கி விடை கொடுத்து அனுப்புவதை வழக்கமாகக்கொண்டிருந்தார்.

வள்ளல்:

அள்ளிக் கொடுத்த வள்ளல். நன்கொடையாக ஏராளமாய் தான தருமங்கள் செய்தவர், ஒரே ஒரு வேண்டுகோள் விடுப்பார்: ''இதை விளம்பரப்படுத்தாதீர்கள்!'' சிருங்கேரி பெரியவர் இவருக்கு ''தர்ம வித்யாபிவர்த்தன'' என்ற சிறப்புப் பட்டத்தை மிகப் பொருத்தமாக அளித்து கௌரவித்தார். வாடிகன் சென்று போப் ஜான்பால் அவர்களையும் சந்தித்து ஆசி பெற்றவர்.

ஜஸ்டிஸ் கட்சியினரானாலும் அந்நாளில் எல்லாக் கட்சியினராலும் விரும்பப் பட்டவர், ராஜா. தமிழகச் சட்டமன்றத்தில் பல ஆண்டுகள் இருந்து அமைச்சராகவும் எதிர்க் கட்சித் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

தமிழிசைக்காகத் தகப்பனார் ஆரம்பித்து வைத்த நற்பணிகளைத் தொடர்ந்து செவ்வனே நடத்தினார்.

தொழிலதிபர்:

பரம்பரை மரபுப்படி வாழ்க்கையை லேவாதேவியில் தொடங்கினாலும் நவீன யுகத்துக்கு ஏற்ப தமிழகத்தின் தொழில் வளப்பெருக்கத்துக்கு ஏராளமாய்ச்செய்தார் ராஜா சர் முத்தையா செட்டியார். இன்று முன்னணியில் உள்ள பல பெரிய நிறுவனங்களின் வளர்ச்சிக்குக் காரணமாய் இருந்திருக்கிறார். பல தொழில் வர்த்தக சபைகளின்தலைவராக சிறப்புப் பணி ஆற்றியுள்ளார்.


சதா சிரித்த முகமாக இருந்தார் ராஜா. அவர் சிரிக்காத சமயம் ஒன்று உண்டென்றால் புகைப்படத்துக்குப் போஸ் கொடுத்த போதுதான்! அந்த கலகலப்பான பேச்சையும் சிரிப்பையும் என்று கேட்போம் இனி?

பேட்டி: சிக்கி

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600032. (Phone: 431543)

Assistant Editor: P.S. Mani
Editor: K. Rajendran

உலகிற்குக் காட்டுங்கள், உண்மையான வெண்மை என்ன என்பதை



உன்னதம்...உன்னதம்...
வெண்மையிலே
அனைத்திலும் உன்னதம்!

உங்களுக்கு காட்டவும் டெட்டில் உண்டு ஏராளம். இதன் புதிய உறை—கண்ணைக் கவரும். திறந்து பாருங்கள் ஆச்சரிய மளிக்கும் இதன் புத்தம்புது மணம். இக்கட்டியில் அடங்கி யுள்ளது அதிக வெண்மைக்கான சக்தி.

நீங்கள் பாருங்கள்... காட்டுங்கள் உலகிற்கு
டெட் தரும் வெண்மையை... உண்மையான வெண்மையை.

Shilpi DM 9A/84 Tam.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka